மதுரைத் தமிழ்ச்சங்கம் ★ THE MADURA TAMIL SANGAM ★

உ

திருச்சிற்றம்பலம்.

வேலுமயிலுந் துணை.

# நெட்டூர்ப்புராணம்.

இது

சிந்துபூந்துறைத் தக்ஷிணாமூர்த்தி ஆச்சிரம

மடாதிபதியாகிய

ஸ்ரீலஸ்ரீ

M. வேதநாயகசுவாமியவர்கள்

விரும்பிய வண்ணம்,

தச்சநல்லூர்

ம-ா-ா-ஸ்ரீ, ரயிட்டர் பாலுநாயுடு அவர்களின்

கனிஷ்ட புத்திரரும்,

சிந்துபூந்துறை வாசரும், பென்சன் போலீஸ் இன்ஸ்பெக்டரும்,

தற்காலம் திருச்செந்தூரில் நியாயவாதியா யிருப்பவருமாகிய

கவிச்சக்கிரவர்த்தி

B. B. நாராயணசுவாமிநாயுடு

இயற்றி,

---

சென்னபட்டணம்

சைவவித்தியாநுபாலன யந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

விலை அணா ௧௨.

1914.

நூல் அன்பளிப்பு

தமிழக வேளாண்மைத் துறை

அமைச்சர் மாண்புமிகு

**கா. காளிமுத்து, எம்.ஏ.,**

MADURA TAMIL SANGAM

# சிறப்புப்பாயிரம்.

## திருச்செந்தூர்

அஷ்டாவதானம்

பிரம்மஸ்ரீ

## மகாதேவ ஐயரவர்க ளியற்றியது.

உலகம்வினைப் பயன்படியே சீவருண வாதார வுருவென் றுய்ந்தோன்
கலகம்விளை விழிமடவார் சொல்லிலமை யாதமனக் கவினும் வாய்ந்தோன்
றிலகம்விதா வறிவருக்கென் றேவருமே செப்புமுறை சீரு மேய்ந்தோ
னிலகம்விடை யான்மான்மற் றெம்மதமுந் தெரிந்துவகைக் கிருப்பாய் நின்
[றோன். ௧

மிக்கபுகழ் மயனகரப் பாலுநா யுடுதவத்தால் விளங்க வந்தோன்
றக்கவர்க ளுரைநாரா யணசாமி சிந்துபூந் துறையான் சந்த
வக்கவிஞர் போன்பன் பிறர்க்குறுதி யுதவிபுரி யகத்தன் செந்தூர்
புக்கருமை யறுமுகவன் கோபுரத்தின் றுதிபுகன்றோன் புலமை யாளன். ௨

குருமுகமா யாவருக்குஞ் சொலுமரிய தென்முகத்தேக் குறிப்பைப் பாவி
லொருமுகமாய் மனம்பதித்துப் பாடினே னென்டோரின் மகிமை யோர்ந்து
கருமுகமா ராஞான முபதேசம் பத்திநடை புனைவு காட்டித்
திருமுகமா மப்பரா னந்தனது துதிச்சந்தஞ் சிறக்க வைத்து. ௩

முன்னடையு மிக்காலத் தியலுமரு வழியாக மொழிபு ராண
மன்னகரத் தவர்க்கன்றி யாவருக்கு மகமகிழ வமைத்தான் கொண்ட
லென்னவரு கைமாறு விரும்பாத சிறப்புறுவா னிலக்க மிக்க
நன்னயமொய் குருவார்த்தை தவறாத மகிமையிது நவிலி னம்மா. ௪

அருமையுள வானமா மலைச்சீயர் குலக்குருவா மமைந்த சொற்சொல்
பெருமைபெறு வேதநா யகன்ஞான குருவாகும் பெட்பா லின்னே
ரொருமைமொழி யாரிவரைத் தெய்வமெனக் கருத்துடையா னுரைத்த பாட
லிருமைதரு மாகமத்தின் மொழிபெயர்த்த விவன்கவிக ளிசைக்குஞ் சான்
[றே. ௫

## வே று.

குளத்தைப் போன்மொழி மெய்மனக் கூறதே
வளத்தைக் கூறு வழக்கினு நற்றயை
யுளத்தைப் பேசின னுண்மை யுரைக்குங்காற்
சளத்தைச் சிவ ரடையச் சகித்திடான். ௬

பெய்யுஞ் சொல்லினுஞ் சொல்விக்கப் பேசினு
நொய்யும் பொய்மையி லாதுறு நோன்பினன்
கையுந் தெய்வக் கருத்து மொருமையாய்ச்
செய்யுஞ் செய்கையுஞ் சீவர்க் குதவியே. எ

வில்லி சைத்து விளங்கு கவிகளாற்
சொல்லி னிற்பொரு ளிற்சுவை தோன்றிட
வில்லி னைத்துறக் கச்செய்த வெண்டவ
னல்லி சைக்கண் ணசைகொண் மனத்தினன். அ

பெரிய னுமப்ப ரானந்தன் பேரினை
விரிய நானில மீதி லுரைத்துளா
னுரிய னுக வுலகி லுயர்ந்தமை
யரிய னுத னகக்கருத் தாகுமால். கூ

நல்ல நூலை நவின்றுல கிற்றந்தா
னில்ல னார்கிளை யென்றும் பெருமையொ
டொல்ல நீள்பல வூழிமெய் வாழ்வுற
வெல்ல ருவடி வேலரு ளீயுமே. க0

---

இந்நூலாசிரியர்
பெரியதாயாரின் புத்திரராகிய
வித்துவான் மேலப்பாவூர்
பென்சன்போலீஸ் ஏட்கன்ஸ்டேபிள்

## கோபாலநாயுடு அவர்கள்

இயற்றியது.

---

## எழுசீரடி விருத்தம்.

திருமரு மான்சேய் விரும்புவ தாகச்
சித்திர நதிப்புனல் பாய்ந்து
பெருமைசேர் நெட்டூ ரெனுநகர் தனக்குப்
பெரியவர் வேண்டுகோட் படியே
யொருதனிப் புராண நவீனமாய்த் தமிழி
லுணற்றின னுலகெலா மதிக்க
நருண்மலி சிந்து பூந்துறைப் பதிநா
ராயண சாமிநா யகனே. க

விருதுபட்டியில் வசிக்கும்
மேலப்பாவூர்
ம-ா-ா-ஸ்ரீ
## பா. மு. நாராயணசுவாமி நாயுடு அவர்கள்
## இயற்றியது.

கலக்கமுற் றுழலு மாந்தர்மெய்க் களிப்பாங் கதிபெறற் குரியது முலகிற்
றுலக்சமாம் புராண மெவற்றினு முயர்வாந் தூய்மையோ டகம்புற மான
விலக்கண நிறைவை யிசைத்து நிட்டூர மில்லதுங் காண்டமூன் றதனு
லலக்கணற் றொளிர்நெட் டேர்ப்புரா ணத்தி லமைந்தநன் மான்மிய மம்மா. க

பிரித்தில ணிந்நூற் சிறப்பினை யோர்நா பேசிட லாகுமோ சேடன்
விரித்திசைத் ததுபோல் விளம்பினன் ஞான வித்தகன் கௌரவ குலத்தோன்
புரித்திடு தவமே யுருவுகொள் பாலுப் புனிதவேள் புதல்வனெப் புகழ்க்கு
முரித்திசை நாரா யணசுவா மிப்பே ருற்றநற் றமிழ்க்கட லோனே. உ

---

திருநெல்வேலி, வண்ணச் சரபம்
ஸ்ரீலஸ்ரீ
தண்டபாணி சுவாமிகளின் பாதசேகரரும்
விருதுபட்டி க்ஷத்திரிய வித்தியாசாலை ஹைஸ்கூல்
தமிழ்ப் பண்டிதருமான
# சந்தப்புலி
## பா. மு. பார்த்தசாரதிநாயுடு அவர்கள்
இயற்றியது.

சந்தத்தாழிசை
குழிப்பு

தத்தத்தன தானுதன தானத்தன தனனு.

அத்தத்தினி லேவேல்கொளு மாறக்கர ணடியார்
அற்பிற்றிகழ் சேயோனுறை யாதித்தல மானுர்
நித்தப்புலி யூர்நேரிசை நீடிப்பொலி துகடீர்
நிட்டைப்புரி மாமான்மிய நேயத்தொடு தமிழே

நத்தப்பெறு பாவாலுயர் நாகத்தவ ரமுதா
நட்டுச்சொலி ஞனேகவி நாலுக்கொரு முகிலே
சத்தச்சுர மானூர்விழை சாயற்பெறு பவனேர்
சட்டத்திறை நாராயண சாமிப்பெய ரினனே. க

நேரிசை வெண்பா.

நெட்டேர்ப் புராண நியமத் தொடுமுரைத்தான்
மட்டேர் வளமயனூர் வந்துதித்தோன்—நிட்டேரத்
தக்கநா வல்லோர் தமையடக்க லாற்புகழே
மிக்கநா ராயணசா மி. உ

# சுவாமிநாதபண்டிதர்

மாணாக்கருள் ஒருவரும்,
செந்தில்வேலர் சந்நிதானத்தில் தேவாரமுதலிய
அருட்பாக்களை ஓதுபவரும், வித்தைவிநோதரும்,
புராணப்பிரசாரகரும்,
சைவவைணவ கதாப்பிரசங்க ரத்நாகரமுமாகிய
கவிப்புலவர்

## விநாயகவோதுவார்

இயற்றியது.

விருத்தப்பா.

திருமருவு பலவளமுஞ் செறிந்தோங்கித் தேயமெலாந் தன்பால் வந்து
மருமருவு கனிமுதல வான்பொருளு மணிமுதல நிதிப்பொருளும் வைகளு
தருமருவு கொடைசமழ்ப்பத் தாம்பெற்றுக் களிகூர்ந்து சார்த லாலே [றுந்
திருமருவு துறக்கவிண்ணை நக்குமிகுந் தச்சநல்லூர் தேயத் தோங்கும். க

இந்தநல்லூர் தனிலுதித்தே யெல்லோரு மெந்நாளு மிறும்பூ தெய்த
வந்தமிலில் லறமுதல செய்பாலு நாயுடுவா மவன்ற னேன்பா
லிந்தவுல கதனிலுறு மதனனென விவன்புதல்வர் யாவ ருள்ளுஞ்
சந்தமிகு குணசாலி யொருதனயன் றானுதித்தான் சகத்தின் மீதே. உ

இளமதிபோ லிவன்வளரு மேல்வைதனி லின்பமிகு சந்தை தாயு
முளமகிழ முறவினரு முடங்கியைந்து பெயர்சூட்டி யோசன் றன்பால்
வளமுதவி வளமுதவு வித்தையினை வரப்பண்ணி வாழு நாளிற்
றளமருவு பொலிசின்சிப் பெற்றருத்தி யோகமதிற் சார்ந்தா னன்றே. ௩

அவ்வுத்தி யோகமுறை யதிசயிப்ப நடாத்தியபே ரறிவு கண்டோ
ரெவ்வுத்தி யோகருநன் றிவன்றிறமை பாராட்டி யின்ப மிக்கார்
செவ்வுத்தி யோகமதிற் றேர்ந்தகவண் மெண்டுமிவன் செவ்வி நோக்கிக்
கவ்வுத்தி யோகமுறு மிவன்றனக்குப் பெண்சனைமுன் காட்டிற் றன்றே. ௪

காட்டமகிழ் பூத்துமிகு களிப்போடு கவண்மெண்டை வக்கீ லாகக்
கேட்டலுமே யுதவுதலுங் கிளர்செந்திற் பதிவந்து கேடி லாத
நாட்டமுடன் பலவழக்கை நாவலிமை யொடுபேசி நயப்பச் செய்து
கோட்டமிலாப் பெருவாழ்விற் குலவுமிவன் பெருந்தகைய கொள்கை கேண்மோ.

இல்லையெனுஞ் சொல்லறியா னீகையென்று முண்மையினு லின்னு வன்மைச்
சில்லையெனுஞ் சொல்லறியான் றீஞ்சொலென்று முண்மையினாற் றிருத்தி செய்த
றொல்லையெனுஞ் சொல்லறியான் சூழ்ந்துதுணை புரிதலினாற் றூய்மை பேசல்
வல்லையெனுஞ் சொல்லறியான் வாய்மைதினம் வழங்குதலான் மகிழ்ந்து மாதோ. ௬

கற்றவரை வளைத்தவர்முன் கழகமிரீஇ யாய்ந்ததமிழ்க் காதன் மிக்குக்
கற்றவரை வளைத்தவர்முன் கற்றவெலாங் கூட்டுண்டு கலிங்கக் காவிக்
கற்றவரை வளைத்தவர்முன் காதலொடு போற்றிசெயுங் கருத்தான் மிக்குக்
கற்றவரை வளைத்தவர்முன் சூழ்சிந்து பூந்துறையிற் களித்து வாழ்வோன். ௭

திருநாரா யணனடியைத் தினந்தோறுஞ் சிந்தித்துட் டீமை சேரா
வொருநாரா யணசாமி யென்றோது முவன்றமிழி லுழுவல் கொண்டு
பெருநாரா யணிக்கல்விப் பித்துடையா ரொடுபயின்று பினுநா றேர்ந்து
மருநாரா மலர்போலு மதிப்பரிய சொன்மலரான் மாலை யாத்தான். ௮

அன்னவன்செய் தமிழ்மாலை பலப்பலவா மவற்றையெலா மறிந்தோர் சாற்ற
முன்னமருஞ் செய்தவத்தான் மூதுணர்வு தோன்றுதலான் முற்று நீத்து
நன்னயமார் துறவடைந்து நளிர்சிந்து பூந்துறையி னன்மைத் தாகச்
சின்னயமார்* முத்திரைக்கைத் தெக்கிணு மூர்த்தியாச் சிரமஞ் செய்தே. ௯

அம்மூர்த்தி யடிமலரை யகமலராற் பூசனைசெய் தருளை வாங்கி
யெம்மூர்த்த மியைந்தவரு மினிதுவக்க வேகமென விருக்கு மந்தச்
செம்மூர்த்தி யெனும்வேத நாயகனுஞ் சாமியவை தெரியக் கேட்டு
நன்மூர்த்தங் கொளுநாரா யணசாமி யெனும்பெரிய நாவ லோன்பால். ௧௦

செந்தினகர்த் திருக்குமரன் றிருவடியைத் திகழன்பிற் சிந்தை வைத்துச்
செந்தினக ரற்பொருது திகழப்ப ரானந்தன் சீர்த்தி பொத்து
முந்துகதை முழுதுமொரு நூலாக முற்றிடுமா மொழிந்தா னைச்
செந்தமிழ்தேர் புலவனவன் செவிசாய்த்துச் சென்னிவைத்துச் செய்வ லென்னு.

செய்யுளிய லிதன்கண்ணே தெரித்துநனி செந்நாவின் வன்மை காட்டி
மையகலும் பொருள்வளமுஞ் சொல்வளமும் வனப்புடனே வயங்க நாட்டிப்
பொய்யகலும் புலவரிடம் பொன்றுத புளகமுடன் மகிழ்வை நீட்டிச்
செய்யவயற் றிருநெட்டூர்ப் புராணமெனத் தீம்பாவாற் செப்பி னனே. ௧௨

* சிந்நயம் எனற்பாலது எதுகைநோக்கிச் சின்னயமெனத் திரிக்கப்பட்டது.

# சுவாமிநாதபண்டிதர்

மாணாக்கருள் ஒருவரும்,
சைவ மகாசமாசத்தின் அத்தியக்ஷரும்,
சைவப்பிரசாரகரும்,
சென்னை ஐக்கியநாணயச்சங்க ரிஜிஸ்தரார் ஆபீசு
அக்கவுண்டண்டு உத்தியோகத்தருமாகிய
வித்துவான்

## வா. தி. கோவிந்தராசுமுதலியார்

இயற்றியது.

---

### ஆசிரியப்பா.

உலகம் யாவுந் திலகமா மென்ன
நிலவுஞ் செல்வமு நிறையுந் தச்ச
நல்லூர்ப் பதிவயிற் சொல்லூர் தரவாழ்
செல்லூர் கவிகைத் திருத்தகு பாலு
நாயுடு வுஞற்றிய நற்றவத் துதித்தோன்
பாயநற் கல்விப் பரவையைக் கடந்தோன்
மேவலர் தமக்கு மாவலிற் றரீஇ
யேவல ரென்ன வினியன புரிவோன்
பொறையு நிறையுங் கறையக லருளு
நிறையு மன்புங் குறைவறக் கொண்டோன்
பச்சைப் பவளப் பானிற வண்ணனை
நச்சித் திருவடி நயக்குமா ரறிஞன்
கற்றவர் தமக்கொரு நற்றுசாத் துணைவன்
மற்றவர் தமக்கு மதிதரு மாசான்
நற்றவர் குழுவை யுற்றுற மகிழ்வோன்
கொற்றவர் மதிக்கக் குலவிய கோமான்
சொற்றிறம் பாத துரிசறு சுகுணன்
நற்றிற மெல்லா நாடுபு புரிவோன்
அற்றமி ஞரா யணனெனு மறிஞன்
சொற்றிற மிகுமா கற்றவ னிவன்பால்,
ஆவிக் கிடையூ றனைத்து மியற்றுங்
காவிக் குடையாக் காவிக் குடையோன்
பிறவற மனைத்தும் பெட்புற வடங்கலிற்
றுறவற மேயுத் துங்கமா மென்ன

வுறவாக் கொண்டுமன் னுள்ளத் தென்று
மறவா வாய்மை மாண்பார் தெருளன்
விருப்பில னெனினும் வேணவா வுடனே
குருப்பணி புரியுங் கொள்கையிற் றலையன்
பேய்ந்தவ னிவன்றனக் கிணைசொலல் யாங்ஙனம்
வாய்ந்தமர் குசைநுதி மதியின னாகும்
வேதநா யகனென விளம்புமச் சாமி
மாதவன் றன்குரு வளமலி சரிதையை
மேதினி விளங்க விரித்தொரு நூலா
வோதுநி யென்ன வுவகையிற் றிளைத்து
மட்டேர் சோலை வளனொடு நிலவு
நெட்டேர்ப் புராண மெனபெயர் நிறீஇக்
கட்டின னொருநூல் கற்றவ ரெல்லா
மெட்டினை யளவு மிலைகுறை யெனவே.

---

# சுவாமிநாதபண்டிதர்

மாணாக்கருள் ஒருவரும்
சென்னைப் புரசை இந்துமத பாலிகா
தருமபாடசாலைத் தமிழ்ப்பண்டிதருமாகிய
பிரசங்காமிருதம்
**பாலூர். வேலுதேசிகர்**
இயற்றியது.

---

வெண்பா.

பொற்புரத்தார் போற்றப் புராரி யளித்ததிருப்
பொற்புரத்தார் மேற்பத்தி புந்திவைத்துச்—சிற்பதத்தை
யத்துவித மாக வணைந்தப்ப ரானந்தன்
மெத்துகதை பாவில் விரைந்து. க

இவ்வுலகிற் காட்டுகென வேட்டணைக ளில்லாதான்
றவ்வலியிற் பாட்டுரைக்குந் தூய்மையான்—றெவ்வலியைப்
பாற்றிமிளி ரற்புதத்தான் பாவேந்தர்க் கற்புதத்தான்
காற்றுமுனை யிற்புகுத்தான் காண். உ

பாவனையான் மிக்கபரம் பார்வேத நாயகனுங்
காவனையான் சொற்செய்யக் கார்சூழ்ந்து—மாவணிபார்
பொன்சொரியுந் தச்சநல்லூர்ப் புங்கவனற் பாலுவெனு
மின்சொரியு மச்சுடைய வேள். ௩

உம்மைப் பெருந்தவத்தி னூக்கமொடு தான்புரிந்த
விம்மைப் பெருமறத்தி னென்றுமே—மும்மைப்
பலன்பெறவே நற்றினத்திற் பார்திகழ நன்னூல்
வலன்பெறவே பெற்றபுதல் வன். ௪

நாரா யணசாமி நானிலத்தோர் வைப்பனையான்
காரா மெனுங்கொடையான் காதலர்க்குச்—சீராரும்
பாரா ரமிர்தனையான் பண்பிலார்க் கென்ஞான்றுந்
தீரா விடமனையான் றேர்ந்து. ௫

சங்கர லிங்கன் றனதுமனப் பத்தியினாற்
செங்கரந் தன்னிற் றிருத்திவைத்த—துங்கமுறு
கைம்முறையிற் சொற்றபடி காதலிக்கு நூலொன்று
மெய்ம்முறையிற் சொற்றிடவே வேட்டு. ௬

பத்தழகுங் கொள்ளப் பகர்குற்ற மெய்தாம
லெத்தலத்தி னுள்ளவரு மின்பெய்தப்—பத்தியொடு
பெட்டோர்ப் புராதனரும் பேசநனி செய்தளித்தா
னெட்டோர்ப் புராணமதை நேர். ௭

## சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

4118

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வேலுமயிலுந் துணை.

# * நெட்டூர்ப்புராணம்.

## காப்பு.

பொன்னை யுற்ற புவிக்கட் புராணத்தை
யென்ன கத்தி லிலகி யிசைத்திட
மின்னி லைத்த விநாயகன் பொற்பதஞ்
சென்னி வைத்தன்பு செய்திடு வாமரோ.

## பாயிரம்.

### வாழ்த்து.

கடம்பணி புயங்கள் வாழ்க கருணைநோக் கெழில்வேல் வாழ்க
நடம்பெறு மஞ்ஞை வாழ்க நாரிய ரிருவர் வாழ்க
திடம்புனை சேவல் வாழ்க செய்யகோல் வாழ்க வாழ்க
தடம்படு முலக ரப்ப ரானந்தன் றனிச்சீர் வாழ்க. க

### நூற்பயன்.

தேவர்சிறை விடுத்தருளுங் கந்தன் வாழுந் திருநெட்டூர்க் கதை
கேட்போர் செப்பு வோர்கள், பாவவினை யறுத்திடுவர் செல்வஞ்
சேர்வர் பகையடங்க வென்றிடுவர் பலபேர் போற்றப், பூவகில
மாசாள்வ ரறிவின் மிக்க புதல்வர்களைப் பெறுவர்திடம் பொருந்தி
வாழ்வர், காவமர்நற் பதவின்பஞ் சார்வர் செவ்வேள் கழலிணையி
லொன்றிமிகக் களித்து வாழ்வார். உ

* நெட்டூர் என்பது இக்காலத்து நிட்டைபுரியென வழங்குகின்றது.

## சிவபெருமான்.

வானாதி பூதங்க ளாந்தாகி யைந்திற்கும் வலியாகி யுயிரூடிருந், தானாத வதுவாகி யதுசோதி யறிகின்ற வறிவாகி விரிவாகினோ, னானாதி யுடலென்று மகமென்பர் காணாத வொளியான வொருசங் கரன், றானாதி வேதங்கள் சொலநின்ற பொருளென்பர் சனனந்த விர்ப்பார்களே. ௩

## உமாதேவி.

மஞ்சினைப் பழித்த குழன்மட வார்பான் மனஞ்செல வொழித்த பின் மதித்தே, நஞ்சினைத் தடுத்த களத்தனே யெனவுண் ணூடுவார் கழலொலி நசையா, னெஞ்சினைச் செலுத்த விரும்புறும் பதத்த னினைந்துள முருகிட நடக்கும், பஞ்சினைப் பொறுத்த பதச்சிலம் பொலிசெய் பாவையாட் கன்புசெய் திடுவாம். ௪

## நிருத்தனார்.

ஏடு மாமலர்க் கண்கொண் டெட்டல
னீடு தாரணி தந்தவ னின்சிரம்
பீடு தார்பொரப் பேயினோ டமைத்தே
யாடு வானல் லடிமலர் போற்றுவாம். ௫

## அருள்தருவடிவம்மை.

ஆர்கலிகொ ளரும்புவியின் வானவரின் மானவரி லாரா னாலுங், கார்தருமென் குழலொருடுத்துப் பாதம்வரை நினைக்கவல்ல கனிவி னார்க்குத், தேர்வரிய குற்றமுமே குணமாக்கி முறையேற்றுத் திகழு நல்லாள், சீர்செயரு டருவடிவ வம்மைபத நினைந்துபவந் தீர்ந்து வாழ்வாம். ௬

## முப்பிடாரியம்மை.

அப்பி டாரியத் தின்மிகு நீள்புரத்
தொப்பி டாத வுயர்வின ளாயுயிர்ச்
செப்பி டாணவந் தீர்த்தருண் மும்முக
முப்பி டாரி மலர்க்கழன் முன்னுவாம். ௭

---

௩. சோதி - ஞானம். ௭. அப்பு இடு ஆரியத்தின் மிகு - நீர்தருகின்ற வளத்தால் மிக்க.

## எட்டுக்காளிகள்.

உண்மை யாகு முலகிதன் றென்னினுந்
தண்மை யாயக டந்துள தன்மையாற்
கண்ம ருதுயிர் காக்குந் தகைமைசா
லெண்மர் காளிக ளென்னகத் தார்வரே. ௮

## தக்ஷிணாமூர்த்தி.

உண்டி கடிந்து சினந்தவிர்ந்தா ரொருநான் முனிவ ருகமறிந்தா, ரண்டி யிருந்த விருத்தர்முன மாலி னிழல்வாய்க் குருவடிவங், கொண்டி னியைந்தே யுணருமொழி குறிப்பா லுணர்த்துங் குமரவுருக், கண்டி தயத்துக் களிப்படையக் கருதிப் பிடிப்ப னவர் கழலே. ௯

## ஆகபிராமநாயகர்.

பூவிரி நீதி யார்பொரு ளாதிய ரோது நூன்மகர் பூசனு ளாரை வேறுதன் மணவாழ்வேய், நோவதி லாத வாயுண லார்களி நேய மாசக னூல்வழி கோடி டாநடை புகழோடே, வாவிடு வான மாநகர் மீதர சாள றேசிகர் வாயுரை ஞானம் வீடிவை யடியார் பான், மேவிடு மாறு சீரரு ளாகபி ராம நாயகன் மேன்மைகொள் பாத மாமலர் பணிவேனே. ௧௦

## ஆனந்தவிநாயகர்.

வானந் தருசெல் வம்வழங் குவதும்
பானந் துமகப் பலனீ வதுவுஞ்
ஞானந் தருகின் றதுமிந் நகர்வா
றானந் தவிநா யகன்பொன் னடியே. ௧௧

## சுந்தரவிநாயகர்.

அந்தரமு மண்டலமு மிடையூற்றை யகற்றுகென வாய்ந்து போற்றப், பந்தரென வருமுயிர்க ளீடேற வெழிற்கருணை பாலித் தென்றும், வந்தரமங் கையர்நடிக்கு நடமாரு நெட்டேரில் வாழ்வு பெற்ற, சுந்தரவி நாயகன்றன் றுணைமலர்த்தா ளனுதினமுந் தொழுது வாழ்வாம். ௧௨

---

௧௨. பந்தர் - பந்தத்தையுடையவர்.

## சவுந்தரவிநாயகர்.

தொடுமகரச் சலதிவரு மமுதமென வருளொழுகித் தோற்றக் கண்டுங், கடுநுகரத் திரிவிடயஞ் செலுநரையுங் காத்தருளுங் கருணை யானைப், படுமுகரக் களிஞிமிறு பண்பாட மயிலாடும் பண்பின் மிக்க, நெடுநகரச் சவுந்தரவி நாயகன்பொன் னிணைமலர்த்தா ணினைந்து வாழ்வாம். கரு

## கோவிந்தவிநாயகர்.

மாவிந் தமணிச் சடையீ வதுவும்
பூவிந் தைபொறுத் தல்பொருத் துவதும்
பாவிந் தையருக் கருள்பண் பதுவுங்
கோவிந் தவிநா யகர்கூர் குணமே. கசு

## சுப்பிரமணியர்.

மானலம் பிணிக்குந் தவமுறை வாசி மதியரி வழிவிடார் தமத்தே, தானலம் பொறுக்க முயன்றிடு வாருந் தண்டுழா யவனொடு விதியும், பானலஞ் சுரத்த விழிபடா மோனர் தாமுமே பார்க்கவொண் ணதா, னேனலம் புனத்தே சிவப்புற நடந்த விணையடி சென்னிசேர்த் திடுவாம். கரு

## திருமால்.

வார ணத்தினைக் காத்தவன் மாசுரத்
தார ணத்தி லமர்ந்தவ ரந்தணர்
பூரணத்தி னினைவிற் பொருந்திய
கார ணத்திரு மாலைக் கருதுவாம். கசு

## இலக்குமி.

கருமணி நிகர வென்னைக் காத்திடு மிமையை யன்னாள்
பொருமணி மலரில் வென்றி பூவெலாம் புரிய வொன்று
வருமணி யுலகை யெல்லாம் வகுத்திட வமைந்த தொன்றிவ்
விருமணி தரும்பொற் செல்வி யிணையடி மனத்துள் வைப்பாம். கஎ

---

கரு. படு - கள். கசு. மா இந்து அம் மணிச்சடை - சாரூபம். பூவிந்தை - வீரலக்குமி. கரு. பிணிக்கும் - கட்டும். தமம் - சுழுமுனைநாடி. அலம்-வருத்தம். பானல் அஞ்சு உரத்த - நீலோற்பலம் பயப்படத்தக்க வலியுடைய.

## நாமகள்.

மெய்யணி படிக மாலை மின்னுற யாழி னாதம்
வையக முழுது மோசை வழங்குறக் கற்ற நாவிற்
பெய்யரு ளுலகைக் காப்பப் பெண்ணுருக் கொண்ட சோதித்
துய்யவெண் கமலை பாதத் துணைமலர் வழுத்தல் செய்வாம். கஅ

## மயில்.

சீல மார்முனி வோருந் திருந்துமுந்
நூல ரான நுவன்மறை யோர்களு
நீல மானு நிதமும் பாவிடு
கோல மாமயி னல்லடி கூறுவாம். கக

## சண்டேசுரர்.

பெற்றவரி னுன்காத்துப் பெட்புளநற் றெண்டாற்றப் பிறங்கு மண்ணி, னுற்றபல விலிங்கமமைத் துயர்பாலை யதிளுட்டி யுதவி னுன்முன், கற்றவர்கொள் குணமேற்றுங் கடவுளணி மலராதி கருதி யேற்று, மற்றெவரும் பெருப்பேறு கொண்டுமகிழ்ந் தவன்மலர்த் தாள் வணக்கஞ் செய்வாம். உ0

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

மாட திர்க்கும் வலிய வமணரை
யீட ழித்துக் கழுமுனைக் கேறிட
வேடெ திர்க்கவிட் டான்றன் னிருகழற்
றூடு தித்துத் தகவினிற் போற்றுவாம். உக

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

புல்லி யானுரை கொண்டு புணரியி
லல்லி னேரு மமணர் பிணித்திடுங்
கல்லி லேறிக் கரைவரு வான்கழல்
சொல்லி யாரத் துதித்து வணங்குவாம். உஉ

---

உ0. பல - பலவையுடைய. கல் தவர் கொள் குணம் ஏற்றும் - மேருமலை யாகிய வில்லிற்பொருந்திய நாணையேற்றிய; கற்றவர் கொள்குணம் ஏற்றும் - உண்மைநூலைப்படித்தவர் இயைந்தவருட்குணத்தை, அஃதன்றி அட்ட குணத்தை உயர்த்தித்துதிக்கின்ற.

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

கோது தள்ளிக் குணத்துயர் ஞானிக
ளோது முள்ளத் துறையு முமாபதி
தூது செல்லச் சொலுங்கவிச் சுந்தரன்
போது வெல்பதம் புந்தியிற் போற்றுவாம். உ௩

## மாணிக்கவாசகசுவாமிகள்.

சன்ம மற்றுத் தனிநிலை சார்தரக்
கன்ம மொத்துழிக் காணுங் குரவனுத்
தென்மு கத்தவர் சேர வுஞற்றினுன்
றன்ம லர்ப்பதந் தாழ்ந்து நினைகுவாம். உ௪

## ஐயனர்.

இந்த வையத் திருவனக் காவலா
னந்து பூரணை புட்கலை நாயகன்
சிந்தை மாகளி சேர வரனரி
தந்த வையனற் ருளிணை போற்றுவாம். உ௫

## அகத்தியர்.

கோற்கான்மா தூடணனை வெலவந்து குறைகடலிற் கொண்ட பள்ளி, மாற்கான்மா மறைதெரித்துஞ் சிடனெனக் குகனிடத்தில் வந்த தோர்ந்து, பாற்கான்மா வடிவழுக்கப் படர்மலையிற் பசுந்த மிழைப் பகர வேற்று, வேற்கான்மா ஞக்கனென விளங்குகுறு முனிமலர்த்தாள் விழைதல் செய்வாம். உ௬

## வேலாயுதம்.

பையராப் பள்ளி யானும் பங்கயத் தமர்ந்து ளானுந்
துய்யநாக் குழறச் சொல்லுந் துதிக்குள மிரங்கிச் சூரின்
வெய்யபோர்த் திறலை வீட்டி விண்ணவர்க் கருளுஞ் சத்தித்
தெய்வமாப் படையென் னெஞ்சிற் றினமிருந் தேற்றஞ் செய்யும்.

---

உ௪. தனி நிலை - ஏகவத்துவின் றன்மை.

## குழந்தைமுத்தானந்தசுவாமிகள்.

தெள்ளமுதின் சுவைபிறக்கு மொழியுடையார் விழிநஞ்சார் திறக்குஞ் செவ்வாய், மெள்ளவரும் பியநகையார் மயலொழித்து மிகநூலை விழைந்து தேர்ந்துந், தள்ளவரும் பிறவியெனுங் கடனீந்தித் தனிமைபெறத் தக்கோர் ஞானங், கொள்ளவரு குழந்தை முத்தா நந்தனிரு தாட்கமலங் குறித்து வாழ்வாம். உஅ

## அப்பானந்தசுவாமிகள்.

இப்பாரா முகமா யுட்கண் ணேற்றிடா துழலுஞ் சென்ம
வெப்பாரா யிருந்து தீர வீடடை விழைவால் வந்தோர்
செப்பாரா முடியார் பூவோர் தேவரிற் சிந்தித் தேத்து
மப்பாரா னந்தன் செய்ய வடிமலர் முடியிற் கொள்வாம். உகூ

## குரு.

சீத நாண்மலர்த் தேன்சிந்து பூந்துறை
மாதி ருதன் மணிக்கழ லுட்பதி
கோதி லாத குணப்பெரு மாதவ
வேத நாயகன் மெய்ப்பதம் போற்றுவாம். ௩0

## நூல்வழி.

கொங்கர விந்த மீது லவுவெண் கலையா ளன்பன்
பொங்கர வென்பு பூண்டான் புனிதநீ றணியுஞ் சைவன்
செங்கர மஞ்சு மஞ்சுங் கொடையினன் றீர னென்னுஞ்
சங்கர லிங்க நேயன் றருமுறை யினிலீ தாமால். ௩க

## நூல்செய்தற்குக்காரணம்.

தேனகு மலரின் கூட்டச் சிந்துபூந் துறையில் வாழு
மானருள் வடவாற் சோதி மடாலயம் வகுத்த வள்ளன்
மீனலை கடற்பா ரேத்து வேதநா யகனுட் டோன்றிக்
கானமர் கடம்ப னென்னைக் கவித்தொடை வாங்க லுற்றான். ௩உ

ஞானவாக் குரைத்த வேத நாயக குரவ ஞெஞ்ஞை
தானலாற் றெரிந்த வாறுந் தகைமையு மில்லா வென்னு
ஞனவார் குழலி வல்லி நாதனின் றசைப்ப னென்று
லூனவாக் கெனினு நல்ல வுரையென வுவக்கும் பாரே. ௩௩

குலமுதற் குரவன் கல்வி கொடுத்திடுங் குரவன் ஞான
நலவருட் குரவன் செய்ய நாண்மலர்த் தாள்க ணம்பித்
தலைமிசைப் பொறுக்கு மன்பு சார்ந்தன னென்னி லிந்நூ
லுலகமிக் குவக்க வென்று முறுதியும் பயக்கு மாதோ. ௩௪

## நூல்செய்தவிதம்.

சருக்கமிரு பத்தொன்று நதிநாடு நகரமொடு தலனீர் மூர்த்தி,
பெருக்கவதா ரங்குருதர் சனமுபதே சம்முறைவு பேசு மன்றல்,
திருக்குநிட்டை மணி துறவு குருபூர்ணஞ் சித்திபரி பூர்ணங் காட்சி,
வருக்கமுறை தோத்திரமென் றணிதொகுத்து விருத்தத்தால்
வகுக்க லுற்றேன். ௩௫

## அவையடக்கம்.

இகழு வார்களென் றென்னுள மெண்ணிலன்
புகலு வாரிற் பொருந்தின னெங்கையைத்
தகவு சால்புறு மென்றறி வோர்தமுன்
பகரு மாறு பணித்தெழு மாசையால். ௩௬

அழகி தன்றெனி னும்மறைந் தேனவ்வை
பிழைக ளில்லை யொத்தார் பிறர் பெட்பினோர்
பழகி னல்லவை யாமெனப் பண்டுபா
வழியி னன்கு வழங்கிய வாய்மையால். ௩௭

பெருக்கப் பானுரை யோடுண்பர் பெட்பெனத்
தருக்கப் பாலின்றிக் கைக்கொள்வர் சால்புளார்
சுருக்கப் பாவுந் தொகப்பெரும் பாவுட
னிருக்கப் பானு விருக்கும் விளக்கினே. ௩௮

பாயிரம் முற்றுப்பெற்றது.

# சித்திரநதிச்சருக்கம்.

## குலகுருதுதி.

சீர்பெற வெனது மரபுமுன் னவருந் திகழ்ந்திடக் கருணைநோக் கிழைத்துத், தார்பொலி யரசர் மதித்திடு வாழ்க்கை தந்தவ னிந்துவோ டணிசெய், கார்படு சிகரி வானமா மலைக்க லியனிரா மானுசக் குருவின், பார்புகழ் ஞானப் பொன்னடி பாவிப் பகருவ னான்முறை பதித்தே. க

### வேறு.

தங்க நண்புறு வேயிடங் கொண்டுள தகையாற்
பங்க மின்றியே நிற்றலாற் பலவா விருப்பாற்
றிங்க ளுஞ்செறி கொன்றையுஞ் சிகையுறு செயலாற்
சங்க ரன்றனை நிகர்த்தது முத்தலைச் சயிலம். உ

பாலை வைத்திடு நாரமும் பக்கமொன் றிருப்பால்
வேலை யுற்றவர்க் கருங்கனி யளித்திடு வியப்பாற்
சேலை நட்பொடு கொண்டமா விழிபொரு சிறப்பான்
மாலை யொத்ததா லுயர்திரி கூடமா வரையே. ௩

வசைய றும்புகழ் மாறருங் கணக்கினன் மகவா
னிசைகொ ளும்படி தங்கலா விடவனத் திருப்பா
னசைபெ றுங்கமண் டலமுறு நன்மையின் புணர்ப்பாற்
றிசைமு கன்றனை நிகர்த்தது முத்தலைச் சிலம்பு. ௪

### வேறு.

பரிதி வாரியைப் பல்கதி ராற்பிரித்
தரிதி னுகமஞ் சாக்கி யுயிருய்வான்
விரிதி சாமுகம் விட்டு மலைசெலப்
புரிதி யாகத்தின் கால்பொரப் புக்கதே. ரு

---

௩. பாலைவைத்திடு நாரம்—பாற்கடல்; வெண்மை பொருந்திய நீர். வேலையுற்றவர்க்கருங்கனி—வேலைசெய்பவர்க்குப்பலம்; வேலாயுதக்கடவுளுக் குக் கன்னி. மா—இலக்குமி; மாமரம். ௪. மகவான்—தேவேந்திரன்; கன் றோடுகூடியபசு. இடவனம்—பெருமைபொருந்திய அன்னம்; விசாலமான காடு; பரந்த நீர். கமண்டலமுறும்—கமண்டலம்பொருந்தும்; மேகம் பூமியிலு றும்; மேகம் வட்டமிடும்.

தான மாமலை தாக்க வருணதி
மீன வேலையின் மேவ வருணனு
மான மேற்கொடு வாயலைக் கம்பலை
வான மீதெழுந் தார்த்ததை மானுமே. சு

பண்ணை மேகம் பருப்பத மேலுறல்
தண்ணை யேசெய் சலபதி தான்பொர
மண்ணை நீடிய மார்க்கமன் றென்றுவான்
விண்ணை யேவழிக் கொள்ளல் விழைந்ததே. எ

அப்பு மாமழை யம்மலை மீதினில்
வெப்ப மோட விடுத்தல் சினமிற
வொப்பில் வேழ முரமுறு முட்பகை
தப்பி லாது தணித்திடல் போலுமால். அ

வன்மை கொண்டு வழங்கின வம்புபாய்
தன்மை கண்டுந் தணப்பி லருவியைத்
தின்மை யெய்தச் சிறுமைசெய் தார்க்குமுய்
நன்மை செய்வரி னல்கின நாகமே. கூ

கண்டி சைத்த கனிமொழி மாதர்போல்
வண்டி ணக்கு மருமலர் வாரிய
தெண்டி ரைக்கரச் சித்ரந திப்பெயர்
கொண்டி நற்பெருக் கந்தரை கூர்ந்ததே. கO

வழுகிக் கான்புலம் வந்தலைந் துய்ததி
கெழுமித் தெண்டிரை சேரக் கெதிகொளல்
தழுவிப் போன பிரிவின் சலிப்பிறக்
கொழுநற் காண விரையுங் குறிப்பதே. கக

தகையொ டுற்ற தரணி தருநதி
நகைய டுத்த மணிகொடு நண்ணுதல்
மிகைபொ றுத்தகம் மன்னன் வெகுளியின்
பகைத விர்க்கத் திறையிடு பான்மையே. கஉ

கான மார்த்த தடங்கள் கழனிகள்
போன நீத்தம் பொருந்திப் புறப்படல்
தான வாக்கொடு பல்லிடஞ் சார்தவன்
ஞான மாக்குரு நாடுத லொக்குமே. கங

---

கO. மாதர்—விலைமாதர். கொண்டு இநல்பெருக்கம். எனப் பிரிக்க.
கஉ. கம்மன்னன்—வருணன்.

மானி னேர்விழி யார்கண் மறைப்படி
யான வாரமோ டர்ச்சனை செய்மணி
வான மீதில் வருஞ்சுடர் மேற்கதி
ரீன வேகுடைக் காம்பென் றிலகுமால். கச

வானி னெல்லின் வடிவினை மாறதா
யானி கொள்ள வகத்தினிற் காட்டலா
னானி னல்ல வுடம்பி னுயிர்பல
மேனி செய்வினை போன்றதிவ் வெள்ளமே. கரு

மாசி லாத மதிமுகத் தார்கலை
வீசி யேரிதழ் வெண்மைசெய் தேகளி
மூசி யேசுக முற்றச்செய் தன்மையா
லேசி னாயகன் போன்றதிந் நீத்தமே. கசு

தேரை நன்கு திரையினை யம்பினை
வாரை யுந்துறு தும்பிவல் லாரையேர்ச்
சீரை யொன்று தனுவினைச் சேர்தலா
னீரை யொண்கழன் மன்னென னீதியே. கஎ

கால டைத்தல் கதிபெற லூறுதல்
மால கற்றல் மணிகொளல் மாவரைப்
பாலி ருத்தல் பதிநண லானதி
சீல முற்ற தவரிற் றிகழுமே. கஅ

கார்மு கத்திற் கலித்து வருதலாற்
பார்மு கத்தினிற் பல்லுயி ரொற்றலாற்
றூர்மு கத்தர சர்விடு வாளியை
நேர்மு கத்தது நீள்புன லொக்குமே. ககூ

கந்த ரும்புனற் கங்கையி னல்லசு
கந்த ரும்புக வென்று கடுகுவார்
வந்த ரும்பு முலையவர் வாட்கண்சி
வந்த ரும்புடை மாவரம் பேறுவார். உ0

---

கரு. எல்லின்—சூரியனின். கசு. ஏசு இல் நாயகன். கஅ. மா அரைப்பால் இருத்தல்—மிருகங்கள் தவர்க ளரைப்பக்கத்தி லிருத்தல். உ0. கம்—மேகம்.

## வே று.

காமரு புனத்து மோடைக் கழனிக ளிடத்து நாறும்
பூமரு வனத்து நல்ல பொலனுடைச் சோலை தோறுந்
தேமமர் கன்னற் காட்டுந் தெருவினும் வீட்டி னுள்ளுந்
தாமரைத் தடத்து மிந்நீர் தங்குமன் னூணை போன்றே. உக

தொனித்தலின் மறையோர் போலுந் தோன்றலாங்காக்குஞ்சீராற்
றனித்தனி பொருள்கள் கொண்டு தருவதால் வணிகர் போலு
மினித்தநற் பயிர்செய் மாண்பா லியலும்வே ளாளர் போலும்
பனித்தனி நதிநாற் சாதிப் பண்பையு மடைந்த மாதோ. உஉ

பால்வரு நாணை யுட்கொள் பான்மையாற் பயமே வாற்றுன்
மால்வளர் கின்ற வங்க மடமடை வதனு னூடுங்
கால்வரு மருவ ருத்தல் காணலா லெறியு மிந்தச்
சேல்வரு மிக்க நீரைச் செப்பலாந் தெரிவை யென்றே. உங

சேவரு மராபாற் கூறுஞ் சிவனுமாம் வாரி வந்த
மாவருஞ் செயலா னீண்ட மாலுமா மன்னஞ் சேரத்
தாவரு செலவால் வேதன் றானுமாந் தெய்வ யானை
மேவரு செயலா லாறு வேந்தனும் வேளு மாமே. உச

புற்புதஞ் சார வெண்மைச் சுதையுறப் பொழிந்து முத்து
நெற்புறஞ் சேர வெற்று மிசையுற வலைக ளோங்கப்
பொற்புறுந் தான மீக்கொள் புளினத்தாற் றிரும்பி யாரு
மற்புதங் கொள்ள வாரி யலைகடற் கேகிற் றன்றே. உரு

தரந்தரக் கானத் தாகித் தகுஞ்செயி னிறைந்து வாரி
நிரந்தரப் பழக்கம் பெற்ற நீணதி சுழலுஞ் செய்கை
வரந்தரற் கிறைவ குத்த மன்னுயிர் மக்க ளாகிப்
பரந்தரு முடல்க டோறும் படிந்துபின் வருதல் போலும். உசா

---

உங. நாண்—வெட்கம்; நாரி. பயம்—அச்சம்; நீர். அங்கமடமடை வதனுல்—அங்கம் மடமடைதலால்; அம் கமடம் (ஆமை) அடைதலால். வருமருவருத்தல்—உண்டாகின்றபயிர்ப்பு; வளருகின்ற மருக்களை வருத்துதல். உச. சே—அழிஞ்சின்மரம்; எருது. உரு. தரம்—மலை. செயில்—செய்யில்.

பொதுச்சிறப் பறத்தி னின்றார் புரிந்திடார் தீமை வானும்
விதுப்புறப் புவியுஞ் சார்வர் வெந்நர கெய்தி டார்போல்
வெதுப்பிடற் குரிய பாலை விட்டுநாற் றிணையுஞ் சுற்றும்
புதுப்புனற் செறிவு தன்னாற் புண்ணிய நதியீ தாமால். உஎ

வேகவெங் கதியாற் சென்று விரிகடல் வேந்தன் றன்பா
லேகியொன் றுற்ற வாற்றி னியல்புரைத் தனமெஞ் செவ்வேள்
பாகுறுங் கனிமென் வாக்குப் பைந்தொடி யுடனி ருந்த
நாகரும் புகழு நாட்டை யறிந்தவா நவிலு வாமே. உஅ

## சித்திரநதிச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் சுசு.

# நாட்டுச்சருக்கம்.

உலகெலா மளிக்கவரும் பெருமாட்டி மணக்காலத் துற்ற பேர்க, ளலகிலா ரிருக்கவிது தாழுமெனப் பெரியோர்க ளிலாத நாடு, விலகிடா தொருத்தனுள னென்னில்வளங் குன்றுதென் மேன்மை வேண்டி, நிலவுலா வரைக்கணுறை குறுமுனிவா டமிணுட்டை நிகழ்த்தற் பாற்றே. க

புத்திதரு வரியரிசொற் புகழ்கல்வி பொருணிறைவு புலன்சே ராற்றல், சித்தியளி தவம்வேள்வி செயற்கரிய நிலையன்பு சீலர் தேரு, முத்திபுரி சிவஞான முதலாய நன்மையெலா முற்றும் வாய்த்த, மெத்துதலங் குறுமுனிவா டமிணுடே யெனத்துணி வாய் விளம்ப லாமால். உ

வீரியநாட் டணியசுரர் பயத்தாலுள் வேதையிற வேட மாறி, வாரியநாட் டுணிந்தளித்த தருமுதலா வளமிகந்தும் வானோர் மேவிக், காரியநாட் டுறுபாலாற் கருதுதவஞ் செயவந்த கணக்கி னனல், லாரியநாட் டறுகுகுறு மறைநாட்டுக் கிணையாமோ வமரர் நாடே. ங

உஎ. பொதுச்சிறப் பறத்தி னின்றார் வானுமண்ணுஞ்சேர்வர்; நரகஞ் சேரார். க. குன்றுதென்–குன்று தென்கின்ற.

தென்மறைநா டென்றுலுங் குறுமறைநா டென்றுலுஞ் சிறப் பொன் ருமால், பொன்மருவா ரிருவார்த்தை யழகுதனைக் குறிப்ப துணர் புலமை யாளர், மின்மருவே ரிரகசிய நோக்கென்று பொருட் பதத்தால் விளக்கு நாடு, நன்மைதரு குறுமுனிவ னதுநாடு குறு நாடாய்க் கொள்வார் மேலோர். ச

## வே று.

அரம்பையர் நிகர்த்த விலைமடந் தையர்க ளாரியம் வழங்குமந் தணர்க, ணிரம்பிய முறைமை மன்னவர் பொருளை நெடிதினீட் டுறும்பெரு வணிகர், கரம்பையும் பயிர்செய் முயற்சிவே ளாளர் கணித்திடுந் தொழிலின ரிவரில், வரம்பிகந் தொருவர் செலாமை யாற் பெயற்பான் மழைசுரந் துயர்ந்ததிந் நாடே. ரு

மூவகைப் பெயராம் பாண்டிநா டென்று மொழிந்திடு கன்னிநா டென்றுந், தேவரைத் தெறுவார் மறைகொளா ரியர்வாழ் செந்தமி ழுடெனத் தேரு, மேவுசொற் பிறங்கு நாட்டிலோர் பகுப்பா விளங்குதென் குறுமறை நாடென், றேவிடற் கரிய வறங்களா லுயர்ந்த தொருதனி நாடென வுரைப்பார். சு

## வே று.

கெடுப்ப தியாதெனி னுட்டினர் வெகுளியைக் கேடுறு கடுஞ் சொல்லைத், தொடுப்ப வோதிடிற் பண்பெறு செய்யுளைத் தொடர் நறை மலர்க்கோத்தை, யெடுப்ப நாடிடி வினத்தினிற் கழிவரை யின்னல்சேர் வறியாரைக், கொடுப்ப நேருவ வானிற வன்னத் தைக் குறையிலா நிதிதன்னை. எ

## வே று.

ஓட னத்தி மாட டித்து முக்கு மள்ள ரோர்வலத்
தாட னைப்பொ றுக்க வைத்து மரம டித்த தன்மையான்
மாட றுக்கு கால்பொ ரச்செய் வாங்கு மால வாளிபெய்
வேட னுக்கண் வீழ்த்த முத்த வெண்சு டர்க்கு ழுக்களே. அ

வன்பு கொண்ட வுள்ள ரில்லை யாத லால்வ யங்குசெய்
தன்பு லந்து ளங்க லங்க ளம்பெ யுஞ்ச தங்கையான்
பின்பு நின்று ரப்பு வாரும் பேணு சங்க மாதியை
முன்பு சென்றெ டுத்தி டக்கை முந்து வாரு மேபலர். கூ

---

அ. ஆலவாளி—புட்பபாணம்.

அங்கை யாற்பி டித்த கொம்ப கன்றி டாத மந்திதா
னெங்கு மாய்ச்சு ழன்று காண விசைவு றும ரங்கள்வாய்த்
துங்க வோத்த யர்ந்து தோரச் சொல்வர் நேடி ளஞ்சிறார்
சங்கை நீத்தி டந்தி ருப்பு தத்தை தங்குஞ் சூழலே. க0

கஞ்சு கந்த ருந்த னத்தி யிடையி னைதல் கண்டசோ
கஞ்சு கந்த ருந்த னத்தி லில்லை யென்று கரைவரே
அஞ்சு கந்த ருந்த னத்தி லாசை விட்டு மள்ளர்போ
யஞ்சு கந்த ருந்த னத்தி ருக்கொள் வாக்கை யார்வரே. கக

வாதி பத்தி லொன்று தங்கம் வைத்து வாங்கன் மன்னவ
ராதி பத்தி யத்தி லாறி லொன்று கொள்ளல் வாணிபர்
நீதி பத்தி லொன்று கூட்டல் போல வன்றி நீணிலத்
தூதி யத்தி லொன்று நூறு கொளவி தைப்ப ருழவரே. கஉ

களைய டங்க வுழவ ருண்டி கச்சி றந்த னத்தினர்
வளைய நின்ற மக்க ளோடு வந்த ளித்து மீள்வரே
வளைபு னைந்த கடையர் தஞ்சி றார்கள் கூடி மற்றவர்
களைக ளைந்த புற்கள் கொண்டு கன்று ணக்கொ டுப்பரே. கங

புடைய டைந்தொ லிக்கும் வீணை புல்ல ரித்தி டும்மிசை
நடைபி றழ்ந்தி ளைத்த லின்றி மாட கங்கொ ணவிரர்போற்
கொடைசி றந்த ளிக்கு மள்ளர் காலி னுங்கு ளத்தினும்
மடைதி றந்த டைப்பர் நீர்சு ருங்கன் மிஞ்சன் மாற்றியே. கச

வசையை நீத்த மரக தத்தின் மாண்பு பெற்ற மாலுடன்
விசைய நாட்டு வேளி னோடு விற்கி ரீடி யாதியர்
நசைகொ ளேற்ற வருண முற்று நாடு கண்கு ளிர்ந்திடப்
பசுமை காட்டி முளையெ ழுந்த சாலி யின்ப ரப்பரோ. கரு

---

கக. கஞ்சுகம் தரும்—கச்சிடப்பட்ட; கஞ்சுகம் ஈண்டுக் கச்சு. சோகம்—சுகம். அஞ்சு உகந்து அருந்து அனத்தில்—கைப்பை நீக்கி ஐந்து சுவையோடு மகிழ்ந்து உண்ணும் சோற்றில்; ஐம்புலன்களும் மகிழ உண்ணும் சோற்றில்; அஞ்சு ஆகுபெயர்; மகிழ்ந்து மகிழ எனத்திரிக்க. அம் சுகம் தரும் தன்னத் திருக்கொள் வாக்கு—அழகிய கிளிபேசுகின்ற சிறியசீர்பொருந்திய சொல்லு.

வல்ல டிந்த னத்தி னூர்கண் மதுர மிஞ்ச வாணியாற்
சொல்லி டிங்கு ணத்த கீத மீத வாய துன்னியே
நெல்லி டிங்க திர்ச்செய் மள்ளர் நீட்டி வைத்தி ருத்திய
புல்லி டிந்த னுக்கள் கொண்ட புட்க ளங்க ணேடுமே. கசு

கோளை நட்பு நாள றிந்து கோளை யற்ற நெஞ்சராய்
வாளை யுற்ற கண்ணி னூர்கள் வாளை யுற்ற செய்யராய்த்
தாளை விட்டி டார்கள் பாங்கர்த் தாளை விட்ட ரிந்திட
வேளை வந்த தென்று கூற வேளை யொப்பர் மால்கொள்வார். கஎ

## வே று.

கொள்ளை யானுனன் மேதியுங் கன்றுளிக் கொட்டும்
பள்ள நீர்த்தடம் பாய்ந்துசெல் பாலுறப் பெறலான்
மள்ள ராற்கொயுங் கதிரினும் வயலினு மணக்கும்
வெள்ளை நீர்ப்பெறு நென்மணி களத்திடை விரிப்பார். கஅ

பரிக்கு முந்தலு மளப்புறு கோட்டையும் பதித்துத்
தரிக்கு மென்களம் வைத்தநற் போருறச் சாய்த்துப்
பிரிக்கும் வண்ணமுந் தாங்கிய பெட்பினூற் பேசின்
விரிக்கு நென்மணி கொள்ளிட மன்னென விளங்கும். கசு

நிறுத்துச் சாற்றிசை யந்தணர் நேமியாண் மன்னர்
மறுத்துக் கூறிடாப் பொருள்விலை வாணிகர் வளமை
பொறுத்துச் சீர்கொள்வே ளாளரென் றிவருயப் பொலிநெல்
லறுத்துச் சூடிட லான்மளர் வைத்திய ராமால். உ0

கஞ்சப் போதினை நிகர்முக வுழத்தியர் காத்தா
லெஞ்சற் பாடிலா மணிதாத் தலையெடுத் திறக்கி
யஞ்சப் பேடினை யொருவலா தயலுற வாணுந்
துஞ்சப் போரினை யாக்குவர் மள்ளர்கள் சூழ்ந்து. உக

---

கசு. மீது அவாய் அது உன்னியே எனப்பிரிக்க. கஎ. கோள்—முன்னது கிரகம் பின்னது குற்றம். வாளையுற்ற—முன்னது வாள்போன்ற பின்னது வாளைமீன் பொருந்திய. தாளை விட்டிடார்கள்—முயற்சியை நீங்காத மள்ளர்கள். வேளை—சமயம். வேள்—மன்மதன். மால்—ஆசை. ககூ. பரிக்கு—குதிரைக்கு; சுமைக்கு. கோட்டை—அரண்; நெற்கணக்கு. போர்—நெற்போர்; சண்டை.

அவைநி றைத்தபேர் பலர்மறை யறைந்திடு மொலியாற்
சுவைய டுத்தவோர் மகன்றொனி தோன்றிடா ததுபோற்
கவைபொ றுத்தநீள் வரைபெரி தாயினுங் கணநெற்
குவைம றைத்தலாற் காண்கிலர் முத்தலைக் குவடு. உஉ

ஈறி லார்த்தியாற் கோபுர மாளிகை யிவர்ந்து
தேறி டாச்சிறுர் மிகவுயர் செந்நெலம் பார
மாறி னாப்பணை வரிற்றெரி தருமென மகிழ்வுற்
றேறி நோக்குவார் கிளைஞர்தம் வரவினை யின்பால். உங

## வேறு.

வண்டிடை கிடந்த பூக்கள் வாம்பில சிந்தி வானி
னெண்டகு புவியின் மற்று மிடங்களி னெழின்மிக் கோங்கிக்
கண்டவர் களிக்கக் காலிற் கந்தரத் துச்சி போத்
தண்டலை மரங்க ளாடுந் தந்நிக ரிடங்க ளெங்கும். உச

கோடொளி பரவு மாண்பாற் குறித்துள பசுமை தன்னான்
மாடம ருவண மூரும் வழக்கினா லனந்தன் சேர்வாற்
சேடுள வளைவி லார்தல் செய்தலாற் றிருவி னாத
னோடிவ னுறையுஞ் சோலை யொப்பெனுந் தகைமைத் தாமால்.

கலைவில தாகி வானைக் கவின்செயு மரங்கள் பூத்த
நிலையின வான போது நிறையுமென் மலர்க ளெல்லா
மலையுள தாகி நீரை யாங்குதிர்த் தழகு செய்யத்
தலையினின் மணமருத தன்மையை யுடைத்தாஞ் சோலை. உசு

மெல்லிடை யரம்பை மாதர் மேவுவான் றருவை வென்றிங்
கெல்லிடை யுறுத வில்லா வெழிற்பொழின் மலர்மீ தாகச்
செல்லிடைப் புகுநீண் மேடைச் செய்யவெண் டிங்கட் காந்தக்
கல்லிடை யுகுநீர் சீதக் கற்பகக் காவி லோடும். உஎ

---

உரு. அனந்தன் - நாகம், அன்னப்பட்சி தன்பேரில். வளை - சங்கு. வில் - வில்லு, தனுராசி. உசு. அலையுளதாகி - அலைதலை யுடையதாகி.

பேணிக்க மேறு மேருப் பிறங்கற்சொற் பண்ட மேற்பான்
காணிக்க லாபக் கேசக் கடைசியர் முனமு ளப்பார்
மாணிக்க நீலம் வேடர் மதிதநெய் கிர மாயர்
பாணிக்க லாகு மேர்கொள் பாதவ ரமுத முத்தம். உஅ

குறியுடைத் தருந்தா ணீத்துக் கொளவளந் தெண்ணு மோதை
பொறியுடைச் சுகஞ்சேர்ப் பிள்ளை புகன்றிடு மரவத் தோடு
நெறியிடைச் சகட வார்ப்பு நெடிதுரப் புவரி யார்ப்பும்
வெறியுடைக் குழலார் பாட்டும் மெலிவுற வடக்கு மாதோ. உகூ

வரம்பிகந் தியாரு மேற்ப வழங்கிநென் மருத நின்று
தரம்பெறுந் தனிமை நோக்கித் தத்துவங் காட்ட றன்னுற்
றிரம்பெறு மடியார்க் கீயுஞ் சிவனையு மவன்றாள் சேர
வுரம்புகு ஞான நாட்ட முளரையு மொக்கு மாதோ. ௩0

ஈட்டிய நிதிய மென்ன வெம்முனோ ரெடுத்துத் தந்து
காட்டிய முறையிற் சென்ற கருத்தினுக் கியைந்த மட்டுந்
தீட்டிய சரத்துக் கூர்மைத் திண்ணறி வாளர் முன்பு
நாட்டிய வுரைத்தா மன்னு நகரிய னவில லுற்றும். ௩க

## நாட்டுச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௩௭.

---

உஅ. கம் - ஆகாயம். சொல் - நெல். மதிதம் - மோர். பாணிக்க - கண்டோர் தாமதிக்க. உகூ. சுகம் - கிளி. பிள்ளை-நாகணவாய்ப்புள். ௩0. வரம்பு-வித்தியாசம், எல்லை, முறை. தரம் - சங்கு, மலை, பக்குவம். தத்துவம் - சுபாவம், பலம், உண்மை.

# நகரச்சருக்கம்.

வட்டவா ருலகின் ஞான வகுப்பினர் யோகர் சித்தி
யிட்டமா யடைய வெண்ணி நோற்கின்றா ரெண்ணி லிந்த
வட்டமா யிறைமைத் தொண்டாற் றப்பரா னந்தன் வாழ்ந்த
நிட்டமா புரியென் னாவா னிகழ்த்திடு மளவிற் றாமோ. ௧

எல்லம ரெரிக்கண் ணார்க்கு மெழிலுடை மலர்க்கண் ணார்க்குஞ்
சொல்லமர் வடுக்கண் ணார்க்குந் தொன்னகர் மலைவிண் பொன்னா
மெல்லவர் களும்வா ழிந்த விசைபெறு நகரை மண்வாழ்
நல்லவர் புகழ்நெட் டூரென் னாமமுஞ் சாற்று வாரால். ௨

கடியதா மரையா னிட்ட கவினுடைப் புவியின் மற்றெப்
படியினா லெண்ணி னாலும் பலபல புரிக ளெல்லாங்
கொடிவிடா துலவிவ் வூரிற் குறியதா மிதுவே மிக்க
நெடியதா மதனினெட் டூரென் றான்றவர் நிகழ்த்து வாரே. ௩

சொல்லுடை யங்க மாறுந் தோன்றவோத் துரைப்பர் மேலோர்
வில்லுடை விசயனன்ன வேந்தர்விற் பயின்று வாழ்வர்
புல்லுறு பொருணேர் கோடார் பொருத்துவர் வணிக மாக்க
ணெல்லுயர் மலைக ளாக்கி நிறைப்பர்வே ளாளர் மாதோ. ௪

கடிமண மாதி யென்றுங் கவின்பெற நடக்கு மாண்பாற்
படிமிசை வண்டி யேற்றிப் பற்பலர் பொருளை யீவான் [கோலா
கொடியுடை யவராய்க் கொண்மின் கொண்மினென் றுரைத்துக்
லிடியென முரச மார்ப்ப ரெங்கணுஞ் சிறக்க மாதோ. ௫

## வேறு.

வளைமு ழங்குவ மழையெ னும்படி மனைக ளெங்கணு மாதரார்
கிளையொ டுஞ்சில வணிசி லம்பொலி கிலுகி லுங்குவ வீதியே[மேல்
துளைப டுங்குழன் மலர்கொண் மங்கையர் சுடர்வி டுந்தனி மேடை
வளைதொ டுங்கா னடைபெ றுஞ்சுர மதுர மிஞ்சொலி யாருமே. ௬

ஆரிய சங்கிலி யகலு றும்படி யணைவர் விண்டிட நீடுதா
ஞாமி குந்திடு புவிநெ ளிந்துக வுலவு வண்கரி வீதிபோய்
விரியு மொண்புன லதுகு டைந்திட விடுவர் மூங்கிய தோல்கடாம்
வரவி ளம்பொலி தனிற டங்கரை மானு றுங்கவி யோடுமே. எ

கரிய வந்தரம் வரும டந்தையர் கணமு மஞ்சுறு சால்புசே
ரரிய கொண்டையும் வெறிய கொங்கையு மரிய கண்களுஞ் சார்நலா
ருரிமை கொண்டிவ ணெழுது சுந்தர வொளிபி றங்கிய கோலமே
பரியி னங்களி னடிவ ரைந்துள பணைம டங்கல்கொள் கோலமே.

## வேறு.

சத்த மிக்குள பத்து யிர்ப்பிணை தத்து வத்தினை நேயமாய்
நித்த மெத்தந லுத்த மத்தினி னிற்க வைத்தமர் யோகமே
யித்த ரைக்கண் முடித்து வத்துவி னிச்சை யுற்றடை பான்மைசேர்
சித்த ருக்குறை செப்பி டத்தகு சிட்ட ரைப்பெறும் வீதியே. கூ

மெச்சு மெய்ப்புகழ் நற்சு வர்க்கர்கள் வெட்க வைத்திடு சால்பதா
யிச்சை யுற்றும கத்தி றத்தொனி யிற்ப யிற்றுறு வேதமே
கச்சி றுத்திடு கற்பி திர்ப்புள கத்த னத்தினர் காதல்சே
ரச்சு கத்தொடு ரைத்து வப்புறு மற்புத த்தது மேடையே. க0

## வேறு.

சித்திரம மைத்தகன முற்றலவ வெற்றவழ்வி சித்திரவ கத்தி னிடமே, வித்துருமம் வைத்தவெழு பத்திவயி ரத்தமா மெத்தை யணி ரத்தினயதாப், பித்திகைக வுத்துவமு கப்பரிய வத்தநடை பெட்பிரசி தத்தினதுமா, முத்தொடுமி ழைத்துநகு பச்சைமணி பெற்றிலகி முற்றுமொளி ரத்திகழுமே. கக

வித்தக மளிக்குநல தத்துவம றைக்கிளைகண் மிக்கன வளர்ச்சி யுறலால், வத்துவறி விக்குமொரு தர்க்கமுதன் முற்பனுவல் வர்க் கமலர் கொட்பினெழிலார், சித்தமுரு கத்தொனிசெ யுச்சவிசை யுட்கடிக் தித்துலவி நிற்குமியல்பால், வித்துவரெ னப்புகல ரிக்க ணவி ரைப்பினுயர் விட்பொழிற ருக்கழகமே. கஉ

---

க0. திறத்தொனி - உதாத்த அநுதாத்த சுவரித வொலிகள்.
கஉ. இரைப்பின் - ஒலியினால்.

## வே று.

வாவியிட முற்றுவளர் மாவனச வால
மேவிவெறி யுட்குடைசெய் மென்னடைய வன்னந்
தாவிவிண டைந்திறகு லர்த்துநறை தண்கா
றாவியிட மாநகர மேய்க்குமுது சொர்க்கம். கரு

கைவிரலின் வீணையொலி கண்ணமரும் வேய்வாய்ப்
பெய்யுமிசை பாடுகுரல் பெட்பினிவை யாவுஞ்
செய்யமக ணுணிறை தெரித்திட வலஞ்செய்
வையமணி யின்றெனியை மாற்றனுறு மம்மா. கச

புங்கமிகு சந்தமொளிர் பூவினொ டியாரு
மெங்கணு மிறைத்திடு மினியபனி நீரு
மங்கநறை யாவையு மாங்கின்மிசை யாடு
மங்கையர் நுதற்றிலக மான்மத மறைக்கும். கரு

சொல்லையமர் வாய்மையொடு தூயநிறை கல்வி
யெல்லையில றங்கள்பொறை யின்னுயிரி னண்பு
தொல்லையர் வரன்முறை தொடர்பிவைகண் மல்கு
மில்லையெனும் வாக்கிநகர்க் கில்லையென லாமே. கசா

பம்புபுகழ் நிட்டைநகர் பண்பமைகொள் செல்வர்
வம்புசெறி மாலையணி வாகுவல யஞ்சேர்
வெம்புயநன் மன்குமரர் தங்கழகம் வில்வா
யம்பினுடை கொண்டன்மணி யார்தனுறு மன்றே. கஎ

## வே று.

இகலு மாற்றல்சேர் கோடி ரண்டினும்
புகலு மாடகப் பூணி னன்மணி
யுகவு மொன்றினோ டொன்று தாக்கியே
தகர்பொ ரக்களி காலந் தள்ளுவார். கஅ

சிந்தை கொண்டுநற் சிறுவ ரிந்நகர்
விந்தை கண்டிட விழைவு மாடல்செய்
துந்தி வான்பெற வொன்றி டாதுகாற்
கந்து கம்புவி காணி லெள்ளுவார். ககூ

---

கச. செய்யமகன் - சூரியன். ககூ. காற்கந்துகம் - காலாற்றட்டும் பந்து. புவிகாணி லெள்ளுவார் என்பதற்கு வானிலெல்லையை விட்டுப் புவியுறு திருக்கு மென்பது கருத்து.

தத்த ளித்திடு தகவில் யாசகர்
சித்த மோங்கிடச் சிறுவ ரையமா
முத்த ளித்திட முன்னர்த் தந்தைதாய்
அத்த ளிர்த்தகை யங்க ணுற்றுவார். உ0

அனக ளுகியே யளகை யாளுறுங்
தனத னேநிகர் தன்மை யேய்ந்துள
கனக மாநகர்ச் செல்வர் கண்டிடுங்
கனவு மீயவே காணு வாரரோ. உக

வரவு கண்ணுறின் வாங்கு வார்களுக்
குரவு திண்பொரு ளுதவ நோக்கியே
கரவு கொண்டிலார் காத்தி ருத்தலா
லிரவு மென்றுசேர் பகலு மொன்றுமே. உஉ

## வே று.

வேத நால்வரை
வேத ளுரினு
மோது வார்பலர்
தீதி லார்களே. உங

நீல மாமலை
போலு மேனியான்
கோலு நீறுசெய்
பாலர் கோடியே. உச

நந்த னத்தினும்
நந்த னத்தினும்
நந்த னத்தினும்
நந்த னத்தினும். உரு

---

உங. வரை - சொன்ன. உச. கோல் - இராமபாணம். உரு. நாம் நம் தனத்தின் நந்தல் நத்தின் - நாம் நம்முடைய செல்வத்தின் ஆக்கத்தை விரும்பினுல்,—ஆம் நந்தனத்தின் ஆம் - (நாம் உண்டாக்க) உண்டாகின்ற நந்தவனத்தினுலே உண்டாகும்,—நந்து அனத்தின் ஆம் - சங்குபோன்ற வெண்மையான அன்னதானத்தால் உண்டாகும் என்பர் அந்நாட்டார். என்பர் அந்நாட்டார் என்பன எஞ்சிநின்றன.

காலு மாரமே
காலு மாரமே
காலு மாரமே
காலு மாரமே. உசு

காவ லங்கமே
காவ லங்கமே
காவ லங்கமே
காவ லங்கமே. உஎ

## வே று.

வேத வேள்வி மிகச்சி றத்தலின் விண்சுரந்திடு மன்னதாற்
கோதி லாவள மீறு மஃது கொடுக்க வோங்கு மறங்களே
நீதி யாரற மேவ ளர்த்திட நீடு சைவநி றக்குமன்
ஞாதி நூலில் வழாது கோலினை யாற்று மிந்நகர் மாண்பரோ. உஅ

## வே று.

விசயரெங்க பூபால சமுத்திரமென் றொருபெயரும் விளங்கப் பெற்றுக், கசதுரங்க மிகுவெள்ளை யப்பதுரைப் பாண்டியன் செய் காவல் பூண்டு, மிசைபொருந்து மப்பரா னந்தன்முதன் முனிவர்நிட்டைக் கிடமா யெட்டுத், திசைகளுங்கொள் புகழுடைய சித்ரநதி சூழிநகர் சிறக்கு மாதோ. உகூ

## நகரச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் கஉகூ.

---

உசு. காலும் - காலனும்,—மாரமே - (அந்நாட்டிற்புக்கால்) மரணமே,—காலும் - தூணும்,—ஆரமே - சந்தனமரமே,—காலும் - வாய்க்காலிலும்,—ஆர் அம் ஏ - நிறைந்த நீரே,—காலும் - கால்களிலும்,—ஆரமே - முத்து வடமே. உஎ. கா அல் அம் கம் ஏகா-சோலையினின்று இருள்போன்ற கரிய மேகங்கள் நீங்கா,—அலம் கம் - கலப்பைச்சாலில் நீர்,—அங்கு அம் காவல்-அங்கே அழகு காவல்செய்யப்படும்,—கா - காவடியெடுத்துக்கொண்டு,—வலம் - வலம்வருதல்,—கம் - சந்தோஷமாம்.

# புராணவரலாற்றுச்சருக்கம்.

மணியாரு மிப்புவியில் வெகுகோடி சரிதமுள
வடமொழியி லுந்த மிழிலும்
மற்றவைக ளொவ்வொன்றும் நைமிசா ரணியத்தின்
மாதவர்கண் முன்பு சூத
னணிசேர நிகழ்கின்ற காலங்க டனிலறிந்
தக்கால முறைத ருவதா
லர்த்தமென வென்மன மசைக்கின்ற பொருளுண்மை
யதுகொண்டு புகலு வதலாற்
றுணிவாக யான்கண்ட தென்றுசொல வரவில்லை
தூயநா லாறு சமயச்
சூழ்வினர்க ளும்பெரியர் பாதமலர் சூடியே
தொந்தந்தொ லைத்த லாலே
பணியாக வடியனது தலையால்வ ணங்கப்ப
ரானந்தன் மகிமை யாவும்
பகராத தல்லவென வுரமேவு வரலாறு
பாடமுய லுற்ற விதமே. க

## புராணவரலாற்றுச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் சஉஎ.

---

க. பொருள் - வஸ்து. நாலாறு சமையச் சூழ்வினர் - லோகாயதன் முதல் சாங்கியன் ஈறாய் ஜீவவாதிகள் பன்னிருவர், யோகிமுதல் விருட் சார்ச்சனர்வரை ஈசுரவாதிகள் பன்னிருவர், ஆ உச.

# தலமகிமைச்சருக்கம்.

இப்புவியிற் கவுமார சமயத் தோர்க
ளெச்சமயத் தாரோடு மிகலார் மற்றோ
ரொப்புயர்வென் றுளமுராணி நிற்பார் பேத
மொழித்தவரே யுறைவர்நிட்டை நகரின் றன்மை
தப்புறுமெண் ணிருந்தாலு மிவ்வூர் சேரிற்
சமரசத்தைத் தருமிந்தத் தலமே யென்றாற்
செப்புவதற் கெளிதோவிம் மகிமை யென்னாற்
சேடன்மதி காணாது தெரியின் மாதோ. க

அகக்களங்க மிலர்வாணீ ணகர்க்கு ரோச
மைந்தினுக்கு மப்புறஞ்சே ருழுவை யாதி
மிகக்குழைந்து பசிநோயால் வெம்பு காலம்
விழியெதிர்காண் புல்வாயை வெருட்டி வந்து
மகத்துவங்கொ ளிப்பதியி னெல்லை யுற்றான்
மாறிவரு வழிதிரும்பிப் போகு மாண்பு
சகத்திலங்கொர் தலத்துள்ளுங் கண்டா ரில்லை
தகைவிலங்கூன் மறுத்தல்செயுந் தலமீ தாமால். உ

மான்மகளை மணந்ததுசீர்ப் பாங்குன் றாகும்
வலகூரை யட்டதுநற் செந்தின் ஞான
வான்குடிலை யுரைத்ததே ரகமா மாவி
னன்குடிநற் களிகொள்வான் வந்த தன்றே
நான்முறையி லொவ்வொன்று மொவ்வோ ராறு
நுவனிட்டை நகரன்பன் வேண்ட வந்த
மான்மியங்கொண் டௌதாலே துயர்வென் றுங்கண்
மனமதிக்கு மாநிலத்திர் வரைவ தன்றே. ௩

## வே று.

உதிப்பி னினைப்பி னுடல்களையிற் காணின்
விதிக்குங் கதிதரலான் மேம்பாடா மாரூர்
கதிக்கு மருணைநகர் காசி புலியூர்
மதிக்கு முயர் நாற்றலத்தின் வண்மைதரு மித்தலமே. ச

கூறு பலநூல் குறையறவே கற்றுணர்ந்தோர்
மாறு பிறவி மயனீக்க வந்துதித்துத்
தேறு பரானந்தன் செப்புவாங் கொண்டுபகை
யாறு மொடுங்க வமைப்பதுவு மித்தலமே. ௱

தலமகிமைச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் கஙஉ.

# தீர்த்தமகிமைச்சருக்கம்.

ஞான மேவியு மறிவரோ சித்திர நதியின்
றூன மூலமென் றறைந்தனர் தக்கவ ரதனை
யானு மேநவில் கின்றதல் லாற்புது நயமாய்க்
கான மார்நதி கண்டுசொல் லளவதோ கருதின். க

சங்கை யாதுமில் சிந்தையா ளுண்டுயி றடுத்தோர்
புங்க மாருமிவ் வூர்நதி காணுறப் பொருந்தி
னங்க ணீள்புனல் குடைந்திட வவாவுவ ரரிய
கங்கை யாதியாம் பலநதிப் பலனிது காட்டும். உ

சத்தி வேலவன் றன்முனர் நதியிடைக் குடைவார்
புத்தி ராதிநற் பேறெலாம் பொருந்தி மேற்புகழுஞ்
சித்த ராகியே திரிந்துபின் சேணடைந் துயர்ந்த
முத்தி சேருவர் திண்ணமா மிதுமறை மொழியே. ங

தவந்த லைக்கொணல் லவர்களைச் சார்ந்திடா ரேனுந்
துவந்தொ லைக்குநா லறிந்திடாத் துகளின ரேனும்
நிவந்த லைத்துளி மெய்யுறிற் புண்ணிய நீராற்
பவந்து டைத்துயர் வடைவரேற் பன்னலாந் தகைத்தோ. ச

ஆர்த்த மாமறை யறைதலாற் சீருள தீர்த்தம்
பேர்த்த மானுட வுடல்கொடு வேதமே பேணி
யார்த்தி யோடிதி லாடிய வழகினை யுன்னிற்
றீர்த்த மான்மியந் தெளிவுற நிட்டையிற் செலுத்தும். ௫

## தீர்த்தமகிமைச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் கஙஎ.

# மூர்த்திவிசேடச்சருக்கம்.

வாக்கு மானமுங் கொடுமையும் வைத்துளார் தம்மைத்
தாக்கு மாறுரு வாய்வருந் தகைத்தன்று சரணை
நோக்கு வார்நினைப் படைதா நுவலடி யவரைக்
காக்கு மாவருள் வடிவமிக் கந்தனு மூர்த்தம். க

உற்ற பான்முதற் கனிவகை யொருங்குற வமைத்து
மற்று மோர்பிழை யதின்வரின் வருத்துவ தன்றாற்
பெற்ற தாயினு மடியரைப் பேணி யன்னவர் பாற்
குற்ற நேரினும் பொறுத்தருள் புரியுமிக் கோலம். உ

தள்ளு நீள்புனற் செறிதரை யினர்செயுந் தவத்துக்
குள்ள வாறுநன் குறுத்திடு முருவின தன்று
ளுள்ள லாகிய மூவகைத் தொண்டினுக் குயர்ந்த
வள்ள லாகிமிக் களித்திட வந்ததிவ் வடிவம். ௩

இன்ன வாறுயர் குமரனைக் காணுறி லெழிற்பூ
மன்ன ராகுவர் வானர சாளுவர் வகுப்பின்
பன்ன காதிப ருர்முத லளப்பரும் பாத்தின்
மன்னி யீறிலாப் பெருஞ்சுகம் பொருந்துவர் மாதோ. ௪

## வேறு.

மாத ரார்நகர் வந்து கண்டு நன்மக்க ளைப்பெறு வார்கணூ
லோத வாரமு ளார்கள் கல்வியி னோங்கு வார்புத னென்னவே
நீத மாவர சாளு மன்னவர் நேர்வர் சக்கர ஞானியர்
பேத வாதமொ ழித்து வீடது பெற்றுய் வாரடி பேணியே. ௫

வச்சி ரத்தவ னங்கி தன்மநி ருதி வாருணன் மாருத
னச்சி டத்தகு மளகை யாளியீ சான னாதியர் நாடியே
கச்சி றுத்திடு தனமி னாரொடு கந்த னாலயம் வந்துதாழ்ந்
துச்ச முற்றவ ராகி யேகுவ ரும்பர் மாநக ருண்மையே. ௬

## மூர்த்திவிசேடச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௧௬௩.

# அப்பரானந்தசுவாமிகள் அவதாரச்சருக்கம்.

திருவ டித்துகளை யயனெ டுத்துலகு சிட்டி செய்துகளி தேக்
குறு, முருவு டைத்தரும நாரியோடரனு முயர்வை வேலவனு
மரசுசெய், பெருமை யுற்றிலகு பாண்டி நாட்டினிடை பேசு மந்
திரந கர்க்கணி, தருமி குத்துவளர் தகைகொள் பட்டினம ருதபு
ரிப்பெயர்ந லூரதே. ௧

இந்த மாமருதை யம்ப திக்கண்வள ரேத்து நீள்புகழ்பொ
றுத்துளான், சந்த மார்கவிதை சாற்று வல்லனெழி றங்கி யோங்
குமக ராசனுங், கொந்து சேர்மதுர வல்லி நாதனுயர் கோத்தி ரஞ்
சிவவு ருத்திரஞ், சொந்த மாமரபு சீர்கு டிப்பெயர்வே ளாளர் தம்
புகழ் துலக்குவான். ௨

### வேறு.

நீதி யாரு மனத்தன்பு நிகழ வொழுகு மதுரவல்லி
மாதி னீடு வயிற்றிடையே வளர்ந்தை யிரண்டு மதிகடந்து
கோதி லாத வுடனூலிற் குறித்த தமைந்த குழந்தையென
வாதி மூல னெனும் பெயர்பெற் றரிய மகவு பிறந்ததுவே. ௩

### வேறு.

ஏறுசில திங்கள்செல விம்மதுர வல்லி
பேறுபெறு மம்புவி பிறங்கவொரு பிள்ளை
கூறுபுல னன்றறி குலந்தனி விளங்க
வாறுமுக மென்றுசொ லருங்குழவி யீந்தாள். ௪

## வே று.

பொருணூல்வகை யடையுந்தவர் புலவர்க்குறை விடமா
யுருணுடிய புவிமீதினி லொல்லுஞ்சில நாட்போய்த்
தெருணூர்பெற மகளிர்க்கிறை திகழ்மாமணி நிகரா
யருணாசல மெனவோர்மக வளித்தாளகங் களித்தாள். ரு

## வே று.

சந்த னீடிசைக் கவிஞரைத் தரிக்குமம் புவியி
லிந்த மாதுசின் னாட்செல வினிப்பிற வாமற்
பந்தம் வீடிய தவத்தரு மாசைகொள் பண்பார்
கந்த சாமியென் றொருமக வளித்தனள் களித்தாள். சு

## வே று.

செல்வினை நாணத் தருகையர் மிக்க திகழ்பூவி
லெல்லிடு நாளிற் சிற்சில செல்ல வினையில்லா
வல்லவர் நாடிக் கோணெறி நோக்கி மகிழ்கொள்ள
நல்லகு மாருப் பெயர்மக வீன்று ணகைமானாள். எ

செங்கதி ரோனிற் றெரிதரு கின்ற சின்னாட்போய்ச்
சங்கரி யூணுட் கொள்ளெழி னாகந் தனிமால்வார்
பொங்கரி சூழித் தாரணி நல்லோர் புகழ்சொல்லச்
சங்கிலி வீரத் தனயனை யீன்று டகவுள்ளாள். அ

## வே று.

சித்த மாவரி தள்ளு நாட்செலச்
சித்த மாவனை செய்த நோன்பினாற்
பத்த மாதிய பண்பு மிக்கவண்
முத்தம் மாளென மொழிய வந்தனள். கூ

## வே று.

பூவார் கலிசூழ் புவிமீதினிற் புன்மை செய்யு
மாவா கலியா ருலகத்தினி லாயும் வேதத்
தேவா யதுதேர் கிலரான செனங்க ளுக்கு
நாவா லுரைதே சிகர்தோன் றுதனு டியெங்கோன். கO

இவ்வா றுயர்மா மகன்வந்திடற் கேற்றநோன்பு
செவ்வா யுறுநீ டகடாள்வயிற் சென்மமாக
நவ்வா ரியனை யென்றிட வந்து நலங்கொ ளொளி
லவ்வா யிழையாள் கருவெய்தின ளேயனம்ம. ௧௧

அந்தா மரையா னனம்வெண்மைய மரிது தாதா
யிந்தா முடரு னயர்வெய்துற விடைய தோங்க
நந்தா நடைநேர் தளர்வுற்றிட நாவ தூறிப்
பந்தா முலைக்கண் கறுப்பொன்றிடப் பத்து முற்றாள். ௧௨

## வே று.

பூவருமு லகுபுரித வமுமுயர்பு னிதர்
புந்திகளி யோங்கனல்வி னைப்பயனும் புலவ
ரேவருமி சைசொன்மக ராசனது குலத்தோ
ரின்பமொட டேறுமிசை காலமுந்து ரக்கத்
தேவருமு லர்சொரிய நூற்கிறைவ னானோன்
றிகழ்பெரிய ஞானியெனச் செப்புமிவ னெளியேன்
பாவருமு ரிம்மைகொள வந்தவத ரித்தான்
படியிடையன் னனடிப்பூ வென்முடிநீங் காவே. ௧௩

## வே று.

மெய்யம் புவியினரும் மேன்மையுறப் பெற்றாருங்
கையம் புடையமலர்க் கந்தர்ப்ப னேரிவனை
வையம் புகழ்குலத்தின் மாதெய்வ நாமமெடுத்
தையம் பெருமா ளெனப்பெயரிட் டாதரித்தார். ௧௪

வந்து பிறந்த வன்றே மாமலையி னற்றவர்க்குச்
சிந்தை நிறைந்த தியானந் திடப்படுமே
லிந்து பொருந்து மெழின்முகத்தான் றன்பெருமை
புந்தி யறிந்தோ புகல்வே னெளியேனே. ௧௫

கண்ட பொழுதே கருத்தோடி யுற்றதெனை
வண்ட ரமுதை யவாவு முறைபோலக்
கொண்ட முகமே குறித்துச் சிரவழியுள்
ளுண்ட வுயிர்ப்போ டுளங்கொள்ளத் தாய்முகப்பாள். ௧௬

அலையுற் றலைவாரி யத்திரியின் வேரூய்
நிலையிற் படா நிகழ்வித்தான் வேதன்
கலையிற் பெரிய கவின்றுறைதை நெஞ்ச
மலையுட் செலநீண் மகிழ்க்கடலிட் டானிவனே. ௧௭

## அப்பரானந்தசுவாமிகளவதாரச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௧௬௦.

# சற்குரு தரிசனச்சருக்கம்.

வாவிசூழ்மரு தாபுரித்தலம் வந்தவெண்மர் வளர்ந்தன
ரோவிடாதுயர் பத்திவாய்மை யொழுக்கமுற்றவ ராகியே
நாவினேநிறை வாணியாளரு ளுடுங்கல்வியின் மிக்கநாள்
பூவினார்மண முற்றினாிரு மூவர்முன்னவர் பொற்பினே. ௧

காதலாலிவர் பெற்றுளாரையு முன்னையுந்தினங் கண்டடிப்
போதிலேபணி வந்தனுதிகள் பொற்புடன்புரிந் தாற்றுவார்
தீதிலாநல வாதிமூலன்சொற் றேர்ந்துபாடுறுஞ் சீரினு
ஞதலாலிவற் கந்தநாட்டின ரஞ்சுமாறு நிகழ்ந்ததே. ௨

ஈதுநிற்கமுத் தம்மைநீள்புரத் தேத்துவேன்மயிற் பண்டிதற்
கோதுநற்பணி மின்னெனுமண மோர்ந்துசெய்தன ரொன்றவே
மாதுகற்பின னுபகற்கினி தாகவாழ்க்கையின் வாழுவாள்
சாதுசற்குணப் பின்னவன்மிசைச் சார்ந்தவன்பின ளாமரோ. ௩

நீதியாலுயர் கல்விகற்றனன் முன்றவப்பய னீடவே
யாதியாருரை பத்திவாய்மை யடக்கமின்சொ லறத்தியல்
சாதியாதன வாற்றுமூக்க நிறைந்துசந்திர வேணியான்
பாதியாளருள் சத்தியைங்கரன் பற்றுமிஞ்சின னையனே. ௪

மண்ணிலேவரு நேருமாகுர வன்சொல்வாய்த்து மதித்துமே
யுண்ணிலாவகை தட்டழிந்துள மொன்றிடாம லுழலுவார்
கண்ணினுவிது கண்டுதேசிகன் காட்டிடாவுரு நெஞ்சினு
லெண்ணினுன்கண் ணிறுத்தினனெனி னீதுமுன்றவ மென்பதே.

## வே று.

தழைந்தமெய் யையனற் றரிச னங்கொளக்
குழந்தைமுத் தானந்தக் குருச்சு ரண்டையான்
றழைந்தபஃ றலங்களுங் கண்டு சார்ந்ததை
விழைந்திவண் கூறுதல் வேண்டி னேனரோ. ௬

## வே று.

திருக்குற் றுலஞ்சென் றுடித் தேவனை
விருப்புற் றுய்மறை விதித்த வாதொழு
தெருக்குச் சூடினு னிசையு மன்பர்தா
ளுருக்கத் தோடுகண் டுறைந்து நீங்கினான். ௭

தத்து நீள்புனற் சாரும் பாவநா
சத்தி லேகினான் சாமி தாண்மலர்
பத்தி யேத்தினான் பரமன் வெஃகுறு
நித்தி நாரிவாழ் குமரி நேர்ந்தனன். ௮

## வே று.

அன்னவ ளடிமல ரஞ்ச லித்துவேண்
முன்னவன் வாழலை முழங்கு செந்திலென்
னன்னகர் தனின்மிகு நண்பொ டேகியே
பொன்னெடு வதனமா ரம்ப மூழ்கினான். ௯

கழிவரு மன்பினன் கரைந்த நெஞ்சினன்
விழிதரு மருவியன் விண்ணு ளார்பகை
யழிவுற முனிந்துள வறுமு கத்தனும்
வழிபடு கடவுளை மனத்தி ருத்தினான். ௧௦

## வே று.

செந்திற் குமா னிலைநீறுங் திகழு நறைச்சந் தனமுமுயர், கொந்திற் குலவு மலர்த்தாருங் குளிர்கொண் டிலகு தீர்த்தமுங் கைத், தந்தற் புதமா மறையவர்சொற் றகவாராசி தாவேற்று, வந்தித் தருளு மடைந்துபின்னர் வடபாற் பொருநைச் சங்க மத்தே. ௧௧

அடைந்து மறையோர் கொடுத்தசா வணியை யணிந்தன் னவர்கூறுங், கடைந்த வமுதின் சுவையுடைச்சங் கற்பம் விதந்து கூறிவரம், பிடைந்த பணில முமிழ்ந்தமணி யெங்கு மொளிருஞ் சலதியிடைக், குடைந்து மகிழ்வுற் றதினீங்கிக் குளிர்கா றிருமந் திரநகர்க்கண். ௧௨

வந்து போந்து சிவன்மலர்த்தாள் வணங்கி மகிழ்கூர்ந் தஞ் செழுத்து, வந்து தேர்ந்த மனத்திடையே மன்ன நினைத்து வழி கூடித், தந்து நேர்ந்த விடைமடவார் தார்கொய் மலர்ப்பட் டினமருதூர், தந்து சார்ந்த கழகமமர் தகைசால் வீதி மிசையுற்றான்.

கண்டான் விளையாட் டயர்சிறுவர் கணத்தி னுப்பண் களிமுகத்துத், தண்டா மரையின் விளக்கமுடன் சமமா தியமுன் பழகிவிட்ட, வெண்டா னிருக்கு மிதயமொடு மெழில்சே ரையம் பெருமாளைத், தொண்டான் மிகுமெய்ச் சீடனிவன் சொலலா மறையென் றுளமதித்தே. ௧௪

## சற்குரு தரிசனச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௧௭௪.

# உபதேசச்சருக்கம்.

கண்ணினுற் பயிலைக் காட்டி கயமுகன் வடபாற் கோயி
னண்ணியார்த் தியிமே னுடிந்த நலங்கிள ரையன் றன்னை
யெண்ணினுற் பார்வை தன்னு லியற்பரி சத்தால் மூன்று
மண்ணிடாத் தகவு செய்தாங் கறையலுற் றனன்மேன் மாதோ. ௧

விதிமறை வழியே யாதும் விடாதநல் வணக்க மாதி
மதிநிறை வாளன் செய்கை மகிழ்வினைப் பெருக்க லோடுங்
கதிதரு ஞான மார்க்கங் கழறிடு மறையி னுச்சிப்
பதிதரு பாதப் போதார் பயனிது கேட்டி யென்றான். ௨

என்றலு மகிழ்ச்சி மீக்கொண் டிருவிழி யருவி காட்டி
நின்றவன் முகத்தை நோக்கி நீயுனை யறியென் றைந்தும்
வென்றவன் மலர்த்தாண் மீண்டும் வணங்கிய விழைவி னானை
நன்றடை காத்து வெண்ணீ றளித்தன னலத்தின் மிக்கோன். ௩

உன்னுட லிதுநீ யன்றென் றுரைத்ததை யுணர்ந்து கொண்டான்
பின்னவ னுயிரு நெஞ்சு மன்னமீத பெட்பென் றோத
வின்னது மறிந்தான் புந்தி யானந்த மிலைநீ யென்றான்
சொன்னது மனத்துட் கொண்டான் றூயநல் லொழுக்க மிக்கான்.

சீவர்க்குப் பொதுவாந் தூக்கத் திறனெனு மூலந் தன்னில்
மாவர்க்கத் திறையுண் ணுட்ட மகதத்து வத்தி னின்றுங்
காவர்க்கத் தொளிபோன் வந்த கன்னிலை யலைவொ டுக்கம்
மூவர்க்கக் குணமு மாகு மென்றனன் முழுது மேற்றான். ௫

## வே று.

முதல்வரு குணத்தில் வத்துவின் சாயை மூந்துறு மீசனு மென்பர், மதனுற மிகுக்கு மொவ்வொரு நிலையு மால்சிவன் விதி யென வுரைப்பா, ரிதனடை வதற்காச் செங்குண மிசையே வெண்ணிலாச் சீவர்விம் பங்கள், விதமொடு வகுத்தற் கண்டங்கள் பொறுத்த விறலுடைக் கருங்குண மாமே. ௬

துஞ்சிடு நிலையி லீசனுக் கொருபேர் சொல்லுவ ரந்தரி யாமி, யெஞ்சிடு முயிர்க்குப் பிராக்ஞனென் றுரைப்ப ரிவ்வுயிர்க் கிரங் கிய வீச, னெஞ்சினி னினைக்கத் தாமத மிரண்டா நிகழ்மறைப் பொடுவரு தோற்ற, மஞ்செனக் கணிக்கும் பூதங்க டோற்ற வருஞ்சத்தி தாவாளி யாமால். ௭

வந்தவிவ் வைந்திற் குணநிறைந் திருக்க மற்றது பொதுத் தனி வகுப்பான், முந்தவெண் குணத்தின் ஞானமார் கருவி முளைத்திடு மஞ்செனப் பொதுவிற், றந்தது மஞ்சா மனமுதற் கா ணஞ் சாற்றிடு கணவெனு னிலைக்குப், பிந்திய குணத்திற் பத்து மாய்ச் சேரும் பேசுவா மத்திறப் பெருமை. ௮

செங்குணப் பொதுவிற் கால்வரு மைந்தாய்த் திகழுமைந் தாய்த்தனிப் பாகந், தங்குறு கருமக் கருவியாய் நிலையிற் சாற்றி றை யிரணிய கருப்பன், பங்கமில் சீவர் தைசத ராவர் பாதியி னுன்கினைப் பகுத்தே, தங்குதன் கூறு விட்டுறச் செய்வான் சம் பதி லண்டது லமுமாம். ௯

இந்தமா நிலையிற் சீவர்கள் விசுவ ரிறைவிராட் டென்பரான் மேலோர், தொந்தமார் புவியி லனந்தகற் பங்கள் சுழன்றனே யிம் முறை தோன்றிப், பந்தமே யகலப் புண்ணிய கருமம் பயின்று பின் யோகமார்க் கத்தில், வந்துநீ சின்னா ளங்நிலை முயன்றாய் மற்றது முரைத்து நாங் கேட்டி. ௧௦

நாலிதழ் மூலக் கயமுகக் கடவு ளுதனை முயன்றபின் றுன, மேலில காறிற் பிரமனை வெகுநாள் விண்டுவைப் பத்தினி லஃதே, நூலிசை யுருத்தி ரனையிரண் டாறி ளுற்றிரண் டெட்டினின் மகேசன், பாலினி தாற்றி யிரண்டிலைந் தனைநீ பாவனை செய்தனை பயின்றாய். ௧௧

ஆயிரந் தளத்தி லரும்பொருள் குறித்தா யஃதிவண் முற்றி டற் காக, மாயிரும் புவிக்கண் வந்தனை யதுநீ யாகினை யெனமறை வழுத்துந், தூயவின் சொலினுற் சொல்லுது மென்று தத்துவ மசியெனச் சொல்லி, மேயவங் குரவன் றுண்மலர் பணிந்து மீள வுஞ் சிற்சில வினவும். ௧௨

என்பெருந் தவமே திருவுரு வெனக்கொண் டெழுந்தருண் மூர்த்தியே யினிதார், நின்பெருஞ் சொலினு லுணர்ந்தன னெ வையு னிகழ்சிருட் டிகண்முத லியற்றும், வன்பெரும் பரனோ டறிவிலாச் சீவன் மன்னுமா றறிதர வருளென், றன்பெனுஞ் சலதி யகத்திடை யுடையா னையனுங் கேட்டன னம்மா. ௧௩

மூவகை யான விலக்கணை யுளது முரணுறும் பதங்களின் பொருளை, மேவரு மாய வவைவிடா ததுவும் விட்டது மிரண்டுஞ் சேர்ந் ததுவும், பூவரு நீரார் கங்கையிற் சேரி விட்டதாம் போ னது வெண்மை, நீவிட லாகா வெனவறி விட்டும் விடாததே நிக ழுவ னிவனும். ௧௪

ஒருபது வருட முன்னரே பார்த்தோ னுற்றிட வுடல்வளர் வொதுக்கித், திருமுகம் விலகல் விடாமலே பார்க்கிற் றேறலா மவ னிவ னெனவே, பெருவலி முதலாந் தத்தெனும் பதத்திற் பிரித்த பின் பேர்கலா வறிவை, யுருவமு மதியு மற்றது நீத்த வுயிர்க்கறி வொன்றுமென் றுணர்வாய். ௧௫

அதனுடைப் பொருணீ யதுவல திலீனீ யதுதா வந்தனீ யதிலே, யிதமுறப் பொருந்தித் தனையகன் றிப்பூ விருக்குனீ யிராதுடன் கலக்கும், பதமதிற் புணரும் பான்மையு நீயே பாரெனப் பசந்திட வையன், சதமுடைப் பொருளாய்த் தனையறிங் திலகித் தன்னிச்சுகச் சலதியிற் படிந்தான். ௧௬

## வே று.

இருவி னைப்பய னீத்த வியல்பினுன்
பருவ ரற்கு மனது படிந்திடான்
றரும னைக்கிது சாற்றுத லின்றியே
குருவி னைத்தொடர் கின்ற குறிப்பினுன். ௧௭

## உபதேசச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௧௯௧.

# உடனுறைசருக்கம்.

அன்னை தந்தை குருவிறை யன்பெலா
முன்ன வின்றிவ னன்றிமற் றென்றென
மன்னு கின்ற மலரடி பின்றொடர்ந்
தன்ன வன்ற னெடுஞ்செல லாயினுன். ௧

தேசி கன்ற னுடன்பல் சிவத்தல
மாச கன்ற மனத்தன் வணங்கியே
யாசி லின்பொடு கூட லடைந்தவா
பேசி னம்பெறு வார்செயல் பேசுவாம். ௨

மதுர வல்லியோ டாங்கு மணாளனுஞ்
சதுர நன்மகன் சென்ற தகைமையா
லிதுவு மென்ன வினையி னியல்பென
மதுவுண் மாந்தரின் மாழ்கினர் நெஞ்சமே. ௩

ஓடு வார்திசைப் பார்களவ் வூரெலா
நேடு வார்நிலை நெட்டுயிர்ப் பார்துயர்
நீடு வார்மக னேமக னேநினைக்
கூடு மாறினி யென்றென்று கூவுவார். ௪

மிக்க நேர்தவத் தார்க்கும் விதுரார்க்கும்
மக்க ளாசை மறப்பரி தாமென
வொக்க நூல்க ளுரைக்கு மிருவர்க்குந்
துக்க நீடிடத் தூக்கம்வந் துற்றதே. ௫

மாரி யொண்பயிர்க் கோடையை மாற்றல்போற்
சேரி ருந்துயர் வெம்மை தெறச்செய்வான்
பாரி யுந்தன் பதியொடு பார்த்திடக்
காரி வந்து கனவிடைத் தோன்றினன். ௬

வைய மீதினின் மைந்தன் பிரிவினு
லைய நீவி ரலமரு வீரலீர்
துய்ய னுமொரு சொற்குர வன்னொடு
மெய்ய னுன்மது ராபுரி மீதுளான். ௭

என்று கூறி யிறைவன் மறைந்தனன்
நன்றெ னுவிழித் தார்க ணகைமுக
மொன்றி னார்திருத் தந்தையவ் வூரைவிட்
டன்றி ராவிடிந் தன்புற் றகன்றனன். ௮

சென்று நீண்மது ராபுரி சேர்ந்தனன்
கன்று நேர்பிரி யாவின் கருத்தினு
னன்று தேர்ந்த குழந்தைமுத் தானந்த
னென்ற மாதவ வேந்தன்முன் னேகினன். ௯

ஐந்த வித்தவன் றன்பணி யாற்றிடு
மைந்த னிற்பதுங் கண்டு மகிழ்ந்தனன்
பைந்தொ டிக்கிது பார்க்கப் பெறுமையின்
சிந்தை வைத்துத் திரியு முளத்தினே. ௧௦

## வே று.

மாதவத்த னடிமலரை வந்துபணிந் தானையுள மகிழ்ந்து நோக்கி, யாதரத்தி னொடுமெழுந்தங் கிருப்பவருள் செய்துவா லாறு சாவி, கோதகத்தி லொழித்தவையன் றனையழைத்துக் கருமத்தின் கூறை யுன்னிற், சாதகத்திற் குறுஞான மில்லறத்தி னொழுகியபின் றழைக்கு மென்றான். கக

அறத்திறத்தின் வழுகிடினு மரசனெறி தவறிடினு மலங்கல் வீர, மறத்திறத்திற் பிறழ்ந்திடினு வருணமுறை யிகந்திடினு வாணூண் முற்று, மிறத்தவத்துப் பயன்விடினு மிலகுபொருள் கெட வரினு மீன்றார் வாக்கின், புறத்திருத்த னலமலவென் றறிவறிந்த புண்ணியர்கள் புகல்வா ரன்றே. க௨

எனவுரைத்த தேசிகன்ற னடிமலரைப் பணிந்தெழுந்தா னிருகை கூப்பி, மனமுருக்கத் துடனின்றான் றேசிகனுந் தந்தை யினை மகிழ்ந்து நோக்கி, நினதுளத்தி லிவனைமக னெனநினைய னிகழ்த்திடுக ஞானி யென்றென், றனகனுக்குச் செலவளிக்க வருள்கொண்ட பின்னிருவ ரகன்றா ரன்றே. கங

## வே று.

கூடலி னுத னடிமலர் தலையிற் கொண்டான்பின்
வாடலி லாத மகிழ்வுடை யோனாய் வந்தான்பண்
பாடலி லாரும் பட்டின மருதூர்ப் பதியில்லிற்
றேடலி னுளுஞ் சிந்தையு ளாடாள் சிரம்வைத்தான். கச

மகவை யெடுத்தா ளாசிமொழிந்தாள் மகிழ்கொண்டாள்
மிகவுயர் நீற்றை நெற்றியி லிட்டாள் விழைமெய்ச்சொற்
றகவுள நாதன் றாடொழு தின்பத் தனிவாரி
புகலுறு தெய்வத் தொண்டரின் மோதப் புகழ்மின்னாள். கரு

காட்டின ஞானக் கடவுளின் வாக்கைக் கவிமன்னன்
பூட்டின வாரப் பொலியிழை யாள்பாற் சொலலோடுந்
தீட்டிய வேலிற் றிகழ்விழி யோடு திறற்சுற்றம்
நாட்டின ரெல்லா ஞானியென் றென்று நவில்வாரால். கசு

இவ்வுரை பெற்றான் வாழ்ந்திடு நாளி லினிதாகச்
செவ்விதி லாயு மாமண முன்னித் திகடாதை
இவ்விடை விட்டே யேகுவ னென்று வெண்ணுற்றான்
கவ்விய ஞானி தன்னொடு ரைத்தான் களியுற்றான். கஎ

## உடனுறைசருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் உ0அ.

# மணவினைச்சருக்கம்.

கோலமேற்ற மலைய மலையெலை கொண்ட நற்கள வாரணி யந்தனிற், சால நீட்டிசை மாதவப் பண்டிதன் தன்னி லுற்றுத் தவப்பய னுமுயர், நீல மாற்று விழியுடை மாதுபேர் நேய மாச்சொ றிமிரதி வர்த்தினி, ஏல வார்குழற் கன்னியை யென்மகற் கீதி யென்றுரைத் தானவன் கேட்கவே. க

பெண்ணின் றாதையும் பேர்பெறு சுற்றமும் பேணி யொப்பினர் நாட்புக னல்லவ, ரெண்ணின் றேர்வுற வேறெனுந் திங்களி லிருபத் தொன்றெனுந் தேதியி லிந்துவி, லொண்ணுஞ் சீர்தரு முத்திரட் டாதியி லுரிய பெண்மனை யிற்செய் மணவிழா, நண்ணுங் கால மெனவகுத் தாரதை நாடி வந்தனர் ஞானமன் மற்றுளார். உ

வந்து ளார்களை யேற்றெதிர் கொண்டனர் மாத வப்பண்டி தன்னுயர் மாளிகை, தந்து சேர வுபசரித் தார்பந்தற் றன மாகு மணவறைக் கானட்டு, நந்து வாளை கமுக்க ணாட்டியன் னுளின் மங்கள வாத்திய மோங்கிடப், பந்து நேர்முலை யார்குர வைத்தொனி பாட லும்பல வாசிகள் கூறவும். ௩

தகவு சாலர சாணிக்கா ணாட்டியே சாலு டன்கரந் தண்ணீரும் வைத்தனர், மிகவு மோர்மறை வேதியர் சொற்படி வீறு மங்கி வலஞ்சுழித் தோங்கிடப், புகலு மோமம் வளர்த்து விநாயகர் பூசையாதி கிரிகைக ளாற்றினர், நிகரி லாத மணியுறு மாதொடு நேர்மணாளன் மணவறை சேர்ந்தனன். ச

காப்புக் கட்டினன் வான்புவி யங்கிநற் கான மாமறை வேதி யர் சான்றதா, மூப்பிற் றக்கவர் சொல்வழித் தாரைநீர் முன்கை யீந்து முழங்கிடச் சங்கமும், யாப்புப் பெற்றிறுக் குந்துந்து பித் தொனி யாழு மோங்கிட லக்கின நண்ணிடப், பூப்பற் பன்மக ளீர்க ளிறைத்திடப் பூட்டி ஞன்கடி சூத்திரம் பொன்னினே. ரு

தைய னற்கரம் பற்றினன் ஞானிநூல் சாற்று மோமத் தனியழல் சுற்றிஞன், கையி லுற்ற பொரியு மிறைத்தனன் கால்பி டித்தம்மி யேற்றி யருந்ததி, மெய்யெ ழிற்கனி கண்டிடக் காட்டி னன் வேத வேதியர்க் கீந்து மனேயிற்புக், கைய னற்கவி வாணர் வழுத்திட வானந் தித்துச் சிறப்பு நடக்குங்கால். சா

என்ன காரண மோதெரிந் தாமிலே யிம்ம னேக்கண் ணிருந் திடு ஞானிமன், றன்னே யாவருங் காணப்பெ ருமலே சவையி னல் லுரு வத்தை மறைத்தனன், பின்னே யூரிலு ளாருமிப் பேய்மகன் பேணு வான்கொலிப் பெண்ணே யளித்திரேன், றன்ன வாசகஞ் சொல்லு மளவினி லறிந்த வன்னேபி தாமன மாழ்குவார். எ

வாய்த ருஞ்சொல்வ ழுங்கப்பொ ருமலே மங்கை நல்லெ ழின் மூத்தம்மை கூறுவா, ளாயி லன்ப ரறிவ ருனேயலார் ரறிகி லாரறி வேனுனே யெம்பிநீ, மாயி ரும்புவி யோர்வசை நீங்கிட மகிழ் வெனக்குற வந்தருள் செய்யெனத், தாயி னுங்கனி தன்மையட் காகவுந் தக்க வற்புதங் காட்டவுந் தோன்றிஞன். அ

வந்த ஞானமன் மூத்தம்மை யாளுக்கு மனம கிழ்வுற வாச கஞ் சொல்லிஞ, னந்த மாநக ராரு மதிசய மாகி ஞர்தின மூன்று மகன்றபின், சிந்தை யாரநீ ராடிஞன் காந்தினஞ் சிவிகை மீதின கர்வலஞ் செய்வித்தார், கந்த மாமல ராளெழில் கண்டவர் கண்க ளித்துக் கழறின கூறுவாம். சுூ

மங்கை யாண்முக மோவிந்து தானென்பர் மதியிற் பாதி நுதலெனச் சாற்றுவார், கொங்கை யோமலே யாமென்று கூறுவார் கூர்வி ழிக்கிணே வாரிதி யேயென்பர், சங்கை யோவிலே சங்கங் களமென்பர் தாவி றுப்பி னிதழழ காமென்பர், நங்கை தோ ளிணே வேயென்பர் பூங்குழல் நறையி யற்கை நலமென்று சொல் லுவார். கo

மணம கன்ற னழகினைக் கண்டவர் மாலி னற்குணத் தானிவ
னென்பாரற், கணநி றைந்தறத் தானுரு வாக்கியே காட்டி னான்
விதி யென்பர் கருணையே, தணவி கந்த விருவிழி யென்பர்கைத்
தாரு வைவெலுஞ் சால்புடைத் தாமென்பர், நணவி ரும்பின் மடல்
வரைந் தாலுமின் னம்பி பேரெழி னாட்டற் கரிதென்பார். ௧௧

இப்ப டிப்புவி யோர்க ளிசைச்சொலா விவளி வர்க்குப்
பொ ருந்தின ளாமெனச், செப்பி டப்பவ னித்திற மானபின்
சீருங் கொண்டுபெண் ணோடும் பலர்சுற்ற, வொப்பி டற்கரி தாம்
பட் டினமரு தூரில் வந்தன னங்குசின் னாட்செலத், தப்பி றத்
தவ மாற்றந லிற்றடை தானெ னாமுன்னி னானக மீதரோ. ௧௨

**மணவினைச்சருக்கம் முற்றிற்று.**

ஆக விருத்தம் ௨௨௦.

# நிட்டைநிலைச்சருக்கம்.

சங்கற்ப முறுகின்ற வுலகோ டிருந்துஞ் சலிப்பொன்றிலா
னிங்கற்ப மெனினுஞ் சுகப்பேறு நிலையன் றெனத்தேறுவா
னங்கற்ப மிகுகின்ற தவநாட ருறைகின்ற வகநாடியே
பொங்கற்ப றனிழுத்த வழிவந்து நெட்டூர்ப் புகுந்தானரோ. ௧

அம்பா மெனுங்கண்ணி முத்தம்மை யகம்வந்த னாளாற்றிடு
சம்பா வனங்கொண்ட பணிகொண்டு சம்பா வனங்கொண்டனன்
தம்பா லறங்கண்ட மனையாளை யுங்கொண்டு தாயார்விட
கம்பார மென்றஞ்சி யகம்விட்டு முச்சந்தி கண்டுற்றனன். ௨

முச்சந்தி வழிவேலி யயலே யிருந்தான் முழங்கோன்மறை
நிச்சந்தி கழவோதி யறியாத நிகரற்ற நிலையாகியே
யச்சந்தி னையுமில்ல தாமா திரண்டென்னு மறைபோதமீ
துச்சந்தி சைகனக ரணிமாதி யடிபோற்ற வுற்றானரோ. ௩

பேர்கின்ற சுழியான முனைகண்டு களிகொண்டு பிரியாதவூர்
நேர்நின்று நடுநாசி நுனியோடு வழியான 'நிழல்வாய்நடஞ்
சார்கின்ற சிவஞான விழிகண்டு காசிப்பு னன்மூழ்கியே
பார்வந்து சிவமேவு சபைகண்டு பகையற்ற பண்பார்ந்தனன். ௪

மாநகர் தொழுகின்ற தாள்போற்றிவழர்பாழ்கண்மூன்றென்றுமே
தானுடி யதுவிண்டு கணவாய் வழிக்கட் டணைந்தப்புறம்
மானுத வணைநல்ல வருள்கொண்டு முகமேடறி வந்தென்றுமே
யானுத மணிமேடை யானு ரடிக்கண் ணமர்ந்தானரோ. ரு

## வேறு.

கூடு மாமுலா யும்பரார் வந்துபுற் றுக்கிக்
குறித்த நீண்மழை வெயிற்றடை செய்திடக் குலவி
நீடு மாதவன் பெருமையை யார்கொலோ வறிவார்
நேய மாருமுத் தம்மையோ டெழின்மனை யவடான்
சேடு நீள்பெயர்த் திமிரநி வர்த்தனி போற்றிச்
சேண்பெய் வெயினி வர்த்தனி யாகினுள் படத்தா
லூடு வானுக முகத்தினில் வெயிற்படா தொதுக்கி
யுள்ள வன்பினு லாற்றியே பணிவிடை யுகந்து. சு

இவர்வெ யிற்றணி வுற்றபின் னிடம்பெயர்ந் தேகி
யினிது தண்புன லாடியே யில்லடைந் தோர்காற்
றுவா நற்பசிக் கனஞ்சமைத் துண்டுறங் காமற்
றேத்தி ரந்தம வழிபடு கடவுளைச் சொல்லி
தவறு தற்கிடம் வைத்திலர் தினந்தொறும் பேணுந்
தன்மை யாளரிவ் வகையொழுக் கமையவப் புற்றுஞ்
சுவறு மப்பெருந் தூத்தவன்சிர முந்தெரி யாது
சூழ்ந்த தாலவ் விருவருந் தூயர்மிக வுற்றார். எ

வந்து வீட்டிடை யிருவரு மன்னியை யாறு
மாத ராந்திரு வுருவினைக் கண்டன மறைந்த
திந்து போற்றெளி திருமுக மினிச்செயு மார்க்க
மென்ன வென்றுணர் கிலமென வெண்ணின ரெண்ணி
நந்து மாற்றல்கொள் கயமுகக் கடவுளை மனத்து
நன்கி ருத்தியே தவம்புரி குதுமென நவின்றே
பந்து நாட்டிய முலையவ ளுண்டியில் பாற்றிப்
பத்தி யோடுபா சித்தனர் மண்டல மொன்றே. அ

செய்த வத்தினுக் கிரங்கியைங் கரனெனைக் காத்த
செல்வி முத்தலை யாடனைப் பார்த்திது செப்பு
மெய்தி யித்தினஞ் ஞானிபா லில்லறத் திருக்க
விசைத்து வாவென விடுத்தனன் விடுத்தலு மென்னை
மைத விர்த்துயர் ஞானிபால் வந்தனள் வகுத்தாள்
மற்ற தாங்கொளா தசைவற விருந்தவா வறிந்து
கைகொ டுத்தணி வானுகத் தோடுமென் னவனைக்
கடவு ளைங்கரன் சித்திர நதியிடைக் கவிழ்த்தான். கூ

ஆற்று நீரினுற் புற்றுமண் ணடங்கலுங் கரைய
வங்க சீதளம் பிறந்திட நிட்டையை யகன்றான்
மாற்றி டாவலி யதுபிரா ரத்துவ மெனநூல்
வழங்கு மவ்வினை வந்தடைந் திடச்சிவ ஞானி
யேற்றி னேடருஞ் சுரபியு மேய்ந்திடு மிடத்தி
லெய்தி னான்கரை யேறினான் றறியிடைக் காணத்
தோற்றி னனதை மும்முகத் தாள்மட வார்பாற்
சொல்லி யாடைகொண் டேகுமி னென்றனள் மறைந்தாள்.

என்ற வாசகங் கேட்டலு மேந்திழை யார்க
ளேர்கொ ளாடையொன் றனுப்பினர் தம்பெகு மில்லை
மன்ற லோடுற வணிசெய்து ஞானியின் வரவை
வழியி னின்றெதிர் பார்த்திருந் தனர்மனத் தன்பாற்
சென்ற வாடையை யீந்தவ னேடக முற்றுச்
செய்த வந்தனை முதலிய வேற்றனன் றிகழ்ந்தா
னன்ற வாயிடை மாதரும் நகரினுள் ளாரு
மடைந்தி டுங்களி யாவரே வகுத்திட வல்லார். கக

## வேறு.

மன்னுநான் மறைமொழிப் படிவெண் ணீற்றினை
மின்னனார் நுதன்மிசை மிளிரத் தீட்டினான்
பொன்னினு ரனைதனைப் பார்க்கப் போயினன்
மன்னினு னூர்தனின் மாத வத்துளான். கஉ

வந்தவன் வணங்கினன் மதுர வல்லியுந்
தந்தன ளாசிக டனையன் றன்னொடு
முந்தையர் முறையினின் முயல்க வில்லற
மந்தமி றவப்பய னடைதி யென்றனள். கரு

என்றவள் வேலினை யெடுத்துக் கைகொடுத்
துன்றனிப் பூசனைக் குகந்த தாமென
நன்றினை யிழைப்பதை நாடி வாங்கினு
ளொன்றியில் லறவுறை வொப்பி னனரோ. கச

ஒப்பிலர் புகழுநெட் டேரின் வந்தனர்
துப்பிதழ் வல்லிகட் டுணைநி கர்த்தவேல்
செப்பிய கிரௌஞ்சிறைவி டுத்தவேல்
வெப்பிடர் விண்ணிக மிளிரும் வீரவேல். கரு

துதித்திடுந் தொண்டர்க டுயரந் தீர்க்கும்வேல்
விதித்திடு விதியினை விலக்கும் வல்லவேல்
கொதித்துறு வல்வினை குறைக்கு நீடுவேல்
மதித்தவ ரெண்ணினின் வயங்கு செய்யவேல். கசு

வழிக்கொரு துணையென மன்னு மன்றல்வேல்
அழிக்குமி யமனையு மகற்று கின்றவேல்
பழிக்குயர் பதுமனைப் படுக்குந் தீரவேல்
வழுக்கினு நாவினில் வழாது நிற்கும்வேல். கஎ

சிந்துநீர் சுவறிடச் செய்யு மாலவேல்
வந்துசே ரசுரர்தம் வாழ்வை யட்டவேல்
கந்துபேர் கயமுகன் கல்வி ளேடிற
முந்துபோர் செறுமறு முகவன் செங்கைவேல். கஅ

## வேறு.

மாற்று யர்த்தபொனை யெற்றி விட்டெறியும்
வாய்த்த சித்திரந திக்க ரைக்கருகி
லாற்று மெய்த்தவர்பு கழ்ச்சி யுற்றுளிர
வார்த்தி வைத்தமரர் கற்ப கத்தின்மலர்
தூற்ற வித்தரையி டத்து தித்தவர்க
டோத்தி ரித்துஞரு கப்பி றப்பிரிய
வேற்ப டைக்கடவு ளைப்ப திட்டைசெய்து
மீக்கொ ளற்புதம கிழ்ச்சி பெற்றனனரோ. கசு

சாற்று தற்கரிய சுத்த மிக்கவலர்
தாட்டி கத்தொடும னத்தி லுற்றநிறை
வாற்றி நற்றொடைக ளிற்சி றப்பிலக
வாக்கி யிற்கண்மிசை பெற்ற தப்பிலன
நோற்ற லுற்றபடி வைத்த ளித்துமகி
ழூற்கண் முற்றுமவர் சொற்றெ ளித்தவுரை
போற்றி யர்ச்சனையி ழைத்து மெய்த்துதிசெய்
பூர்த்தி யிட்டமிகு பொற்பி னிற்குமவனே. உ0

## வேறு.

### சந்திசட்கம்.

உலகுபுகழ் கின்றசெய லில்லா ரேனு
முண்மைதனை யறியும்வழி தெரியா ரேனு
மலகிலற னியற்றுவதற் காகா ரேனு
மரியதவ முயற்றுபவ ரல்லா ரேனுங்
கலகவிழி மடவார்த நடையைப் பார்த்துக்
கற்கவனம் வருநெட்டூர்க் கந்தன் கைவாழ்ந்
திலகுவடி வேல்காணப் பெற்று ராகி
லிருவிசும்பி லெந்நாளு மிருக்க லாமே. உக

வெய்யபவ முன்னாளிற் புரிந்தா ரேனு
மிகுநூலைக் கல்லாத மூட ரேனும்
பையரவ முடியானைப் பணியா ரேனும்
பலபலவா தத்துழலும் படிற ரேனுந்
துய்யமகத் தெழுபுகையை மாடங் காலத்
தோன்றகிலின் புகைமறைக்கு நெட்டூர்க் கந்தன்
செய்யவடி வேலினைவந் திறைஞ்சப் பெற்றார்
சேணாட்டி லகலாமற் றிகழ லாமே. உஉ

புகலணியோன் மறைவழியே யொழுகா ரேனும்
பொல்லார்கட் பகலவொணாப் புல்ல ரேனுஞ்
சிகன்மதியா ருளமுடைய சிறிய ரேனுஞ்
செல்வமது திருத்தொண்டிற் சேரா ரேனும்
பகனகுசீர் மணிமாடம் பாட்ட றாது
பைந்தொடியார் நவினெட்டூர்க் குமர னுய்ப்ப
விகலடுவேற் படைத்திருமுன் னுற்று ராகி
விழியாம விருந்துவிண்ணை யாள லாமே. உங

பன்னுமடி யரைப்பணிபண் பறியா ரேனும்
பசியுடையார்க் கனமீயப் பெறாதா ரேனுந்
துன்னுநிலை சொலுங்குரவற் குதவா ரேனுந்
தூயநடை யுலகவழி யறியா ரேனு
மின்னுமதி மடவார்கன் றதிரப் பாடும்
மிஞிறுடைக்கா வளைநெட்டூர்க் குமர னங்கை
மன்னுவடி வேற்படையை யிறைஞ்சப் பெற்றால்
வானுலகி லகலாது வாழ லாமே. உச

களிபெருகப் புகலுமுறை கல்லா ரேனுங்
கண்டவுரு மனத்திருத்தக் கனியா ரேனும்
வளியுலவு வாசிமுறை பழகா ரேனு
மகமியற்றிப் பேறடைய மதியா ரேனு
மளிமுரலப் பூகமிசை பாயும் வாளை
யகன்றடஞ்சூ ணெட்டூரின் குமரன் பால்சேர்ந்
தொளிதிகழும் வேற்படையை வணங்க நேரி
லும்பரா சடைந்தென்று மோங்க லாமே. உரு

நன்றிமிகு தொழிலறிந்து செய்யா ரேனு
நுடுமுயிர்க் குதவியிலாச் சிதட ரேனு
மன்றினுயர் மகவுபெறா மக்க ளேனு
மலமூன்றுந் தவிர்க்கவெண்ணா மதிய ரேனும்
பொன்றிகழ்கட் கறையர்கல னுதை வேதம்
புத்தேளிர்க் கவிநகைசெய் நெடடூர்ச் சேயின்
வென்றிதரு வேற்படையைப் பணியப் பெற்றால்
விட்கரசா யெந்நாளு மேவ லாமே. உசு

## திட்டைநிலைச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் உசசு.

# இல்லறச்சருக்கம்.

தன்மவன மாதுலர்க ளாதிவரு வார்களொடு சார்புற வருந்தி முனநீள், கன்மவினை யீடுகெட நாளுமனை யாளினொடு கந்திலற மேவி யறிஞன், வின்மதனொ டேரிரதி போலமரு விக்களிகொண் மேன்மைபெற வாழ்ந்து வருவா, ளின்னவகை யேழுதின மாய துத வும்பெரிய ளெண்ணின்வழி யேயொழுகினான். க

மாதுநடை கூறுதுமி வாறொழுக வல்லவர்கண் மக்களெனி னுந்தெய்வமே, ஓதுமுறை நாலுமறை போலுமெய ணற்கருணை யுள்ளமுறை செல்வமெனவே, நாதனது வாணிவெளி யாகுமுன றிந்தமைய நண்பொடுந டத்திவருவாண், மோதுமலை வாரிசூழ் மண்மகளிர் நன்கிவளை முன்னலினி லைப்பர்முலையே. உ

உண்டபின ருந்துவளு றங்கிடவு றங்கிமனு வந்தெழுமு னேயெழுவளா, லெண்டனின் மிகுந்தபணி யாற்றவரி னற்றின மஃ திலையெனின் மிக்கதுனியாள், பண்டனிமி குந்தமொழி யாள்களிப திக்கடைவு பார்த்தறொழி லாய்ப்பரவுவா, ளண்டர் பணி கின்றகுகன் முன்றனியி றைஞ்சியிறை யாயுவளர் நற்றுதி செய்வாள். ங

ஏமொருதி னந்திகழ விவ்விருள கற்றியனை யெய்தினள்க ருப்பமதிதாய், வீழருண லம்பெருகு பெண்மகவு பெற்றனையின் மேதகுபெ யர்ச்சொலிசையா, சூழவரு மாதரு முரைத்தனர்க ளம்மகவு தூய்மதி யென்னவொளிர, வாழவொரு தெய்வமெனு மெய்க்குகனை யெண்ணிமன மாமகிழ்வு கொண்டனரரோ. ச

இவ்வணனி கழ்ந்துசில நாட்செலவொர் பெண்ணுதவி யெனைக்காத்த வன்னையெனவே, யொவ்வுபெயர் கொண்டழைத ருந்தகவு டன்பொலிய வுட்களிபி றங்கவளர்கால், செவ்விதட ரந்தனமு றும்பருவ மொன்றவிவர் சேய்மதார வல்லிதனையே, நவ்விகளி ணங்கிவிளை யாடிடுக ளந்தைநகர் நன்மணமு ஞற்றிவிடவே. ரு

## இல்லறச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் உருக.

# துறவறச்சருக்கம்.

இல்ல றத்தினைவி டுத்திடவெ யெண்ணுசெயலான்
சொல்ல றத்தியற வாதவுயர் தோகைதனைநே
ரொல்லு றத்துறவ றத்திறனி லொன்றவுளநா
ணல்ல வித்தினமெ னப்பகர நாரியிசைவாய். க

முன்னு தித்தவளை நோக்கியொரு முற்றுரைசெய்வா
னென்னு தித்துளவி ளங்கனியை யின்புபெறநீ
புன்னு தித்தமக னுக்குமண மோத்துமுறையே
மன்னி டத்தகுவ தென்றனனன் மாமகிழ்வொடே. உ

என்று கூறிமனை தன்மையினி லெற்பணியெடா
வொன்று சேரமக ளுக்கணிய வுள்ளவுணர்வா
ணன்றி தாகுமென வந்தமுறை நண்பொடுசெயக்
கன்று கையரிவை கைப்பெற வளித்தனரரோ. ந

அண்ட ரும்பணிகொ ளாலமழை தூவுமமைவும்
பண்ட ருங்கிளவி யாள்குடியின் பண்பிவையெலா
மெண்ட குஞ்செயனி னைந்துருகி யென்புநெகவே
கண்ட தும்பருவி யன்பொழுகல் காட்டியதரோ. ச

உன்னி யஞ்சிகையொ ழித்துமன மொன்றியொளியார்
கன்னி றைந்தவுயர் தானையணி கட்டினவளாய்
மின்னி சைந்தமணி யக்கமொடு மேன்மையுறவே
பன்னி வந்தனள்ப ணித்தபடி பண்புபெறவே. ரு

நீற ணிந்தனள்க வுந்திநிலை நெஞ்சினிறைவாள்
பேற ணிந்ததென வந்துபணி பெண்மயிலிடந்
தேற மன்பழைய வேதவுரை செப்பிமலமூன்
றேற லின்றிவிட விட்டபினை மூந்தனனரோ. சா

வந்தொ டுக்கமிசை யோடுகையில் வைத்துரைசெய்வான்
சந்த முற்றதிது சர்வதயை யோடுபரமுஞ்
சிந்தை வைத்தபரி பூர்ணவடி செங்கமலமாம்
பந்தம் விட்டகல ளுதிபலி யேழையனைபார். எ

இப்ப டிப்பலியெ டுத்தயின்மு னிட்டியையவசெய்
தொப்பி டத்தகுமு யர்ந்தவர்க ளுண்டதின்மிகை
யிப்பி றப்பிலுண னின்கடமை யென்றுபணியா
வெப்ப றுத்தநகர் மீதிலுறை கின்றபொழுதே. அ

அன்ன மேற்றயிலி னுக்குதவி யாயுமடியார்
துன்ன வேற்றுமையி லாதபடி துய்க்கவருள்வான்
மன்ன வேற்றணிவி லோதனனை யுள்குகுரவற்
றுன்னு மார்த்தியை யியைந்தனனு ளத்திலிவனே. கூ

துறவறச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் உகூ0.

# குருபரிபூரண தரிசனச்சருக்கம்.

தேசிக னடைவைக் காண்பான் சென்றிட மனத்துட் கொண்டான்
பாசிழை விடுத்த மாதைப் பார்த்தியான் வருங்கா றிந்தத்
தேசிய விகல்வேற் பூசை செய்யென நிறீஇப் போந்து
மாசினின் றகற்று நீத்த மாமலைச் சாரல் புக்கான். க

சங்குகை தாங்கி மாவிற் றவத்தினை விளைத்து மேல்போ
யங்குர வரைநேர்ந் தோது மவரின்மா வரிசேர்ந் தாகிக்
கங்கினை யறுத்தெல் லொத்துக் கணைமிகுந் தமரர் கோனிற்
பொங்ககிற் சந்தஞ் சூழும் பொதிகைநின் றிமைக்கு மன்றே. உ

இன்னமா மலையின் பாங்க ரெழிலுறு மன்னுர் கோயி
றுன்னினன் வாவி னுற்றிற் றுணைவிழி வைத்த மேலோன்
பன்னுமா மறையின் கூடம் பதித்தவன் பாதப் போதின்
மன்னிநே ரிருகண் சாத்தி வணங்கினன் மகிழ்ச்சி மிக்கான். ஙு

அன்பினு விழிகண் ணீரா லடிமலர் கழுவினனை
யின்பினு னெழுக வென்ன வெழுந்தவ னுதலின் மீது
துன்பெலா மறுக்க வல்ல தூயவெண் ணீறிட் டன்னு
னென்பெலா நெகமலர்ந்த வெழின்முக நோக்கிச் சொல்வான். ச

நல்லவா கமங்க ளோது நணுகுநெய்க் கும்பம் வன்னி
யொல்லுரு முன்ன மெல்ல வுருகுதல் போலப் பாவ
மெல்லவாய்க் குரவன் கிட்ட மெலியுமா லெரியுங் காட்டம்
புல்லுமே லுருகியோடல் புரையப்புண் ணியனேக் கத்தால். ரு

பாவப்பஞ் சரங்க ளேகும் பாவகன் சேர மாசு
கோவப்பந் தனத்தி னீங்குங் கொள்கையின் குரவன் சேர்க்கை
தாவப்பஞ் சனஞ்செய் தோட்டுஞ் சனனத்தை யாத லாலே
தேவப்பங் கயனை மாலைச் சிவனைத்தே சிகர்க ணோர்வார். சா

ஆனபான் மையினு வுள்ள மாதியாற் பிழைக்க லாகா
ஞானமார் குரவர் தம்பா னண்பொரீஇப் பிழைப்பி னுயுள்
வானமார் செல்வ மேதை மாண்டநற் கருமமாய
வீனமா யொழியு மென்பா ரினியன வகுத்துச் சொல்வாம். எ

காணவே கனித லன்னான் கடவுளென் றேர்த னித்தம்
பேணியே துதித்தல் சீர்மை பேசுங்கால் விழிநீர் காட்டன்
மாணவே புளக மேற்று மயிர்சிலிர்த் திடல்சிந் தித்த
லேணவாந் திசையை நோக்கி யிருகரங் கூப்பித் தாழ்தல். அ

சொன்னிலை நிற்ற லென்பர் தூயவ பிழைப்பி லாதாய்
முன்னிலை முனிவ ராதி மொழிந்தவப் பானனந் தத்தே
நன்னிலை யுடைமை யாகி நழுவிடா திருத்த லானீ
யென்னினும் பெருமை கொண்டா யென்றன னழுக்கி லாதான். கூ

அப்பரா னந்த னென்ன வறைந்திட வுலக முன்னைச்
செப்புநீ ளனேக சித்தி சேர்கவெண் டெரிந்து வந்தா
யொப்பிலா வுவகை கொண்டா முயிர்பர னோடு மொன்ற
மெய்ப்பரா னந்த நிட்டை வீடடை யமைய மென்றான். க0

என்றலுந் தொழுது சொல்வா னின்னக ரடிக ணிட்டை
யொன்றுறும் படிதேர்ந் திட்ட வுண்மையே தெனவுங் கூறும்
நன்றுநின் வினவ லென்று நகையொடு வகுப்பா னீது
மன்றலந் தெரியன் மன்னன் மான்மிசை யன்பு வைத்தோன். கக

THE MADURA TAMIL SANGAM ௫௧

# குருபரிபூரண தரிசனச்சருக்கம்.

வாய்மொழி யணிவ குத்த மன்குல சேக ரன்பேர்
காய்மொழி யறியா னென்றுங் கனிமொழி மொழிதல் செய்வா
ணாய்மொழி யுலகங் கூறு மருமறை யென்ன வன்னோன்
றாய்மொழி கடவா னிட்டை யார்ந்துள தலமீ தாமால். ௧௨

இவ்வகை கூறி யாறு மேறியா றாறு நீத்த
செவ்விய நிலையிற் கூடிச் சிவங்கொள வளித்துக் கூட்டி
யவ்வழி யதுநீ யாமென் றறைதரு நெறியே யார்ந்தா
னவ்விடை யையன் கண்டா னத்தினம் வகுத்துச் சொல்வாம். ௧௩

சேரல னாட்டார் கூறுந் திகடொளா யிரத்துப் பத்தாண்
டோரல ரியின்முன் பூநே ரியலசு மதியீ ரொன்பான்
போமர் தேதி பொன்னிற் பெண்புலி யாம்வி சாகம்
நேரடை கால மீதே நிகழ்வினை களையுஞ் சொல்வாம். ௧௪

குருநாத னடைந்த மாற்றங் குவலயத் தடியர் தங்கட்
கொருநாளி லுணர்த்தி யாங்கே யுருவினைச் சமாதி யாற்றித்
தருவேத முறைவ ழாது தசபகல் வினையு முற்றி
யிருநாலைஞ் சென்னு நாளி லேற்றபூ சனையுஞ் செய்து. ௧௫

புங்கவன் கல்லைப் பாவல் பொருந்துமாத் திரைக்கோல் கைக்கொ
டங்கவன் பாவ நாச மருந்திரி கூட மாதி [ண்
தங்கினன் மீண்டா னெட்டோர்த் தலத்தினி லொடுக்கஞ் சேர்ந்தான்
பொங்கொளி யயிற்ப திட்டை புரிதளி யர்த்த மென்னும். ௧௬

மண்டபத் துள்ளே வைத்தான் மற்றவை வருடந் தோறு
மெண்டகத் தகர்வி சாகத் தியற்றினன் மகேச பூசை
யெண்டகை யாளுந் தானும் பிச்சைகொண் டனத்தை யிட்டு
மண்டல மதிக்க வாழ்ந்தான் வரைகுவஞ் சித்தி மாதோ. ௧௭

## குருபரிபூரணதரிசனச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௨௭.

# சித்திச்சருக்கம்.

நற்றவ னிலையினி லுறுபொழுது நவமிகு கதையுள தது மொழிவா, மெற்றவம் பொழிறிகழ் புறமணையு மிலுப்பையின் மிச் சுத் திரமெனவே, சொற்றரு புரிதனி லுறுமறையோர் தோத்திர மொடுகதி ரடிபணிவார், புற்றமர் தருமிவ னெதிர்நிலையார் பொறற் பென வெனமன மதுகொதியா. க

கற்கலை யிவனுடன் மிசைவீசிக் கண்டன ரவைவில குஞ்செ யரு, னிற்பவ னிலையது தேராராய் நெஞ்சு பயந்திலர் வினைசெய் வார், பிற்படு நிழலென விடலின்றிப் பீடன மடைசெய லுலகோ ரப், பற்பல விடறுகள் வரநாளும் பதியி னிழிந்தனர் தாங்காதே.

## வே று.

நீடு மாதவஞ் செய்ய லுற்றநா ணித்த ஞாதின் வைத்த பான்மையாற், பாடு சேர்தர வீற்றுக் காணிக்கைப் பணமி லாங்க லிக் காய்கு றைந்திடா, நாடு தந்திட வாங்கி யுற்றதே நண்ணு மற் புதத் திஃது மொன்றதாம், பீடு ளார்கள்சொற் சைவ நீணெறிப் பேசு நற்படைப் பிட்டு வந்ததே. ங

## வே று.

ஐய மேற்றுள வன்னமே
பொய்யில் சீர்திகழ் புண்ணியன்
கையி னூற்றரல் கண்டுகா
லுய்ய நோற்றவ ருண்பரே. ச

மண்டு பேதக மாற்றியே
யுண்டு நோயை யொழிப்பர்மெய்த்
தொண்டு சார்வர் துயர்க்கடல்
விண்டு பூவில் விளங்குவார். ரு

## வே று.

ஆனவி வறத்தினிட
வீனமி லகத்திமுடி
போனக நல்வெற்றிலைகள்
சேனைய ரளித்தனர்கள். சு

மற்றதை நிறுத்திவிட
முற்றும்வினை வற்றுவிட
நற்றவனை யுற்றவகை
சொற்றருளை மெச்சினரே. எ

வேறொரு நிலத்தினிடை
வீறுபெறு வித்தகன்சொல்
லாறினி லமைத்துவினை
வேறமகிழ் வுற்றனரே. அ

## வேறு.

ஒருகூவ றளிக்கு வலத்தமைக்கப்
பெருகால மிருந்து பிறங்கியிடத்
திருகாது சிறந்துயர் கங்கையுற
வருகாதன் மிகுத்தன மாநகரே. கூ

## வேறு.

அடக்க மொன்றுகான் மனச்செய லருந்தவ முளதாற்
றடக்க மிங்குறு மௌனமனை தன்முக நோக்கி
முடக்க மின்றிநீ யயிற்பணி யறமிவை முயறி
தடக்க வின்வனஞ் சென்றுமீள் குதுமெனச் சாற்றி. க0

பலவ ளங்களும் நிறைந்துசே ணுடரும் பாவு
கலமி ணங்குரை கிளிகளா னிறைந்திடு கான
நலம்வி ளங்கிடு மொக்கநின் றுன்பொற்றை நாடி
பலமி குந்தனி நிட்டைகற் புடையினிற் பயின்றான். கக

பொங்கு நீள்புனற் சுனைக்கரைக் கடுத்தகற் புடையிற்
றங்கி யாதன பதுமத்திற் சமாதியிற் சார்நாட்
டிங்க ணீள்குடைச் செம்மல்சொக் கையம்பதி திகழ்வோன்
பொங்க நீடிய வேட்டையுஞ் செயல்களும் புகல்வாம். க௨

வினைத ரும்பொருட் சிறப்பினால் விளங்கியோங் கியதாய்
வனைகொ ளுஞ்சிலை மாரவே ளனையவர் வசிக்கத்
தனைய றுந்தவ ரேத்திடத் தக்கதாய்த் தனத்தி
லளகை யம்பதி யன்னதே சொக்கைமா நகரம். கங

அந்ந கர்க்கிறை வடகரைப் பாண்டிய னாகு
மின்ன யிற்றாரைப் பாண்டியன் வெள்ளைய னென்பார்
கன்னல் விற்கணை வேளனான் கனக்குறு நிலமன்
னுன்னி யற்புத வேட்டையில் வலித்தன னுள்ளம். கச

எண்ணு ரைத்தனன் மந்திரி யிடத்தினி லிசைந்து
நண்ணி டத்தகு சோகரி கரையிவ னாடி
மண்ணி னிற்பல துடியிய முழங்கிட வருமா
றண்ண னற்பணி யறைந்தன னடைந்தன ரவரே. கரு

கலைக்க னந்தனை நிகர்த்தவன் கணப்படை சூழ
நிலைக்க நந்தணி மாலனா னீடனஞ் சயனுஞ்
சிலைக்கு வந்தமன் சிறந்திடு கிளைஞன்வா ழூற்று
மலைக்கு வந்தனன் வேட்டமா டினன்மன மகிழ்ந்தான். கசு

பின்ன ரோர்பக லொக்கநின் றான்மலை பேணி
மன்ன னீள்படைப் பாண்டியன் வனவிலங் கொறுத்துத்
துன்னி யாடிய வேட்டையாற் றாகமிக் கோங்க
வின்ன றீர்புன னேடிட விசைத்தனன் பலரை. கஎ

தேடி னார்பலர் களும்வந்து தெரிந்தில நீரை
வாடி டாவகை நதிசெல லாமென வகுக்க
வோடி யோர்மகன் வந்துசொற் றான்சுனை யொன்று
நாடி னேனதின் சுவையணி நவிலள வன்றால். கஅ

என்ன வோதனு மெழுந்தகன் சுனையரு கெய்தி
மன்ன னாடினன் சொற்றவா றிருப்பதான் மகிழ்ந்தே
யன்ன நீரைவெப் பகன்றிடப் படையுட னருந்திப்
பின்னர் நீள்பொழி னோக்குவான் பெயர்ந்தனன் பெயர. க௯

கற்பு டைக்குளோ ரருந்தவ னிருப்பதாக் கண்டா
னற்பு தத்தொடு மப்பரா னந்தனென் றயிர்த்தான்
பொற்பு றத்தெரி வாயெனப் புகலமேவார் மகனுஞ்
சிற்ப ரத்தினை நாடுவோர் திருமுகந் தேர்ந்தான். உ0

தேர்ந்த வம்மகன் ஞானியா மெனவுரை தெரிக்க
வோர்ந்த வண்ணலு முளமகிழ்ந் தோடிமுன் னுற்றே
யார்ந்த வன்பொடு மடிமலர் மீதுவீழ்ந் தருவி
சார்ந்த கண்ணனாய்க் கரங்குவித் தஞ்சலி சமைத்து. ௨௧

தோத்தி ரச்சொலைப் பலசொலி நின்றிடத் தூய
காத்தி ரத்தனி முனிவனை யிரண்டகி கவித
னேத்தி ரத்தினிற் கண்டுவாய் வெரீஇயிட நின்ற
மாத்தி ரத்தினி னிட்டைவிட் டருந்தவன் மலர்ந்து. ௨௨

பயமும் பத்திபு மேவிய மன்னன்பாற் பரிந்து
தயவுஞ் சித்தமுங் கொண்டப யத்தமுந் தந்து
வயமுண் டுத்திகொ ளாகங்கா ளகல்கென மறைந்த
வியமுன் கொற்றவன் வணங்கினன் மீண்டிவை விளம்பும். ௨௩

சஞ்ச லந்தனை முன்னனா னடைந்திடுஞ் சமையத்
தஞ்ச லென்றிர வென்கன விடைகுக னறைந்த
செஞ்சொ லின்படி சென்னிநின் றிருவடி சேர்க்கக்
கஞ்ச வண்கர மூவிரற் காட்டினை கண்டேன். ௨௪

அறியி னின்குறி மார்க்கமும் மதியினி லரசை
நெறியி லின்புற வடைந்தன னருட்டிற ளிகழ்வாற்
சிறிய னின்றள வெனதுநீள் சென்னிநின் சீரார்
வெறியு ணன்மல ரடிதொழப் பெற்றிலேன் மேலோய். ௨௫

இன்று நான்முனஞ் செய்தவப் பேற்றினா லினிமை
துன்று நாண்மலர்ச் சேவடி சூடிநீர் சூழ்ந்தேன்
வென்றி நீண்முர சதிருறு வேந்தென மிளிர்ந்தே
னென்று மாமுனி சிவிகையி னூர்வர விரந்தான். ௨௬

இரந்த வேந்தலி னெழின்முக நோக்கிநீ யேகுன்
பரந்து நீண்டபா ரகத்தினிற் பலவளம் பயின்று
நிரந்த தாந்தனி நன்னகர் நிகழ்த்துமேழ் நாளிற்
சுரந்த மாண்புடை யன்பமேசர் குவனெனச் சொற்றான். ௨௭

சொற்ற வாசகங் கேட்டுள மகிழ்ந்தவன் றொடர்ந்து
முற்று தானையோ டணிநகர் முடுகினன் குறுமன்
செற்ற மேயிலா வையனு னீணகர் சென்று
சுற்று நேயர்க்கும் பன்னிக்குந் தயைமிகச் சுரந்தான். ௨௮

பின்ன ரையனும் படர்ந்தனன் சொக்கமா புரியை
மன்ன னெய்தினி னடிமலர் பணிந்துதன் மனையிற்
றுன்னி யையரி யாசனத் திருத்திநற் றூய
வன்ன நெய்யொடு மளித்துப சரித்தனன் மகிழ்ந்தே. ௨௯

உண்டெ ழுந்தபி னூர்செல லுடுவ துணர்ந்து
வண்ட றைந்திடு தொடையலான் மலரடி வணங்கித்
தொண்டி ணங்கிட வேற்றிவ ணுறையெனத் தொழவுங்
கண்ட ருந்தவ னடிக்கடி யான்வரல் காண்பாய். ௩௦

எனவு ரைத்துமிக் காசியு மீந்தன னெழுந்தான்
கனமி குத்தமா ளிகையுடை நீணகர் கண்டா
னனம ருத்தநல் லகமகிழ் தொண்டரை யடைந்தான்
முனமு ரைத்தவா நிகழ்ந்தன போம்வரு முறையே. ௩௧

## வே று.

இன்னண நிகழ்தரு நாட்களி லோர்நா ளெட்டைம னிட முறை புலமையின் வல்லான், கன்னலி னமுதுகு சொற்றரு கவி ஞன் கடிகைமுத் துப்புல வோன்பொழி றிகழ்ந்து, சென்னெ லின் மணியுகு சொக்கைய நகர்வாய்ச் சேர்ந்தன னரசனு மவ னொடு முறைகாற், பன்னரு முனிவரன் வந்தன னதனைப் பணி வொடு சேவகன் பகர்ந்தன னிறைமுன். ௩௨

## வே று.

வந்த தவமுனி பாலிறை மிகவுள மன்றன் மகிழ்வொடு நீளடி மலர்மிசை, வந்த னைபுரிய வாசித ருமவனை மைந்த னரி யணை மீதுறை பெறுமுறை, தந்த மகிமைபொ ருதக டிகைநகை தங்க விழிகொடு நாடின னிவன்மனை, நந்து தயவொடு நீறணி யவுமன நன்று தருகுதி நீயென வரவமே. ௩௩

## வே று.

வீரநீள்கல மாறியேகர மீதிலேயிட வென்றபோ
தாரமார்பன தேசெய்தானய மாரநேர்வயி றுண்டுமேன்
மாரயானவ ணேகுவேனென மாலும்வாயிலில் வந்துமா
றீரவேதொழு தேகமாமகிழ் சேரமீள லு மன்பினே. ௩௪

## வே று.

மன்னை நோக்கி வரைவன் கடிகையா
னன்ன வோர்பர தேசியு மாரென
வின்ன றீர்க்கு மெழிற்குர வன்னென்றான்
சொன்ன வாசகந் துய்த்துச் செவியினே. ௩௫

மானி லத்தினி லேபட்ட வர்த்தனர்க்
கின மித்தகைப் பேய்மதி யென்றனு
மோன முற்றவர்க் கிச்சொன் முரணொ
வேன கைக்கரத் தேந்தல் விளம்பினான். ௩௬

ஈவ தீந்துவி டுத்தபி னிக்கவி
யாவ தோர்ந்தில னாயினுஞ் செல்வழி
தாவி லாண்டகை தன்னைப்ப ழித்துள
பாவம் வாய்ந்திடக் கன்னம் பருத்ததே. ௩௭

ஊரில் வந்து மருந்ததி லூட்டியும்
பாரில் வெந்துயர் புற்றுப் படுத்தலாற்
றாரி லங்கியற் சங்கரன் கோயின்மு
னேரி லங்குப சித்தன னித்தமே. ௩௮

கூறி னாள்கன வில்வந்து கோமதி
யாறு மாமுகன் செந்தி லடைகென
வீறு மாகவி வேண்டிவந் தவ்விடை
யீறி லாதவற் கன்பை யியற்றினான். ௩௯

வீர வாகுவை வேலற் குரையெனாத்
தேற நீள்கவி செப்பியுந் தீர்ந்தில
னாரி னேடு நவின்றுஞ் செலாமையால்
வாரி யூடுயிர் மாய்த்திட வெண்ணுநாள். ௪௦

எண்ண றிந்த வெழிற்குக னற்கனாக்
கண்ண டைந்து கடிகையன் முன்புநீ
பண்ணொ டுஞ்சொலும் பாவிற் கிரங்கின
முண்ண டுங்குபுற் றோட வுரைக்குதும். ௪௧

பொய்யி லாதமெ யன்பு பொறுத்துளான்
வையமீ தென்னை மன்னு முளத்தினன்
கையி னேற்றது மெற்கெனக் கண்டவ
னைய னாமப் பரானந்த னாகினோன். ௪௨

அன்பன் றன்னை யிகழ்ந்தனை யவ்விகழ்
வின்பஞ் சிந்த விணைந்தது புற்றெனத்
துன்பங் கன்றவத் தூயவன் கையனந்
தின்பங் குண்டிடிற் றீருமென் றுனரோ. ௪௩

கண்வி ழித்தனன் கந்தன் கருணையைப்
பண்வ ழித்தொகை பாடின னாடினா
னெண்ம திக்கு மியலப்ப ரானந்தன்
றண்ம லர்க்கழல் சார்ந்திட வந்தனன். ௪௪

நன்மை நண்ணிடச் சித்ரந தியிடைத்
தன்மை யின்ன றவிரப்ப டிந்தனன்
கன்ம மும்மிறு காலப்ப ரானந்தன்
றன்ம நன்னிலைத் தாள்பணிந் தானரோ. ௪௫

அடிவ ணங்கி யருவிக்கண் காட்டினா
னொடிவி றுன்ப மொழித்திட வுன்னினான்
படியி னெங்கு மலைந்தயர் பான்மைய
கடிநி னெண்கொ ளகந்தைக் கருத்தையே. ௪௬

கந்த னோதக் கருதிவந் தாயினி
பந்த மானவி யாதி பறந்திடு
மிந்த மாநக ரார்க ளிடுமனஞ்
சந்த நீடிசை யாய்கொள்ளத் தக்கதே. ௪௭

என்னக் கூற விணையடி சூடினான்
உன்னிற் சாரு முயர்மறை யின்பொருண்
மன்னித் தேரி லடியர் வணங்கிறை
தன்னிற் கோடி மிகுந்த தகைத்தரோ. ௪௮

ஆத வன்றரு சூட்டினை யாற்றினா
மோது மம்புவி மொய்யருள் வெய்யிலாற்
காது கின்றது தாங்கலர் கண்டும்யான்
பேதை கொண்ட மதியினைப் பேணினேன். ௪௯

வெண்ணி லாமதி சூடி வெறுப்பினா
முண்ணி லாமதி யோதுதொண் டர்சின
மண்ணி லாரு மருவன்மி னென்பதற்
கெண்ணி னானு மிதற்கொரு சான்றரோ. ௫௦

விலங்க றன்னை யெடுத்து வெறுப்ழை
யிலங்கை மன்னுக்கு மின்னருள் செய்தவா
கலங்கன் மன்னு கடையனென் மீதினா
நலங்கொ ணன்னயப் பார்வையை நாட்டென. ௫௧

கடிகை சொற்றது காதினி லேற்றனா
மிடிய றுக்கும் விபூதி யளித்தன
னடியர் பிச்சை யனமுங் கொடுத்தனன்
கொடிய ருக்கு மருள்வர் குணத்தரே. ௫௨

அன்னம் பூச வகன்றது புற்றுநோய்
மன்னும் பானுமுன் மாறு மிருளெனப்
பன்னும் பூசனை மூன்று பகற்செய்து
மின்னும் பாவுரைத் தான்முனி மீதிலே. ௫௩

அப்ப ரானந்த னானந்த மாலையென்
றெப்ப வோர்பிர பந்தமு னாற்றினான்
றப்பி லாதொகு வாரந்த ணந்தபி
னப்ப னாண்மலர்ச் செம்பொ னடிதொழா. ௫௪

விடையுங் கொண்டு விரைந்தனன் சொக்கையி
லடையுஞ் சிங்க வரசன்முன் னேநிகழ்
நடையுந் தங்கலி தீர்முனி நல்லருட்
கொடையுஞ் சங்கமுங் கூறி மகிழ்ந்தனன். ௫௫

ஏந்தல் பாற்பரி சேற்றுக் கடிகையன்
போந்த மாவெட்டை நன்னகர் புக்கபின்
சார்ந்த நாதன் முனியிடைத் தங்குவா
னீர்ந்த தாலகத் தெண்ண மிறைக்கரோ. ௫௬

மன்ன னெண்ண முனியு மதித்தனன்
கன்ன னண்ணுசொக் கைப்பதி கண்டனன்
மின்ன னன்முடி வேந்தன் வணங்கிடப்
பன்ன லின்னுரை யாசி பகர்ந்தனன். ௫௭

## வே று.

இகபரப் பேறு வாய்க்க வெழின்மறை யுபதே சத்தாற்
றகவுடைத் தீர ஞான தார்முடி மன்னன் றன்பா
வகமுறப் பதியச் சொல்வா னப்பரா னந்த ஞானச்
சுகநிலைப் பொருளை யீண்டுத் தொகுப்பதற் கெடுத்துக்கொண்டாம்.

விண்மதி சூடி ஞான்றன் மிளிர்மல ரடியி னித்தந்
தண்மலர் தூவி யுண்ண றழையறு கானுக் கூட்டல்
விண்ணமர் பானு மூர்த்தி மேவுவந் தனையுண் ணுங்கா
னண்ணுகை யாரு மன்ன நல்கிடன் மெய்க்கு நான்கே. ௫௯

இன்னுரை யாவர் மாட்டு மியம்புத லெழுத்தஞ் சோத
னன்னய மேவு மேனு நலிதுயர் நீங்கு மேனு
மன்னிய வாய்மை போற்றல் வாழ்த்தருண் டரைநற் றேவை
யின்னவை நாலும் வாக்குக் கென்றனன் றவத்தின் மிக்கான். ௬0

பெற்றவர் குரவர் தெய்வம் பேணிடு மன்பு சீவர்
முற்றநின் னுயிர்போ லெண்ணு முறைமையாங் கருணைசொல்லா
றுற்றனன் னிறைசெய் நிட்டை யுஞற்றுத லென்ன மூன்றுங்
கற்றவ ருரைசெய் யுள்ளக் காரிய மாகு மென்றான். ௬௧

இப்பதி ஞென்று மாரு தியற்றுதி யறிவும் வீடுந
தப்பற வொன்று மீது சத்திய மென்றான் றன்னை
முப்படி யன்பிற் சுற்றி மொழிவழி யென்று தாழ்ந்தான்
கைப்படு நெல்லி போலக் காட்டுவா னிருத்திக் கூறும். ௬௨

அன்புநீ செலுத்த லோரா யன்புநீ செலுத்து கின்று
யன்புநீ கொள்ளச் செய்தா லன்பணு மன்றி யில்லை
யன்புநீ செய்யாய் செய்தா னன்பனென் றறிந்தத் தேசை
யன்புநீ செயவ கண்ட வன்பதாய்த் திகழு மென்றான். ௬௩

அங்கிலை நிட்டை கூடி யாசனு மகிழ்ந்தா னெட்டோர்
முன்னவ னுற்று வாழ மூன்றுநாட் சென்ற பின்னர்
மன்னவ னெற்கொள் வேலோன் மாசிமா மகத்துக் கேக
மின்னெழின் மிக்க கற்பின் மெல்லிழை சுற்றத் தோடும். ௬௪

சேனைகள் சூழச் செந்திற் செல்லுவா னெட்டோர் வந்து
ஞானமெய் நாதன் செய்ய நாண்மல ரடியிற் றாழ்ந்தான்
றானைக ளாய மெங்குந் தங்கின கிளைசேர் பூவிற்
கானமர் தாரு வார்ந்த காடெனப் பொலிவு காட்டி. ௬௫

மிகைப்பெருக் குறுகோச் சூரன் மேற்றிசை வீழ்ந்த பின்னர்
நகைக்கவிப் புலவர்பாடு நறுஞ்சுவைக் ககம்வேம் புல்லர்
திகைத்தழுக் கறுத்துப் பாறச் செந்தமிழ்க் கன்பார் வேந்தன்
பகைத்துருத் தழல்செய் நோக்கிற் படர்ந்தது செக்கர் மாதோ.

வில்லமர் பரிதிப் புத்தே ளேகினன் விரைந்து பாரில்
வல்லிருள் வளைந்து கொண்டு மன்னர சாளுஞ் செய்கை
யொல்லுறு புலவர் கூடி யொழிந்தபி னிழிந்த புந்திப்
புல்லவ ரவையை யாளப் புக்கது போன்ற தன்றே. ௬௭

நிறைந்தபே ரறிஞர் தம்போ னிகழ்பவ ரோடுங் கூடிக்
குறைந்துளார் வந்த போதுங் கூட்டிடுங் கொள்கை யேபோன்
றுறைந்தபா ரிருளைக் கோரு தொளிகெடா தினத்தோ டொன்றிச்
சிறந்தவா னுடுக்க டோன்றித் திகழ்ந்தன விரவின் மாதோ. ௬௮

வெங்கதிர்ச் செல்வ னின்றித் தங்கிருள் பாக்கும் வேலைத்
தங்குவிற் கணங்க ணீக்காத் தன்மையாற் றிங்கட் புத்தே
ளங்கெழில் சிறக்க வந்தா னவையிற்போ தகன்சொ னிற்பப்
புங்கவற் கினிய கூற்றூற் புகழ்மணப் பிப்பான் சொற்போல். சூகூ

விண்டொடு பொழிலின் மொய்த்தார் வேடனு நாரி யென்றும்
வண்டெனக் கோட லாலே மற்றத னொருமை யாய்ந்து
கண்டுநன் னூரிநாமங் கனுலுறு மகளி ரெல்லா
மெண்டகை தேறலாக வினமது கரங்கள் போல. எ0

ஒருமுறை யுண்டு கொஞ்ச முழன்மனத் தையல் பின்னும்
பெருமகிழ் வோடுங் கொள்ளப் பிரசஞ்சேர் வள்ளம் பார்த்தா
டருவிர லாழி மாறத் தானல வேறென் றோர்ந்தா
ளிருமழை யோட வோடு மிந்துவென் றறிவார் போல. எக

பாங்கிய ரிருவர் கட்பெய் பாத்திர மொன்றை நோக்கி
யாங்கவர் தம்மி லோர்பெண் ணளிமிகு வள்ளத் துள்ளே
வீங்கிய மழையுந் திங்கள் விளக்கமுங் கண்டே னென்று
டேங்கிய மதியாண் மற்றைச் சேயிழை யிரண்டா மென்றாள். எஉ

நிறைமது வள்ள நோக்கி நிழற்பெணை வினவி யோர்மா
துறைகல னறையை வார்த்தா ளுங்கது வழித லோடுங்
கறைமனத் தவளாய்த் தேனைக் கான்றனை மதியி லாயென்
றறைபவ ளாகித் தாளா லகங்கரித் துதைத்தா ளம்மா. எங

நலத்தமின் சிலைக்கு நேரு மிடைநுத னூரி யோடு
முலத்தொடும் பகைத்த தோளா ரொலிகழற் காளை யன்னு
ரிலத்தடைந் திசைக்கு மார னியற்றுநூன் முறையு ணர்ந்து
கலத்தலும் புலத்த லுனுங் கழறுமா வெடுத்துக் கொண்டாம். எச

## வே று.

பந்த லாமுலை யோதியர் பண்மொழிந் ததற்பின்
சந்த லாதுறு கணவரைத் தழுவிட வவர்செய்
நந்த லார்கல விப்பெரு நகையினு லணிபூச்
சிந்த லான்மதி சிந்தின ராடவர் தெரியார். எரு

தீப மிட்டெனப் பொலிபணி சிலம்பொலி யடங்கச்
சாப மொத்தநெற் றியர்தரு புள்ளொலி சாரப்
பாய மற்றவ ரிலயநேர் பண்படைந் தவராய்ச்
சோப நித்திரை யத்தநாட் டோன்றிடத் துயில்வார். ௭௬

மஞ்ச மீதிறை யிறைவரை தாழ்த்தனன் வதிய
வஞ்ச மேயினள் நகைமன மிலனென வூடிக்
கஞ்ச நாண்மலர்க் கண்புன லுகுத்தனள் கனிந்த
தஞ்ச மாவுரை தணந்தனள் வருமட்டுஞ் சவிதா. ௭௭

மாது பாலமர் மஞ்சத்தி லொருமகன் முதனு
ளேது பேசினுங் குற்றமென் றழுதனை யெண்ணி
யோது மாறெழித் திருத்தலு மார்கொலோ வொருத்தி
யீது நீகொளச் சாற்றின ளென்றுள முனிந்தாள். ௭௮

பொன்னி லங்குறு மொருபணி புகன்றவா விழைப்பித்
தன்ன மென்கவி னடையுடை யாட்கதை யணிந்து
தன்ன கந்தரு முவப்பினின் றழுகெனச் சாற்றக்
கன்ன லஞ்சறு காலமும் பெருக்கினள் கண்ணீர். ௭௯

றென்ன லூடலா னீத்தன மிரவென நினைத்து
மன்ன னேடமர்ந் திடவணை மிசையவன் மங்கா
யென்ன தாசையை மறுத்தியோ வின்றுமென் றனனீ
சொன்ன தாயிலை யின்மொழி யெனப்பகை தொடுத்தாள்.

மருமம் நீள்புய வாடவர் மங்கைய ரிரண்டு
சரும மேனிய ராயினுந் தம்முள விசைவாற்
கரும நூலுரைப் படிசெயுங் கருத்தராய்க் கனிந்து
தரும மாதிய நான்கையுந் தகுமுறை சார்வார். ௮௧

## வே று.

கந்தமென் மலர்கள் சூடிக் காளையர் பெண்க ளோடுஞ்
சுந்தரத் துயில்கொண் டார்பின் சூட்டுடைச் சேவற் கூட்டந்
தந்தம மகிழ்ச்சி கூரத் தனித்தனி கூவல் காலை
வந்ததென் றுரைத்தை யோது மகார்களை யெழுப்பல் போலும்.

மறைமொழி யோதுஞ் சோதி மலர்தலை யுலகுக் கெல்லா
மிறையவ னலரி நாத னெழின்முகங் காணு வாற்று
ணிறைவுறு கரிய பாவ நீங்கிடச் சுற்றல் போலத்
தறையெனு மாது சுற்றித் தபனன்மு னெல்லை வந்தாள். அரு

பண்டைவந் துற்ற நீலப் பாரவிரு டவிர்க்கக் காந்தித்
துண்டவன் கடலிற் றுப்புத் தொகுத்தெழுந் தென்னப் பானு
விண்டலந் துலங்கத் தோன்றன் மிளிரும்விண் ணுருவமான
வண்டமென் றுரைக்கும் பெண்ணு ளணிநுதற் றிலதம் போலும்.

மூத்தொழி னடத்துஞ் சித்தாய் முத்தொழி லுணர்ச்சிக் கெட்டா
தெத்தொழில் களுமாற் றற்கிங் கினியதா யுயர்வாய்ச் சன்ம
வித்தொழி மனித்தர்க் குள்ளார் விமலமாய் நிலைகொண் மார்க்க
வித்தொழி பவர்க்கி ரண்டு துய்ப்பதாய் வந்தான் வெய்யோன்.

வன்மதக் கடவுளார்கண் மனிதர்க்கே களிப்புச் செய்வார்
பன்மதக் கொள்கை யீது பறவையும் விலங்கு மன்றித்
துன்மதிக் குணர்க்கு மிக்க தூயவர் தமக்கு மோகை
யின்மனத் திருத்துந் தேயா னென்றல்போல் வெய்யோன் வந்தான்.

விணிலொளிர் பரிதி தோன்ற மிகமகிழ் வுடைய ராகிப்
பணிதிகழ் சிரசு தாங்கும் பார்மன னுடனே போந்த
மணிதிக ழாவி னல்குன் மடந்தையர் மகிழ்ந ரோடு
மணிமலர் கொய்த வீரி னுடலென் றிவையுஞ் சொல்வாம். அஎ

இளந்தருக் கத்தரொப்பா ரிசைபடார் முரண வல்லா
னளந்துரைத் தடக்கல்போல வரும்பொழில் விவித வாசந்
தளர்ந்திட வொன்றற் கொன்றின் றணிநலார் சடத்தின் வாசம்
வளர்ந்திடப் புகுத வல்தின் மறைந்தது பொழிலின் மன்றல். அஅ

மிக்கவர் பொருளைக் கொள்ள விறலிலா ரிழிந்தார் கைத்தைத்
தக்கதென் றெடுத்து மீளுந் தன்மைபோன் மலர்மொய் கோட்டின்
மிக்குயர்ந் தவைகள் விட்டு விரற்கையிற் கொள்வ வாரிப்
புக்கவர் பொலன்கொ ணல்லார் பொழிலினை வறுமை செய்தார்.

சிலைநுதற் கடுங்கற் கொங்கைத் தெரிவைநாண் மலர்தந் தாளைக்
கலைபடச் சினந்து சிந்திக் காலமும் பொருளு நோக்கி
மலையிணைச் சந்தத் தோளை மார்பகந் தன்னைக் காட்டென்
றுலைவுறத் திரிந்தப் போழ்தங் குசாவின ளொன்றுங் காணாள். ௬௰

மலர்தா நடந்தா னின்னும் வந்தில னென்னப் பாங்கி
சலமது தணிக்குஞ் சொல்லிற் றணிகிலள் கதமேற் கொண்டு
பலமுறை சினந்து பேசப் பகன்முகக் கொழுநன் சார
வலமரு பூசல் செய்யா ளஃதென்கொ லறிகி லேமால். ௬௧

இணைபிரி யாத கோதை யெழிற்பொழின் மலரி னார்த்தி
யணைதா நாத னேகி யலர்கொணர்ந் திடவே விட்டுக்
கணைநிக ராலக் கண்ணா ணின்றிடக் காளை வந்து
துணைவியை யுருத்தே றானாய்த் துயர்க்கடற் குளித்தா னன்றே.

விடைநடைக் கணைவே ளன்னான் மெல்லிய லோடுங் காவின்
புடைவரப் பனிப்பூக் கொய்யப் போகுவான் வருதி யோவென்
றிடையிறத் துவளு வாளை யிசைத்தலு மிழிந்தாள் கண்ணீர்
கடையினிற் றிகொனீ யென்றான் கதமிக வாவி சோர்ந்தாள். ௬௩

பங்கய மலர்க ளாதி யணங்கமழ் பனிநீர்ப் பொய்கை
கொங்கவிழ் நானத் தாலுங் குங்குமச் சாந்தத் தாலு
மங்கடி நறைசெய் வாரா யணிமுலை மடவா ராடத்
துங்கநன் கொழுந ரோடுஞ் சூழ்ந்தனர் புறத்து மாதோ. ௬௪

புனற்றடத் திறங்க வோர்பெண் புனைகலை யொதுங்கக் கண்டு
மனத்திடத் தெழுந்த வச்ச மண்டுகம் விரைவி னோடை
வனப்புமிக் குயர்ந்த மாதை மன்னுயிர் கலங்கச் செய்ய
லெனத்தடக் காத்தாற் றானை யிழுத்தரை போர்த்து விட்டான்.

நீர்குடைந் தேறி னாளை நெடும்புயத் தலைவ னீரம்
பேர்தரும் படிசெய் யென்றான் பெண்மணி வெகுண்டு பார்க்கத்
தார்தருந் தாத்தன் பட்டாற் றண்புன றுவட்டி மாதின்
சார்வருங் கோப மாற்றச் சார்ந்தனள் சினத்தை மேலும். ௬௬

## வே று.

தூய தண்புன லாடிப்பின் கரைமிசைத் தோன்றுஞ்
சேய பங்கய மாதுறழ் தேவியை யடுத்து
நாய கன்மதி முகத்தினை நாடினு னுற்று
வேயெ னும்புயக் காரிகை மிகவுள மகிழ்ந்தாள். ௯௭

வேலை யொத்தக றடத்தினில் விளங்கிழை மாதர்
மாலை யொத்ததிற் குடைந்தெழ மல்கிரு ளளக
நீலை யொத்தமை மேகமந் நீள்புனல் பருகுங்
காலை யொத்தலைக் கண்களாற் களிப்புறக் கண்டார். ௯௮

## வே று.

ஆனவிவ் வேளை தன்னி லணிநகர்ச் சொக்கை மன்னன்
மோனமெய் நாதன் முன்பு மும்முறை வலஞ்செய் தேத்தித்
தானைக ளோடு செந்திற் சார்தர வெழுதல் வேண்டிக்
கானமர் பாதஞ் சாத்தக் கரைந்தனன் சிவிகை காட்டி. ௯௯

ஏறிடச் சிவிகை வேண்டே னேகுவன் முன்பு கொம்பின்
மாறடற் குரிய கைம்மா மன்னநீ சிவிகை வாவென்
றுறிடைப் பெருவா னேங்கு மருந்தரு நிழற்கீ ழுற்றான்
கூறுமெய்ப் புகழ்க்கோன் பின்பு கூடினான் றளங்க ளோடும். ௧00

வழியிடைத் தாக முற்று வருந்தின தானை யாவும்
பழிபடு பாலை யுற்ற பல்லுயிர் நிலைய வாக
விழிபுன னீரும் வற்றி யெங்குபோ தொருவ னேடி
மொழிநிறை மேலோ னான முனிவனைக் கண்டா னன்றே. ௧0௧

கண்டவன் மீண்டு வந்து காவலற் குரைக்க வன்னான்
மண்டணி னூன்று தாளின் வந்துபொன் னடியில் வீழ்ந்து
கொண்டவெங் கூர்ந்த தாபக் கூற்றொழித் தருள்வா யென்ன
வண்டருந் தாழ்ந்த பாத னறைந்தனன் றென்கீழ்ப் பாங்கர். ௧0௨

சென்றபா ரென்ன வேந்தன் சேனையோ டடைந்து கண்டா
னன்றுசேர் சுனைநீ ருண்டு நகைமுகத் தோடு மீள
வொன்றுதேர் முனிவ னாடி யுறுவன்முன் செந்தி லென்று
மன்றல்சூழ் கந்த வெற்பு மன்னினான் கணத்தின் மன்னே. ௧0௩

செந்திலா லயத்தின் மேவிச் சேவையன் வடிவங் கொண்டு
முந்தியா ரதிபன் றன்பா லுவகைசேர் சொக்கை மன்னன்
வந்திவா றிருநேதா ளானை வந்தனை புரிவா னனை
யிந்துநேர் பன்னி யோடு மீங்குறு மென்ன வன்னான். ௧௦௪

வேண்டுவ வமையச் செய்து வேந்தன்றன் வரவு நோக்கி
யாண்டவ னிருப்பச் சொக்கை யரசனும் வந்தான் மேலோன்
மாண்டகு செயல்க ணோக்கி மகிழ்ந்துமன் வணங்கிப் பின்னர்
நீண்டகை வேலான் கோயி னியதியோ டடைவோ மென்றான்.

சென்றுநீ வருக வென்று செப்பினன் முனிவன் மன்னன்
குன்றுநேர் சிகரி தாழ்ந்து குரைகட லாடி மின்னோ
டொன்றிநீள் கோயி லெய்தி யும்பரை நிலைக்க வைத்த
வென்றிவேற் கரனைக் கண்டே மிக்குள மகிழ்ந்தா னம்மா. ௧௦௬

சேவலங் துசத்தன் முன்னந் திருப்பிர சாதம் பெற்றுக்
காவலன் கருதி யில்லங் கண்டன னிவ்வா றாக
மாவலங் கொண்டு நாளும் வந்திடும் பவனிச் செவ்வே
ளாவலங் கொன்றிக் கூட வரசனு வணங்கள் சுற்றி. ௧௦௭

ஆறிரண் டாநாட் கங்கு லப்பரா னந்தன் மேவி
நாறுவண் டார்கொள் செவ்வே ளுதனைக் காண்பான் றோன்றி
வீறுகொண் டாவற் காவல் வீரரு நிற்க மேவிக்
கூறுதிண் டாளும் பூட்டுங் கொண்டுள கதவந் தன்னை. ௧௦௮

துறக்கநற் குகனே யென்னச் சொற்படி கதவ நீங்கப்
பிறக்கமிக் குடைய நெஞ்சன் பேணிமுன் வணங்கி யோதிச்
சிறக்கவுட் பதித்துக் கந்தன் றிருமுனஞ் செப்பி நின்று
னிறக்கவெற் குரியகால மியம்புதி யடிகே ளென்றே. ௧௦௯

இன்னமூ வெட்டுத் திங்க ளிப்புவி யிருக்குங் கன்ம
மன்னையா டந்தை தங்க ளருங்கடன் முடிக்கப் போதி
பின்னைநீ ணகரிற் பன்னி பேண்வலஞ் சமாதி யிட்டு
மன்னுமா வினைக டீர்க்க மறுமையுங் கிடைக்கு மென்றான். ௧௧௦

நந்தன துரையைச் சூடிக் கந்தனின் முனிவன் மிக்க
வந்தனை புரிய வீந்த வரப்பிர சாதம் பெற்றுச்
சிந்தனை மகிழச் செவ்வே டிருவடிக் கமல முன்னிப்
பந்தனை கதவஞ் செய்யப் பகர்மொழிப் படியே பூட்ட. . ௧௧௧

விந்தையைக் காவ லாரின் மிளிர்தவத் தொருவன் கண்டா
னெந்தையைத் தவிர வேறன் றிவ்வுரு வென்ன வோர்ந்து
சிந்தையிற் பேரா னந்தன் செல்லிடம் பார்க்கப் பின்போந்
துந்தைமற் புரவி மன்னி லுட்புகக் கண்டு மீண்டான். ௧௧௨

திரும்பிவந் தடைந்தான் வாயி றிருவிழி துஞ்சா ணாரும்
விரும்பிடுந் துறக்கத் தாளும் விடுமிவன் பெருமைக் கென்று
சுரும்பினங் குடையுங் கஞ்சத் தூமலர் விரியப் பானு
வரும்பிறங் கொளிசெய் காலை வந்தனன் மன்முன் மாதோ. ௧௧௩

மன்முன நடந்த கூறி மலரடி வணங்க வார்வ
மென்மன மடைந்த தென்ன விருவருந் திருமுன் சார்ந்தார்
தன்மகன் குறைந்த மேனித் தவமுனி தாளில் வீழ்ந்தார்
சொன்மதி முகங்கண் ணாரத் துகளறத் தெரிந்து மீண்டார். ௧௧௪

பின்னிறை மக்கட் பேறு பேணவா வுரைக்க வோரா
னுன்னிடை தக்க தாகு முறும்பணி விடைசெய் யென்றா
னென்னிசை யென்னக் கூற வேற்றக மகிழ்ந்து தேர்ந்து
பொன்னிடை தத்துங் கந்த புட்கர ணியினைச் சூழ்ந்து. ௧௧௫

மதிலது புதுக்கித் தன்னூர் மன்னவன் புகுவா ணான்
விதிமுறை யுவக்கத் தோன்றல் விளங்கிடப் பெற்றோர் கொள்ளு
மதிமகிழ் வுரைக்கற் பாற்றோ வானந்த மெட்டின் மேலா
முதிர்பெறு தவத்திற் கொண்டான் முனியடி வணங்கிச் சென்றான்.

செல்லுங்கான் முன்னீ ருண்ட செழுஞ்சுனை யிடத்திற் காணார்
வெல்லுங்கான் முனிவன் சித்தி விளைவினை வியந்தா ரெண்ணிக்
கொல்லுங்கான் மதமா மன்னன் குழுவொடுஞ் சொக்கை சேர்ந்தான்
சொல்லுங்கான் றவத்தோன் பெற்றார் தூயநல் லிருக்கை யுற்றான்.

## வேறு.

நன்றியை மறத்த னன்றல வென்ன நவின்றிடு நான்மறைப் பொருள்க, ளென்றிடி லனைக்கு மிகுத்தவ ருளரோ விதுமறந் தவர்க்கிலை வீடே, யொன்றிய வுயிர்க்கிங் கிறைவனைத் தாயோ டொப்பெனும் பெரியர்சொல் லுளதாற், றன்றிரு வயிற்றிற் சுமந் தவள் கடனைத் தவமுனி யியற்றினன் றகவே. ௧௧௮

இதத்தினைப் புரிவோன் றந்தையே யாமென் றிசைத்திடு நூல்கல்வி யிவனே, டதத்தினைப் பெறுமென் றவ்வையு மொழிந் தா ளருமறை தெய்வமென் றறையும், வதத்தினை மழுவோன் றுதைசொற் கனைபால் வகுத்தன னென்னலாற் பெற்றான், பதத்தினை யடைய மறைவழி யியற்றிப் படர்தவ முனிகடன் கழித்தான். ௧௧௯

கரும்பினி லினிய நலமொழி நுவன்று கடிகைநாள் குறிப்பி னாற் கழறி, விரும்பிய சுற்றத் தார்களை நிறுத்தி விட்டுநீ ணகரிடை யடைந்தான், பெரும்பிணி தவிர்க்கும் பிச்சைகொ ளனத்தைப் பேணிமுன் முறைபெறச் செயுநாள், வரும்பிற வியைமாற் றுயர் பகீ ரதியின் மரபினில் வந்துளா னொருவன். ௧௨௦

சங்கர லிங்கத் தனிப்பெயர் மிராசு சற்குணன் றவமுனி தன் னைப், பொங்கர வொன்று கடவுளே போலப் பொருந்திய மனத் திடை நினைப்பான், கிங்கர னென்ற நிலையுடை யவனுக் கேடிலாப் பத்தியின் மிகுத்தா, னங்கர ணின்ற செய்கையா னவன்பா லணி முனி கருணைசெய் தழைத்து. ௧௨௧

அன்னவன் விருப்ப மறிந்தருந் தவனு மரிறபு குமான்மெய் யோக, மன்னவு ணிறுத்தி யேட்டினி லுருவம் வரைந்தெழுத் தாறையு மமைத்தே, யின்னநன் னினைப்பு மறுதொழு குதிநீ யெய் திடு நலமெலா மென்றான், பன்னவ னினத்து வழிவழி வந்து பார்மிசை யின்றுமம் முளதே. ௧௨௨

தவமுனி மொழியின் வழியொழு கினனுஞ் சகலசித் திகளையு மடைந்தான், பவவினை யிலனுக் குடியர சாண்டான் பவுத்திரர் வரையது நிகழ்ந்த, துவமறு நிலையான் சொலைத்தவ றுதா டுகளி லா னிருளறுப் பவட்குப், புவனியி லுறுமெய் யினைத்தவிர் காலம் பொருந்திய தறிந்தனன் புகழோன். ௧௨௩

பெண்மணி யனையா டன்முக னோக்கிப் பேசுநி விருப்பமென் றுரைக்கக், கண்மணி நிகரக் காத்தவ டனக்குக் கருணைசெய் வது கருத் தென்றுள், விண்மணி யொளியி னணியினு டனைக்கூய் மிளிர்நுத னீற்றினை யிட்டே, யொண்மணி புனைசெய் குழவியே பணியை யுஞற்றுமுன் னிலையினி லென்றான். கஉச

இருமையின் பயனு மடைந்திட வவளுக் கெழில்விநா யகனரு ளிழைக்கு, மொருமையின் புறநீ யிலக்கியத் துறுவென் றுரைத் தலு முயிரொளி யுடன்சேர்ந், தருமையன் புடைய தொண்டர் சேர் நிலையி லடைந்தன ளவள்சமா தியினிற், பெருமைதங் குற நல் லொடுக்கத்து வலத்தே பிறங்குகை யான்முனி பெய்தான். கஉரு

வரிசையிற் கிரியை யாவையு முடித்து மகளைநன் மருமகன் றனக்கே, யுரிமையிற் கிளர வளித்தன னவளுக் கோதினு னரன் பணி யுஞற்ற, விரிநுதற் கிடையே தரித்தன னீறு விளங்கிட விவர்கள்வாழ் வுறுநாட், கரிமுகற் கடியாண் முத்தமை காலங் கடந்தது கண்டனன் சமாதி. கஉசு

ஒடுக்கத்தின் வெளியே யஃதமை வுறவு மொருவனு யதில் வசித் திருந்தான், கொடுக்கத்தன் மனமேய் வெள்ளையத் துரை யுங் குறுகின னிவன்முனங் குழைவாய், நடுக்கத்தின் விழைவே தருமவிச் சையினை நலிந்தகன் றிடச்செயுங் குருவே, யடுக்கத் துன் பிகவே கண்டன னென்று னனைத்தலம் வணங்கின னறை வான். கஉஎ

## வே று.

கல்விற் பணியிவ் விடைகண் டுறுவா
னெல்விற் களியென் மனமீ டுறுமாற்
புல்விற் பணியே துபுகன் றிடென
மல்விற் றிகணற் புயன்மா டறைவான் கஉஅ

செவ்வார் முனிமன் னவபின் புரிவா
யிவ்வா லயமீ திலெழுந் திடுவான்
றெவ்வார் தொழுவே லவனே திணமா
லவ்வா றுறுபண் பதுநன் றமைவே. கஉகூ

மன்னன் புரிவந் தனன்மா தவனும்
பன்னும் பலவா டல்கள்பண் பொடுசெய்
தன்னம் புரமோ வறனித் ததிருக்
குன்னிப் புகுகா லமதோர்ந் தனனால். கங0

## சித்திச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் சOஎ.

# பரிபூர்ணச்சருக்கம்.

தெய்வ முனிவன் வலப்பாகந் திகழா னந்த வைங்கானுந், தூய்ய வோரெண் காளிகடாந் தொக்க வுருவத் திடம்வடபான், மெய்ய னிருத்தன் றென்றிசையில் விதியே பதிட்டை செய்து பினர், செய்ய நித்த முறைப்பூசை சிறக்க நடக்க வகுத்தனனால். க

மஞ்சார் பொழில்சூழ் சொக்கைநகர் மன்னன் றனக்கு மன் பருக்கும், நெஞ்சார் நினைவோ டொளியடைய நிகழ்பொன் பூச மிதுனமதி, யெஞ்சா வன்பீர் வம்மினென வெழுதி விடுத்த திரு முகங்கண், டஞ்சா நிலைசேர் முனியடைவி னருமை காண்பார் நிறைந்தனரால். உ

மன்னன் வேண்டும் பொருளுடனும் மனைவி யுடனும் வர்க்க மொடும், முன்னந் தாழ்ந்து முனிபுகலு முறைசே ராசி தனை யேற்று, னன்னந் தாண்டுந் தடம்புனல்சூ ழருள்சேர் நிட்டைப் புரியோங்கப், பின்னம் பேர்ந்த வுளத்தன்பீர் பெருமை பெருக வெனவுரைத்தான். ந

உரைத்த முனிவ னினுஞ்சொல்வா னுயர்மன் னவன்பாற் புத்திரிபாற், கரைத்த மனவன் பினர்பாற்சங் காலிங் கப்போர்த் தொண்டன்பா, னிரைத்த விருண்மாற் றியின்வடக்கண் ணிட் டைக் கமைப்பீர் நீவிரிடம், விரைத்த வடிவே லொடுக்கமிசை மெய்யன் போடும் பணிசெய்வீர். ச

இந்த விடத்திற் பணிவிடைசெய் திடுவார்க் கெய்து மறங்க ளேலா, மிந்த விடத்திற் பணிவிடைசெய் திடுவார்க் கின்பம் பொருள்சேரு, மிந்த விடத்திற் பணிவிடைசெய் திடுவார் தேவர்க் கிறையாவ, ரிந்த விடத்திற் பணிவிடைசெய் திடுவார் முத்த ரிது திணமே. ௫

இவ்வாறுரைசெய் தெழின்முனிவ னிலங்குந் திருநீ றெடுத் தளித்துச், செவ்வா சிகளு மிகமொழிந்து திகழ்வான் குமா னிவ னென்று, மெவ்வா னவருந் துதிசெய்ய விம்மா நகா மிசையுமே னுத், தவ்வா வரமுங் கனிந்தளித்தான் றனிமே வலவன்சொல் சமையம்வா. ௬

கணித்த மறையோர் தினஞ்சொலுஞ்சங் கற்பங் கூறிக் குடைந்தெழுந்து, திணித்த புலியா சனம்விரித்துத் திசையின் வடக்கு முகநோக்கிப், பிணித்த பதுமா தனத்தின்மிசைப் பே ணிச் சின்முத் திரைக்கரத்தோ, டணித்த பலரும் புகழவிருந் தடைந்தான் மாறு வருணிலையே. எ

கண்டார் பலரும் மின்னுருநீள் ககனங் கடிதே கிடத்துதிகள், விண்டார் மலர்கள் கையிறைத்தார் விண்ணோ ரென்ன மிகமகிழ்வு, கொண்டா ரடியின் முடிவணங்கிக் குரவ னருளை வியந்தாராய்த், தண்டா மரையின் விதியனையார் சாற்று முறைநீ ராட்டிழைத் தார். அ

வேதங் கூறும் விதிப்படியே விளங்குஞ் சமாதிப் பூவுறுத்தி, நாதஞ் சேருஞ் சற்சனர்க ணற்பூ கதர்கண் மிகவமுத்த, வேதந் தீர்ந்த மனத்தினனு மிறைவன் றசநாட் பணிசெய்வித், தாதஞ் சேர்மண் டலபூசை யாற்றி யொடுக்கத் தமைவமைத்தான். ௯

வில்வா ளுடையார் புடைசூழ வேந்தன் றனது நகர்சென் றான், சொல்வா ரிசையின் புகணிற்கத் தோன்று நிட்டைப் புரி யென்றே, யல்வார் குழலார் செறிநெட்டே ரன்று முதலாய்ப் பெய ரான, தொல்வார் தமக்கு மிகப்பேரு டுறுதி யளிப்ப துண்மை யினே. ௧௦

## பரிபூர்ணச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௬௧ள்.

# காட்சிநிலைச்சருக்கம்.

அன்றுமுத லின்றுவரை யப்பரா னந்தனுக்கிங் கரிய பூசை, துன்றுமதி யானிதனி னிருத்திடுவ ரிருளகற்றித் தூய பூசை, நன்றுநடை பெறுகின்ற திடபமதிற் குழந்தைமுத்தா னந்த னுட்கொண், மின்றிகழ்செய் வருடைமதி குருபூசை விழுமமுற விளங்கு மாதோ. ௧

இன்னவகை சிலநாட்சென் றெழிற்குமர னியலருளா லீங்கு வந்து, துன்னியிரு சிறையுமட மான்மகளுந் தும்பிதரு துணையுந் தோன்றப், பன்னமரர் துதிமுழங்கச் சும்பிரமண் ணியமூர்த்தப் படிவங் காட்டிப், பின்னமற வமர்ந்தனனாற் பெரியோர்சொற் பிழையாது பிழையா தம்மா. ௨

அந்நிலையே யாவருங்கண் டதிசயிக்கத் திரமாக வமர்ந்த கந்தன், முன்னிலையே விண்ணவரு மண்ணவரு முனிவர்களும் விரும்பி யேத்த, மின்னிலைவே லவனமரு நெடுநகரத் திருப்புகழை விளம்ப யாரே, சொன்னிலையோ ரென்றாலுஞ் சிறுமதியேன் புகழ் சொல்லத் தொடங்கி னேனால். ௩

## சந்தப்பா.

தனதன - தனதன - தனதன - தனதன
தந்தத் - தந்தத் - தனதானா.

கனதன முடையரி வையர்கண்வ லையினுழ
லுந்தூர்ப் புந்திக் கடையானோர்
கருதரு முருவுடை யவவடி மலர்நினை
யும்பொற் றொண்டர்க் கருள்வாழ்வே

வனமதி லழகிய குறமக டணியுறை
யந்தச் சந்தத் தினைநாள்சேர்
வருபற வைகளதிர் கவணெறி தொனிவிழை
வுந்தத் தங்கித் திரிவோனே

முனமமர் புரியவு ணர்களிறை யுடலற
வொண்டிட் டண்கைக் கதிர்வேலான்
முடிவுசெய் தமரர்க ளகர்குடி புகவிடு
மெண்டிக் குஞ்சொற் புகழ்தாரா

யனநட மிடுபொழில் வெறியொடு புகையகி
லண்டக் கந்தத் தினைவானோ
ரதிசய முறநகர் நெடுநக ருறைதரு
மெந்தைக் கந்தப் பெருமாளே. ச

தந்த - தானன - தந்தன - தந்தன
தந்த - தானன - தந்தன - தந்தன
தந்த - தானன - தந்தன - தந்தன—தனதானா.

சங்க நீடிய கந்தர மஞ்சினை
கொண்ட னீள்குழ லந்தர மொன்றிடை
தங்க மேருவி னின்றத னம்பெறு மதிமானார்
சண்ட னோர்பொரு கண்கள டைந்தவர்
வஞ்ச மாகிய நெஞ்சின ரன்பிலர்
தங்கண் மாயையி னின்றுமு ழன்றிட றவிர்நேயா

பொங்க ராவணி யெந்தையின் முன்பொரு
சிந்தை யோடுசி ரங்குனி தந்திடு
புங்க மாமறை யின்பொருள் விண்டுள புலவோனே
புண்ட ரீகன டைந்திடு வன்றனை
யன்று வீடட விண்டவ வஞ்சகர்
பொன்ற நீளமர் கொண்டுவிண் ணன்றது செயும்வேலா

வங்க நீறுப டிந்திலர் கொன்றிடு
விஞ்சை யாவுமு ணர்ந்தவர் மிண்டர்க
ளன்பி லாதவ மண்குழு வன்றிற விறவேதா
னஞ்செ னுவரு மந்திர மங்குரை
மிஞ்சு காழிம னென்றந லந்திக
ழன்ப னுயுரு வங்கொடு வென்றிகொ ளிளையோனே

வங்க வேலையின் விஞ்சும கன்றிட
மின்கு லாவவ ளைந்தெழி றண்பொழில்
வண்டு பாடவ ருஞ்சிகி திந்திமி யெனவேதான்
மஞ்சு நேரந டந்தர மென்குயி
னின்றி யாழினி ணங்கர வம்புரி
மன்று நீணக ரந்தனில் வந்துறை பெருமாளே. ரு

தனன தன - தான தத்த - தனன தன - தான தத்த
தனன தன - தான தத்த - தன தானா.

மறையின்முடி யாதிவைத்த சிரமதனி லேபொறுத்த
மகிமைபெறு பாதனத்த னெனவோதி
மனமிளக வேதுதிக்கு மடியருள நீண்மலர்க்கண்
வளரும்வடி வேலநத்து மிழைமானூர்

நறைகமழு மாதனத்தி லுறவிசைய நீசர்புத்தி
நலிவடைய வேகடைக்க ணருள்வோனே
நடனமிடு வார்செவிக்கு மரியபொரு ளேயுரைத்த
நலமுடைய வாகடப்ப மணிவோனே

யிறைவனென மூவிடத்து மதிகபகை யேயியற்று
மிருபதெனும் வாகுகொட்டு மடலோன்மே
லிகல்பெய்கணை யேவிடுத்து விரிமகுட மேயபத்தெ
னிலகுசிர மேதுணித்த ரகுராம

னிறைமகிழ்செ யாகமுற்ற முருகமணி மாடமிக்க
நிலவுதர வாரமுத்தி னொளிதாவி
நிலைகொள்கரி தான்வெளுத்த மாரபதிகை மாவெனச்செய்
நெடுநகர மீதுத்த பெருமாளே. கூ

தந்தன - தந்தன - தனதன - தனதன
தந்தன - தந்தன - தனதன - தனதன
தந்தன - தந்தன - தனதன - தனதன — தனதானா.

வண்டினி ருங்கண நிறமிகு குழலினை
ரிந்துவு மஞ்சுறு முகவெழி லுடையவர்
வண்கதிர் வெண்டர ளவெளிவி டுபலினர் மலைபோலே
மங்கல மிஞ்சிய வணிபெறு முலையினர்
மின்கணு டங்கிய விடையின ரரவுநி
வந்து பொருந்திய கடிதட முறுபவர் மயலூனே

விண்டிட வும்புவி நகையது விலகிட
வுங்கரு துந்தம ணியவிழை வதுதவிர்
வெண்குண நன்கடை யவுமதி திகழ்தர வருள்வோனே
மென்றளி ரின்கவி னடியக ளிர்கள்பலர்
தங்களி லந்தொறு மவரவ ருடனுறை
விண்கன முண்டந ளிறமணி மிளிர்கணன் மருகோனே

பண்டைவ ருந்தம படையொடு வலிகளு
நன்றுவ ழுங்கிட வுரியவை கொடுமடு
பண்பொடு வெந்திறன் மகிடனை யுயிர்கவர் திரிசூலி
பந்தமர் கொங்கைய ளளிசர வணபவ
வெண்களி றுந்திய நகவிறை துயரது
பஞ்சன முன்செய வவுணர்க டமையழி வடிவேலா

தண்டா ளங்களை யலைகரை மிசையெறி
கின்றந லஞ்செறி நதிசுழ லழகொடு
தந்தியி னங்களி னொலிதிசை மறுகுற மறையாலே
தண்டலை யின்சுக மொழிவதை யமரர்கள்
கண்டுவி யந்திடு முழுவதி ரிடியுறழ்
சந்தமி குஞ்சவை வளநெடு நகருறை பெருயாளே. எ

---

தனதன - தந்தத் - தனந்தனந்தன
தனதன - தந்தத் - தனந்தனந்தன
தனதன - தந்தத் - தனந்தனந்தன—தனதான.

விரைசெறி யும்பற் பலஞ்சுமந்தனை
யழகுட னின்புற் றணிந்தனங்களை
விறலழி சந்தத் தனம்பொருந்திய விளமானார்
விடமுறு கண்பட் டுளங்கலங்கிட
வறிவும ழிந்திட் டறந்திறம்பிமெய்
விழைவொடு சங்கத் தெனுங்குணந்தனை விடுமாறே
யுரைதரு மின்சொற் சிறந்திலங்கிய
மறைமுடி வந்தத் திணங்கிடுந்தனி
யுறுபர மென்றத் துவந்திகழ்ந்தொளிர் விசைவாக

வுணர்வுத ருஞ்சிற் பான்றவங்களி
னடைபவர் தங்கட் கிதஞ்செயும்பய
னுதவும ரன்பெற் றிரங்குமன்பர்க டுயர்தீர

வரைபட வுந்துக் கிரன்பெரும்படை
யுடையவ னெண்டிக் கினுங்கொடுஞ்செயல்
வளரவி லங்கைத் தலம்புரந்தவன் முடிவீழ
வயமுறு தன்மைச் சரந்துரந்தல
ரியிரத மந்தப் புரஞ்செலும்படி
வழிவிடு கொண்டற் கிசைந்துளம்புகு மருகோனே

நிரைநிரை யஞ்சத் தடங்களின்புறம்
வளர்கமு கின்கட் டுளண்டசம்பொர
நிகழுளி மிஞ்சிப் பறந்துரன்றிட மயின்மேனி
நிலவுயர் மங்கைக் குரந்தளர்ந்திட
நடமிடு விஞ்சற் புதங்கொடண்டலை
நெடுக ரின்கட் சிறந்துறைந்திடு. பெருமாளே. அ

தன்ன - தனதன - தன்ன - தனதன - தன்ன - தனதன - தனதானு.

வன்னி மிசைவரு மின்னு மசமது வன்மை யொடுமுல கினர்சேர
மன்னு துயரினை யுன்னி யதுசெய வண்மை யமரர்க டுதிகேளா

வின்ன லறவிவ ரென்ன வுளமதி லெண்ணி வருடையை மயின்மான
வென்னி கருமயி லின்னெ ளிபாவ விந்தி லயவலம் வருவீரா

வன்ன முறுபவன் முன்ன டைசிறைமை யண்ணி விடவெனு மகதேவ
னந்நி லைகுனிய நிண்ண யமுறைசெய் யண்ண லெனுமொரு குகவேளே

தன்ம மிகவளர் மன்ம கிமைபெறு தன்மை நிறைவுள ருயர்நேயர்
சன்ம மறுபவர் நண்ணு நெடுநகர் தன்னி லுறைதரு பெருமாளே.

தய்யதன - தனனதன - தய்யதன - தனனதன
தய்யதன - தனனதன தனதானு.

வய்யமிசை யமரரடை யல்லறவிர் தரவடியின்
வல்லைபணி பொழுதவர்க டுயர்தீர
மல்லலுறு மசுரரிறை வில்லினொடு களமடைய
வள்ளுரமி ருதுணிசெயும் வடிவேலா

மய்யின்விழி யமுதமொழி துய்யமதி முகவழகி
வல்லிதன மருவுமிரு புயவேளே
மல்லிகைய லரிகுரவு முல்லையிவை கொடுபணியு
மல்குமுள வடியர்நிலை தருவோனே

தெய்வமறை முடிவினட மெய்ந்நுபத வினையடைவு
செய்யருளை யுதவுமொரு பெருவாழ்வே
செய்யுளணி மிசைநசைகொ ளய்யனென வுலகமிசை
செல்வநிறை தமிழைபுரை குருநாதா

சய்யமளி பொருண்முதல வைவகைபு மிகவுடையர்
சவ்வியைத னடிபணிவர் கவுமாரர்
தவ்வுதலில் கொடையுடைய ரிவ்வகைஞர் செறியுமுயர்
சைவநெடு நகரிலுறை பெருமாளே. கo

---

தாந்தன - தனனதன - தாந்தன - தனனதன
தாந்தன - தனனதன தனதான.

தேன்பெய்மொழி யுடைவர்கள் வீங்குதன முகவழகர்
தேய்ந்தவிடை துவளநட மிடுமானூர்
தீண்டியவ ருயிரினொடு மாண்பொருளை யறுதல்புரி
தீங்குமன ருறவதனை விடவோரார்

கான்பரவு மலர்களொடு சேர்ந்துனடி பணியுமதி
காண்பெறவு தவுபெரிய குகவேளே
காந்தமுறு புனமதனி னீண்டவிழி நவிமகண்மெய்
காண்பதெணி முனமுலவு மிருதாளா

யூன்பலிக ளிடுகொடிய மாந்தர்தம துளவலரி
லூன்றலில தவரைநர கிடுமேலோ
யூன்சலென வசையுமென தேண்பதிவு கொளவருளி
யோங்கமுறு மிலகுமொரு புகழ்வேலா

வான்புயலின் மணியுதிர வாங்குசிறு மியர்கவணின்
வாஞ்சையொடு மரியின்மிசை விடவேதான்
மாந்திதனி லதுகனியை வாங்கியெறி பொழிலினெழின்
வாய்ந்தநெடு நகரிலுறை பெருமாளே. கக

தாத்தாதன - தனதன - தாத்தாதன - தனதன
தாத்தாதன - தனதன தனதானு.

வாட்காலிரு விழிகொடு நாட்டாரெவ ரையுமழி
மாற்றாரணி யினர்மய றவிர்போதா
வாக்காலுனை மொழிபவர் வாழ்த்தானத்தின் மகிழ்வொடு
மாப்பேறினை யடைதர வருள்வோனே

தாட்போதினி லனுதின மார்ப்பாலுறு துதிமலர்
சாத்தாதர நிலையது தருவாயே
தாக்காவரு மசுரர்கண் மேற்கோல்விட வவர்படை
சாக்காடிசை படவிடு. ரணதீரா

கோட்பேர்தர விடுமட ரோட்பாவியின் முடியடு
கூற்றுமரி மனமகிழ் மருகோனே
கூத்தாடிய விறையவர் தீக்கால்விழி தாவரு
கோத்தேவென வுலகிசை முருகோனே

நாட்பேரெழி னவமணி யாற்சீருயர் சிகரியி
னாட்டாடக முடியொளி மிகமேலா
நாக்காயிர விருவா வேத்தாலதி வளமுடை
நாற்பானெடு நகருறை பெருமாளே. கஉ

---

தானன-தந்தத்-தந்தத்-தந்தத்-தந்தத்
தந்தத்-தனதன-தனதன-தந்தனதனதானு.

ஆரண விஞ்சைச் செஞ்சொற் றந்தற்
பொன்றிச் சிந்தைத் தனிமலர் விரிவுற
வேதியர் வந்தித் தின்புற் றுஞ்சிற்
சந்தக் கந்தத் துணையடி பரவிட
வாகம விந்தைக் கும்பற் பம்பத்
தம்பத் தின்கட் டுதிபல யிசைதர மிஞ்சியபெருவாழ்வே
ஆடல்செய் கும்பத் திண்கற் கொங்கைப்
பந்தித் தந்தத் தாளமு முடையவர்
காலணி யின்சத் தந்தத் துந்தட்
டுங்கைக் கொண்டற் கிணைபத லையிறைவி
யாரவு மெண்டிக் கின்கட் டின்சர்ப்
பங்கட் கஞ்சத் தருமிடி யெனவளர்-மந்திரமுடையோனே

பூரண விம்பத் திங்கட் கண்டற்
பொங்கச் சிந்துச் சிதமன வடியர்க
ணோர்நிலை நின்றெட் டங்கத் தும்பொற்
பெஞ்சச் சந்தித் தவனியி லடைசெய்வர்
போதமெ யுந்தச் சங்கற் பஞ்செற்
றெண்டெய்த் தந்தப் பதமன வருள்புரி யெண்குணமுள
போரிடை யண்டப் பந்தத் தின்தட் [கோவே
டும்பட் டம்பொற் சிலைதுகள் படவிரை
தானவர் மண்டைத் துண்டிட் டண்டிச்
சண்டைப் பின்பட் டிடையணி கணைவிடு
போதினின் மண்டச் சிங்கற் கண்டத்
தம்புட் கிண்டக் குலிசம துடலுற முன்பமர்பொருதீரா

நாரணி விந்தைப் பெண்சத் பொங்கக்
கஞ்சப் பெண்டப் பரையுமை மலைமக
ளாமிவர் தங்கட் குஞ்சக் ரங்கைக்
கொண்டொப் பின்பெட் பரியொடு பரசிவ
நாதனெ னுங்கர்த் தன்றற் குங்கட்
டொண்டிட் பங்கொட் டகமகிழ் மிகவளி கந்தமினுளிர்
நாதமொ டுங்கித் தங்கிப் பந்தித் [வேலா
தங்கிக் கம்பத் தினையெழு வகைபுரி
நீதிய ரங்கப் பங்கைப் பின்பற்
றஞ்சைத் தெண்டித் தவிர்பவர் விசுவனை
நாடலர் தொந்தப் பண்பிற் றுன்பற்
றும்பர்க் கும்பற் றவிழ்தவ ரகமறி வெண்பவர்பணிதா
[ளாய்

ஏரணி குண்டத் தும்பொற் குன்றுக்
குங்கட் டுஞ்செற் புதைமனை களுமுமி
டுமமு மொன்றற் கொன்றெட் டண்டத்
துந்தொத் துந்தெற் றெனவுணர் கிலர்விண
பவர் பண்டப் பண்டிப் பம்பைச்
சந்தத் தென்றத் தகியெதிர் கடுகுவ ரந்தணர்விதிநேர்
ரீரமொய் தெங்கிற் கொங்கைக் கங்குற் [வா
சந்திக் குண்டெய்த் துழலரி யடிபணி
யோலினை வென்றிப் புஞ்சக் குஞ்சக்
கண்டிச் சண்டத் திறலின ரமரென
வேகுவர் தஞ்சத் துண்டித் துங்கத்
தந்திப் பிண்டிக் கவினுறு நெடுநகர்—வந்துறைபெருமாளே.

## வேறு.

நந்தனுறை யிடம்புதுக்கிக் கற்பணிகள் காணவென்று கருதி
யிவ்வூர்ப், பந்தனைய முலையர்விழை சங்கரசுப் பையரொன்று
பகரும் வார்த்தை, நந்தவுரை குறிச்சியா பிள்ளையொன்று நல்கு
கொடை நலத்த னென்னும், விந்தைபெறு சுந்தரலிங் கப்பிள்ளை
யொன்றதிபர் மேன்மை சேர்நாள். ௧௪

சுந்தரலிங் கப்பிள்ளை யிக்குகன்மேற் பத்தியொடு தொண்டி
னின்றா, னிந்தவிடந் தக்கதல மனிதனுறை சமாதியென விழி
வாய்ப் பேசி, வந்தனனந் திடுமறையோன் சுந்தரன்செய் வான
மதிற் கிளைக்க வோர்நாள், செந்தழலின் சோதியுரு வொன்று
கண்டு மயங்கிவிட்டுத் திரும்பி னானால். ௧௫

அச்சமய மற்றிருவ ரிழிவறைய வன்னானுங் கதங்கொண்
டிவ்வா, றச்சமறு சொற்றரன்மின் னென்றுகண்ட வதிசயத்தை
யறைத லோடும், பொச்சமுறு புத்தியினர் நம்பாரா யிருக்கநனி
பொருந்திக் காண்பீ, ரிச்சகனற் றவனுறைவு நாளையான் காட்
டுவனென் றிசைத்தான் மன்னோ. ௧௬

இசைத்தில்ல மடைந்தபின ரப்பாரா னந்தனிவ னிற்பாற்
றோன்றி, நசைத்தில்லர் மற்றவர்க ணின்கணவன் றொண்டன்றா
னன்று கண்டான், பசைத்துள்ள மனமுடைய சுந்தரனைப் பார்க்க
விட னாளை யென்றே, வசைத்தெண்ணு மவர்கானான் மறைந்த
னனா லரிவையுங்கண் விழித்தா ளன்றே. ௧௭

கண்டகன வினையுரைத்தாள் கணவனுடன் மறுநாளிற்
காப்புச்செய்தா, ளண்டியிருவருமழைக்க நாளையென வீட்டிருந்தே
யறைந்தா னன்பன், விண்டபொழு தருமறையோன் வீடுவந்தான்
குறிச்சியா பிள்ளை மேவி, மிண்டுதரு மதியதனா லிலிங்கத்தைக்
கைதிறக்க விரைந்த காலை. ௧௮

மின்னைநிகர் வாள்கொண்டு வீசியது போற்கண்டான்
விழுந்த சோரி, தன்னையயர்ந் துடனோடி வீடுவரத் தனையளெதிர்
தந்தா னாசி, யின்னலுறு வாயுதிரங் கக்கவிழுந் தியன்றமட்டு
மிழைக்கு மாணை, மன்னைவெரு வியவாயு னூலினர்க ளென்ன
பட்டு மகவீட ருளாய். ௧௯

சென்றவதி சயநகரார் தெரிந்தார்பின் றிருப்பணிசுந் தரனே செய்தான், மன்றலுற நிகழ்கால வன்பரிதை மறுபடியும் வயங்கி யோங்க, நன்றமருங் கர்ப்பவக நணர்த்தமணி முன்மண்ட பங்கள் மான, நின்றபணி செய்துநெடி தாக்கினரா னீணகர்வா ணிமல னர்க்கே. உ0

சுந்தரன்செய் திருப்பணியி னிறைவினுட் சொல்லலுறுங் கொல்ல மாண்டா, மைந்துபதி னிருபதின்மே லறுபத்து நாலாகு மரிய கந்தன், வந்தமரும் விசயரெங்க பூபால சமுத்திரமாய் வழங் கப் பெற்ற, விந்தைபெறு நெட்டூரில் வந்துகுரு பூசையனம் விழைந் துண் பார்கள். உக

மகவிலார் மகப்பெறுவ ரன்னேகுரு பூசையனம் வாங்கி யுண் டார், தகவிலாப் பாவவினை யொழிப்பாரிவ் விருதினத்துஞ் சார் தொண் டர்க்குப், பகலிலா மனத்தோடு மியைவகொடுத் துண்பார் கள் பகரும் வாழ்வு, மிகவுமேய் வதுமன்றிப் பலபிணியுந் தீர்வ ரிவை மெய்மெய் மெய்யே. உஉ

இடபவிசா கத்தினங்கார்த் திகைமாதக் கார்த்திகைதை யிணைந்த பூசங், கடையில்வரா நின்றவெள்ளி மற்றவெள்ளி குரு பூசை கணித்த மூன்றென், றடையுமினுட் களிற்குடப்பால் காவடி கொண் டன்புடனே யமைத்துக் கந்த, னடிகள்பரா வியபோக ளெண்ணியபல் பேறனைத்து மடைகின் றுரால். உங

ஒளிபெறுங்கை வேற்கந்த னருளப்ப ரானந்தன் மகிமை யோவா, தளிதரும்பல் வரமுடைய நெட்டூரி னுண்மூன்றங் கமர்ந்து பூசை, மிளிருறுஞ்சீ ரிருகாலங் கண்டவரும் விழவமா விழைந்த பேருங், களிகொளுமா மனத்தினிடை னினைந்தபே றடைந்தூழி காணு வாரே. உச

## காட்சிநிலைச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் சுசுச.

## வங்கிசாவளிச்சருக்கம்.

மண்ணி லாரு மகன்மக ளென்றுரை
யெண்ணி லார வெழுதிவைத் தாரிலை
தண்ணி லாவுளச் சங்கரன் கைமுறை
பெண்ணி லேழ்முறை காட்டிய பெற்றியால். க

காலங் கூற லிலாவிதி காசங்க
ளாலங் கோர வராத வடைவென
மூலங் காண மொழிந்தவி னுன்முன்னோர்
வாலஞ் சார்முறை மாட்சியின் வாய்ந்ததே உ

### வேறு.

மாண்புபெறு மப்பரா னந்தனது
மகளேனைக்காத் தாளன் றுள்பின்
பூண்பரவு வயிரமுத்து முத்தம்மை
வடிவம்மை புகழப் பெற்ற
வேண்பகர்செய் பெண்வழியாள் சுந்தரம்மை
பெற்றவளா மிராமு வம்மை
பேண்பதியி னின்றுவரா யிவர்கள்தொண்டு
கொண்டாணிப் பெம்மா னம்மா. ௩

### வங்கிசாவளிச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௪௪௯.

## தோத்திரச்சருக்கம்.

தொடுகடல்சூற் றவனிமிசை துறந்தோ ரேத்துந்
தூயமனத் தவனுயிர்கட் கனைநேர் நேயன்
கடுவுமிழ்கட் செவியணியு மான்பா லன்பன்
காணவொணுச் சித்தியல்பு காட்டு நாதன்
கடுவனெடுத் தெறிபலவின் கனியின் சாறு
கலந்துநதி யந்தமணங் கமழ வோங்கு
நெடுநகரப் பரானந்தன் கமலப் பொற்று
ணிணைத்துவணங் கினன்வினைக ணெகிழு மாறே. க

மாணலமிக் கிசையறிஞர் குழுக்க டம்முண்
மாநிலத்தி லதிமகிமை வாய்ந்த போத
ஞானவமற் றுலகமதி லலகில் சீர்த்தி
யடைந்துய்ய வனம்பிணிக ளகல வீந்தோன்
சேணமரப் புத்தேளிர் பதியை நண்ணிச்
செல்லவெழு மதிச்சிலைகொண் மாட மோங்கு
நீணகரப் பரானந்தன் பதுமப் பொற்று
ணிணைந்துமனத் திருண்முழுது னீங்கி னேனே. ௨

மட்டேறு மலர்க்குழலாண் மதுர வல்லி
மகனாகிப் பட்டினமா மருதூர் வந்தோன்
தட்டேறு தணிந்துசொக்கைப் பதிவாழ் மன்னைத்
தகைமைபெற வுபதேசஞ் சாற்றுஞ் சீலன்
கட்டேரி ளிழிதருக்கள் ககன முற்றுக்
கதிரவனற் பரிகடமைக் கடவ வோங்கு
நெட்டேரப் பரானந்த னிலவு பொற்று
ணிணைந்துமல மூன்றகல நிலைக்கின் றேனே. ௩

அணிமெயடி யவர்கண்மன முறைபு மப்ப
னகண்டமெனும் பரநிலையி லமர்ந்த செல்வன்
றணிவெய்தி யிகல்விண்டு கடிகை சாரத்
தண்ணருள்செய் தவனைவைத் தணித்த மேலோன்
பணிமொய்முலை மகளிர்நடத் தொனியான் மந்தி
பயந்துமழை யெனமுகிலைப் பரிந்து பார்க்கு
மணிசெய்நெடும் புரியப்ப ரானந் தன்பொன்
மலர்த்தாளை வணங்கியருண் மன்னி னேனே. ௪

வையகத்து மன்னரெலாம் வணங்க வாழ்ந்து
மன்னுயிரைத் தாயெனவே காக்குந் தீரன்
பொய்யகற்று மனத்தினர்பா லன்பு செய்வோன்
பொற்பாவை யெனவமிழ்துண் டிளைப்பு நீத்தோன்
செய்யகத்து மதன்சிலைகண் மணிகள் சிந்தித்
தெண்ணிலவு காட்டுமெழிற் றிருவி னோங்கு
துய்யநிட்டை நகரப்ப ரானந் தன்பொற்
றுணைமலர்த்தா டொழுதுமனத் துயரற் றேனே. ௫

சட்டையணி வைரவங்கா பிலமா வாமஞ்
சத்தப்பி ரமவாதம் மாயா வாதம்
நெட்டையுறு விட்டுணுசாங் கியமீ மாஞ்சை
நிகழ்சமய மேலாஞ்சுத் தாத்து வைதன்
றட்டைமணி முட்டையெனப் பறவை கொண்டு
தவிர்க்கவொளி நிலவுதரு மறுகு சூழ்ந்த
நிட்டைநக ரத்தப்ப ரானந் தன்பொன்
னீளடியை நினைந்துபய னுன்குற் றேனே. ௬

பொற்றிரள்புற் கோளுள்ள மொக்க நோக்கும்
பொலனடியர் தம்மிலிசை பொருந்து ஞானி
புற்றுறநற் றவமிழைத்த புனிதன் முக்கண்
புழைக்கைமழைக் களிறருளைப் புரியப் பெற்றான்
கற்றவர்பெற் றோகையுற வளிக்கும் வள்ளல்
கணமிகுத்த வீதிகொடி கட்டி யோங்கு
மெற்றிகழ்நெட் டூரப்ப ரானந் தன்பொன்
னிணையடிக ளேத்திவினைத் தொடக்கீர் வேனே. ௭

படியின்மிசைச் சொக்கைநகர்க் கரசாய் வாழ்ந்த
பார்த்திவனுந் தானைகளு முண்ணீர் வேட்டுக்
கடியநடை வழித்தாப மாற்றக் கங்கைக்
கமழ்சுனையொன் றளித்தவன்மெய்க் கருணை நீரான்
றுடியிடையா ரினியமொழிச் சுதியைக் கேட்டுச்
சோலையின்வாய்க் குயிற்கணங்கள் பழக வைகு
நெடுநகரப் பரானந்தன் கமலத் தாளி
னிலையன்பாற் பெருவாழ்வு மன்னி னேனே. ௮

உவகையினா லன்புபா வசத்தை யின
வோரைந்து கோசமுந்தா னன்றென் றப்பா
லவதியைநே ரறிபறிவாய் நிலைமூன் றிற்கு
மருஞ்சான்றா மெனவறிமூ தறிஞன் வில்லார்
நவமணிசேர் மாடமிசை யாழ ருது
நாளுநிறை தெய்வவொலி நாத யோகத்
தவநிலைநீள் புரியப்ப ரானந் தன்பொன்
றாள்பரவிப் பவச்சலதி தாண்டி னேனே. ௯

குலவுகலன் பெறவிருந்து மணநாட் கூடுங்
கூட்டமெலாங் காணுது மறைந்து தோன்றி
யுலவுபெரும் புகழ்விளங்க வாடல் செய்தோ
னுளத்திலெழுத் தொன்றென்று மறவா நேயன்
பலவுதருங் கனிபுவியில் வெடிக்கச் சேடன்
பணமுடியின் மணியினொளி பரவு மோரார்
நிலவுநெடும் புரியப்ப ரானந் தன்பொன்
னிறைமலர்த்தா ணினைவருளும் நிலைத்த வீடே. ௪0

## தோத்திரச் சருக்கம் முற்றிற்று.

## நெட்டூர்ப்புராணம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௫௫௪.

திருச்சிற்றம்பலம்.

# அரும்பதப்பொருள்.

பாயிரம்.

௬ சோதி - ஞானம்.
௭ அப்பு இடு ஆரியத்தின்மிகு - நீர் தருகின்ற செல்வத்தின் மிக்க.
௧௨ பந்தர் - பந்தத்தையுடையவர்.
௧௬ படு - கள்.
௧௪ மா இந்து அம் மணிச்சடை - சாரூபம். பூவிந்தை - வீரலக்குமி.
௧௯ பிணிக்கும் - கட்டும். தமம் - சுழுமுனைநாடி. நலம் - நன்மை. பானல் - நீலோற்பலம். அஞ்சு - பயப்படத்தக்க. உரத்த - பலமான.
௨0 கல் - மலை. தவர் - வில்.
௨௧ முடியார் - முடியிற் பொருந்திய பூவோர் - பூவுலகத்தவர்.
௬௨ வடவாற்சோதி - தக்ஷிணாமூர்த்தி. வள்ளல் - ஞானக்கொடையாளன்.

சித்திரநதிச்சருக்கம்.

௬ பாற்கடல், பாலையும் வைத்த நாரத்தையும். வேலைசெய்பவர்க்குப் பலன். வேலாயுதக் கடவுளுக்குக் கன்னியை. இலக்குமி. மாமரம்.
௪ மாறரும் - மால்தரும். மாறுதற் கரிதாகிய. தேவேந்திரன். கன்றோடு கூடிய பசு. அன்னத்தையிடம். விசாலமான வனம், அல்லது அருவி. கமண்டலமுறும். மேகம் பூமியிலுறும்.
௪0 மாதர் - விலைமாதர். இ நல் பெருக்கம்.
௧௧ ததி - நேரம்.
௧௨ கம்மன்னன் - வருணன்.
௧௯ எல் - சூரியன்.
௧௬ ஆசு இல் நாயகன்.
௨0 கம் - மேகம்.
௨௬ நாண் - வெட்கம்; நாரி. பயம்- அச்சம், நீர். அங்கம் மடமடைதல். அம் கமடம் (ஆமை) அடைதல். அருவருத்தல் - பயிர்ப்பு. வளர்கின்ற மருக்களை வருத்துதல்.
௨௪ சே - அழிஞ்சின்மரம். எருது.
௨௬ தரம் - மலை. செயில் - நன்செய்யில்.

நாட்டுச்சருக்கம்.

௧ குன்றுதென் - குன்றுதென்கின்ற.
௮ ஆலம் - பூ. வேடனு - வேள்தனு.
௧௧ கஞ்சுகம் தரு. சோகம்-சுகம். அஞ்சு -(கசப்பு நீக்கி.) உகந்து அருந்து அன்னத்தில். அம் சுகம் - கிளி.
௧௬ மீது அவாய் அது உன்னியே சடப்பொருளுமோடும்.
௧௭ கோள் - கிரகம். குற்றம். வாள் - வாளாயுதம், வாளைமீன். தாள் - பாதம். நெற்றாள். வேளை - சமயம். மன்மதனை.
௧௧ பரிக்கு - குதிரைக்கு. சுமத்தற்கு. கோட்டை - கோட்டை. கணக்கு. போர் - நெற்போர். சண்டை.
௨௪ ஓங்கல் - மேன்மேற் சேறல்.
௨௯ அனந்தன் - நாகம். அன்னப்பட்சி தன்பேரில்.

வளைவில்-சங்கமும் வில்லும் தனுராசியும்.

உசு அலையுள - அலைத்தல் பொருந்தின. தலையின் இன் மணம் அருத.

உஅ கம் - ஆகாயம். சொல் - நெல். பாணிக்க - கண்டோர் தாமதிக்க.

உகூ சுகம் - கிளி. பிள்ளை - நாகணவாய்ப்புள்.

ௗ0 வரம்பு - வித்தியாசம், எல்லை, முறை. தரம் - சங்கு, தாரதம்மியம், பக்குவம். தத்துவம் - சுபாவம், பலம், உண்மை.

---

## நகரச்சருக்கம்.

---

க0 மக திற தொனி - மேலாகிய உதாத்த, அநுதாத்த - சுவரிதவொலி.

கஉ கொட்பு - திரிவு. இரைப்பு - இரைச்சல்.

சகூ காலாற்றட்டும் பந்து வாணி னெல்லையை விட்டுப் புவியுரு திருக்குமென்பது.

உௗ வரை - சொன்ன.

உச கோல் - இராமபாணம்.

உ௫ பதவுரை நம் - நமது. தனத்தின் - திரவியத்தின். ஆம் அசை. நந்தல் - ஆக்கம். நத்தின் - விரும்பின். ஆம்-உண்டாகும். நந்து-விரும்பு. அனத்தின் - (பசிநீக்கு) மன்னத்தில். நந்தனத்தின் - நந்தனவனத்தின் கண்ணே. பொழிப்புரை - நந்தவனத்தில் பசி நீக்கு மன்னத்தில் சமத்துவம் நிகழ்வதை விரும்புகிற திரவியப் பெருக்க மிப்படி விரும்புகிறவர்களுக்கு அதிகரிக்கும்.

உசு பதவுரை - கால் - காலத்தில். உ - சுட்டு. மாரமே - மரணமே. காலும் - தம்பமும். ஆரமே - சந்தனமே. காலும் - வாசனை கக்கும். மாரம் - குதிரைச்சாலைகள். ஏ - அசை. காலும் - காற்றும். ஆரமே - நந்தனத்தினதே. பொழிப்புரை - காலமரணமன்றி யவமிர்த்தில்லை. தம்பங்களெல்லாம் சந்தனமரமே. வாசனையை கக்கும் குதிரைச்சாலைகள். இங்கரிலடிக்குங் காற்று நந்தனத்தின் காற்றே.

உஎ பதவுரை - கா - சோலை. அல் - இருள். அம் - அழகிய. கம் - மேகம். ஏகா - நீங்கா. அலங்கம் - மேம்பாட்டில்லம். ஏ அசை. காவல் - விருந்தினரைக் காத்தல். அங்கமே - அடையாளக் கொடியே. கா - காவடி. வலம் - பிரதக்ஷணம். கம்மே - சந்தோஷமே. பொழிப்புரை - இருள் நீங்காத மேகமுடையது சோலைகள். விருந்தினரைக் காத்தலுக் கன்னக்கொடியை யுடையது மேம்பாட்டில்லங்கள். சந்தோஷத்தை யுண்டாக்குவது காவடி வலம் வருதல்.

---

## புராணவரலாற்றுச்சருக்கம்.

---

க பொருள் - வஸ்து. உச சமயம் - லோகாயதன் முதல் சாங்கியன் ஈறாய் ஜீவவாதிகள் கஉ. யோகி முதல் விருட்சார்ச்சனர்வரை ஈசுரவாதிகள் கஉ. ஆக உச. வித்தியாரண்ய சுவாமிகள் பஞ்சதசியில் கூறியவாறு காண்க.

---

## தலமகிமைச்சருக்கம்.

---

ச வெண்டளைக் கலிப்பா தளையுடைத்தேனும் மறுசீர் நிரை

தொட வேண்டாமையின் கடையடியிற் காய்ச்சீர்கள் வந்தன.

## தீர்த்தமகிமைச்சருக்கம்.

௨ காட்டும் - செய்யும்.

௪ துவந்தொலைக்குநூல் - இரண்டறக் கூறுநூல்; அத்துவிதம். துகள்-குற்றம்; நிவந்து-உயர்ந்து; அலைத்துளி- அலையிலுள்ள துளிநீர்; நீரால் - தன்மையால்.

## மூர்த்திவிசேடச்சருக்கம்.

௧ துஷ்ட நிக்கிரக மூர்த்த மென்னுங் கருணைவடிவம்.

## அப்பரானந்தசுவாமிகள் அவதாரச்சருக்கம்.

௫ பொருணல்வகை - தன்மார்த்தகாம மோட்சம்; தெருணார் - தெருள் - நார்.

௮ சங்கரி - இயங்குங் காற்று; மால் - புதன்.

௯ பத்தம் - உண்மை.

௧0 ஆஆ - ஆச்சரியம்.

௧௧ நவ்வு - நன்மை; ஐயன் - சாத்தாவெனினுமமையும்.

௧௨ அரிது - பச்சை; தாது - நரம்பு.

## சற்குருதரிசனச்சருக்கம்.

௫ எவரும் - எப்படிப்பட்டவர்களும்; உள் நிலா - நில்லாத; இது சத்திகணபதியினுருவம். கண் - மனதினிடத்தில்.

௧௨ சரவணி - தருப்பை மோதிரம்; கால் - வீசும்; திருமந்திர நகர் - தூத்துக்குடி.

௧௩ தந்து - கல்வி நூல்.

௧௪ மறை - இரகசியம்.

## உபதேசச்சருக்கம்.

௧ பயில் - சைகை; மூன்று - கர்மத்திரயம்; அறையலுற்றனன் - மனதிற் பொருந்தினன்.

௪ புந்தி - விஞ்ஞானமயகோசம்; ஆனந்தம் - ஆனந்தமய கோசம்.

௫ தூக்கத்திறன் - மூலப்பிரகிருதி; மா அர்க்கத்து இறை - சிவபெருமான் ; கா அர்க்கத்து - பொன்; அகம் - அகங்காரத்தினது; நிலை - நிற்றல், அதாவது சத்துவம். அலை - அலைதல், இராசதம்; ஒடுக்கம் - மக்கினம், தமசு.

௬ மதனுறமிகுக்கும் - பெருமையுடையவது மிகுக்கும்போது; இதன் - பயன்.

௭ மறைப்பு - ஆவரணம்; தோற்றம் - விச்சேபம்; தோற்றவருஞ் சத்தி - தோற்ற மென்னும் அருஞ்சத்தி.

௮ ஐந்து - பஞ்சபூதம்; பொது - சமட்டி; தனி - வியட்டி. ஞானமார்கருவி - மெய்வாய் கண் மூக்குச் செவி. பிந்திய குணம் - இராசதகுணம்; முந்திய பத்துடன் ரசோகுணப் பத்துஞ் சேரும்.

௯ கால்வரு மைந்து - அபானன் முதலியன; கருமக் கருவி - கருமேந்திரியம்; வாக்கு பாணிமுதலியன. பாதி - பஞ்சபூதத்திற் பாதியில்.

௧0 மாநிலை - ஸ்தூலநிலை.

௧௧ நாலிதழ் - மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், சுவித்தி, ஆக்ஞை. ஐந்தனை - சதாசிவனை.

௧௫ வலி-போராற்றல் முதலியன; மதி - மனம்.

௧௬ சதம் - எல்லாம்.

## உடனுறைசருக்கம்.

சூ வான் - பொருட்டு; காரி - ஐயன்.
கூ எந்தல்முன் - அரசன் முன்.
கக கோதகத்தில் - குற்றத்தைய கத்தில்.
கரு மோதம் - களிப்பு.
கஎ கவ்விய - பற்றிய.

## மணவினைச்சருக்கம்.

க களவாரணியம் - களக்காடு; திமிரநிவர்த்தினி - இருளக ற்றியம்மை.
உ ஏறெனுந் திங்கள் - இடபமா தம்; அது வைகாசி.
கங தணவிகந்த - நீங்குதலில்லா த; நண - நண்ண.
கஉ நவிற்றடை - நல்லில்லமான து தடை.

## நிட்டைநிலைச்சருக்கம்.

க சங்கற்பம் - கற்பனை; அம் கற் பம் - காலம்; பொங்கு அற் பு - ஆசையானது; அறன் - தர்மதேவதை.
உ. சம்-பாவனம் - எண்ணம்; சம் பாவனம் - சம்பா அரிசி அ ன்னம்; கம்பாரம் - தலைச்சு மை; அகம் - இடம்.
ங ஒல் - ஒலத்தின்கடைக்குறை; நிச்சம் - நித்தியம்; ஆறிரண் டு - துவாதசாந்தஸ்தானம் உச்சம் - ஆகாயத்திலுள்ளவ ர்கள்.
ச காசிப்புனல் - ஞானநீர்; பிரி யாதவூர் - சிவபுரி.
ரு மூன்மூன்று - நாலுபாழ்கள். தணந்து - நீங்கி; அனை - ப ராசத்தி.
சூ ஆழல் - கறையான்; வெயில் - வெய்யில்; படம் - சேலை; உடு - இடை.

எ தவறுதல் - நீங்குதல்.
கூ என்னை - தாய்.
கங அந்தமில் - முடிவில்லாத.
கசு ஒன்றி - பொருந்தி. இல்லற உறைவு.
கஅ கயமுகன் - தாரகன். கல்-கிர வுஞ்சம்.
உ0 அலர் - நீர்; செய்பூர்த்தி**- செய்கின்ற நிறைவான இட் டமிருந்த பொற்பு.
உங ஒன்மறை - ஒல் மறை; சிகன் மதி - குறைந்தமதி; பகல் - சூரியன்.
உசு கன்றதிர - வளையற்சப்தங் கேட்டுப் பயந்து.
உசூ திகழ்கட்கறையர் - திகழ்கின் ற கண்ணுகிய நஞ்சையுடை ய ஸ்திரீகள்; கலன் - வீணை.

## இல்லறச்சருக்கம்.

க தன்மவனம் - பிச்சையெடுத் துவந்த அன்னம்; உதவும் பெரியள் - தாய்.
உ மூலை - முல்லை - கற்பு.
ச மதிதாய் - மாதந்தாண்டி; அ ன்னை பெயர் - மதுரவல்லி.
ரு செவ்விது அடர் அம் தனம்.

## துறவறச்சருக்கம்.

சூ கவுந்தி - தவசி; அணிந்தது - நெருங்கியது.
எ "சர்வதயாபரிபூர்ண பாதபங் கச அருதி பிச்சை எழை யம்மா" இப்பலிக் குபதேச மந்திரம் இதிற் பிரிக்க.

## குருபரிபூரண தரிசனச்சருக்கம்.

க மாசினின்று - மாசில் நின்று; நீத்தம் - தீர்த்தம்.
உ சங்குகை - சம் குகை; சங்கு - தவத்தினை - மிகத்தினையை;

தபசை. அங்குரவரை - விதையளவு. அம் குரவர். அரி - சிம்மம்; விஷ்ணு சங்கினை - காட்டுத்தினை; இருளே. கணை - கரும்பு; கண்களை.

௩ கூடம் - இரகசியம்.

ரு நோக்கத்தால் - சட்சுதீக்கையில். புண்ணியனென்று குரவனை.

௬ பஞ்சரங்கள் - கூட்டங்கள்; கோவம் - தங்கம்; பந்தனத்தின் - கட்டினின்று; தாவ - நீங்கும்படி; பஞ்சனஞ்செய்து - அழித்து.

எ ஆய - முதலானவை.

அ எண் - பெருமை.

௧௨ வாய்மொழி - திருவாய்மொழி; காய்மொழி - கோபவார்த்தை; ஆய் - ஆராய்ந்த; தாய் - தாயினுடைய;

௧௩ அவ்வழி - சம்யோக சமவாய முதலான வழியலாதது. ஒப்பிசைக்க வொண்ணுத அந்தவழி; ஆர்ந்தான் - பரிபூர்ணமானுன்.

௧௪ அரியின் முன்** - சூரியன் முன் பூமிநேரே வருகிற மேடமாதம்; அது சித்திரை மாதம்.

௧௬ கல்லே - குமிழ்; பாவல் - பாதகுறடு; தளி - கோவில்.

௧எ தகர் - சித்திரை மாதம்.

---

## சித்தியற்புதச்சருக்கம்.

---

௩ பீடனம் - வருத்தம்.

௪ இலாங்கலி - தெங்கு.

ரு கால் - உயிர்.

எ அறத்தில் இட - தர்மஞ்செய்ய.

அ சொற்று அருளே.

௯ பெருகு ஆலம் - நீர்.

௧0 கால் - பிராணனும் மனமுமொன்ரு யடங்கும்படி செய்யுஞ் சமாதி; தடக்கம் - தடை;

௧ரு சோகரிகர் - வேட்டைக்காரர்.

௨ரு மும்மதி - மூன்று மாதம்.

௩௩ வாசி - ஆசி; மைந்தன் - பலமுடையவன். நகை-சிரிப்பு; மனே - அரசனே; அனம் - அன்னம். வரவதே - அது வந்தது.

௩௪ ஐயம் - பிச்சை; ஆர-நிறைய; மார - மன்மத.

௩௬ பைத்தியம் - பெரியவர்களென்ற பைத்தியம்.

௩அ உபசித்தனன் - உபாசித்தனன்.

௪ரு இன்னல் - துன்பம்; கால் - காலம்.

௪௬ ஒடிவு இல் துன்பம்; கடி - நீக்கு.

ரு0 உள் நிலாவு - நிலவுகின்ற; மதி - அறிவு எண்ணில் - ஆராயில்.

ரு௬ ஆல் - அசை; இறைக்கு - அரசனுக்கு எண்ணமீர்ந்தது.

ரு௯ மெய்க்கு - சரீரத்துக்குள்ள பணிவிடை.

௬0 நன்னயமேவுமேனும் - பொய்யினுல் நலம் வரல் முதலியன. உம்மை வராதென்பது கருத்து.

௬௧ சொல்லாறு - குரவன் சொல்வழி.

௬௨ குரவன் சொல்வழியைக்கூறு என்ன.

௬௩ பொழிப்புரை - அன்பு செலுத்துவது நீயறிபத் தக்கதல்ல. ஆனுலன்பையுஞ் செலுத்துகிருய். நீ அன்பைக் கொள்ளும்படி யொருவனுன்னை யுள்ளீடாயிருந்து செய்தால் நீ யன்பை யுடையவனுகிருய். அவனப்படி யன்படையச் செய்யாவிடில் நீ அன்படைவது மில்லை. நீ அன்பையுண்டாக்க மாட்டாய்.

அப்படி அன்பை யுண்டாக்கினவன் உன்பேரிலன்பை யுடையவனென்றறிந்து அந்த தேஜோமயத்தை நீ அன்புசெய்வாயாக; கண்டிக்கப்படாத அன்பு அந்த தேஜோமயமாய்த் தானே பிரகாசிக்கும்.

௬௪ திருச்செந்தூரில் மாசிமகத்தில் தேரோட்டம்.

௬௯ கூற்று - சொல்; மணப்பிப்பவன் - ஆமோதிப்பவன்.

௭௧ குறிப்பு - பிரதிபிம்பக்கையை மாறியுணர்ந்தாள் மேகமோடச் சந்திரனேடுவதாவறிவார்போல்.

௭௨ குறிப்பு - முகமுங் குழலுஞ் சேர்த்துப் பார்த்தவள் மதியிரண்டு மேக மிரண்டென்றாள்.

௭௬ புள்ளொலி - உபரிசுரதத்திலுண்டாகு மெண்வகைப் பறவைகளின் சத்தம்; இலயம் - லயம்; அத்தம் - இராவிற்பாதி நாழிகை.

௮௨ கூர - மிக.

௮௫ முத்தொழில் சூரிய கிரணத்தில் சீவருற்பத்தியும் நிலையும் அழிவும்; முத்தொழில் முதலியன; ஸ்பரிச ரூபந் தவிர மற்ற வுணர்ச்சியாலுணரப்படாத; வித்து - காரணம்; இரண்டு - பரிசம் ரூபம்; துய்ப்பு - அநுபவம்.

௮௬ தே - கடவுள்.

௮௮ ஒன்றற்கொன்று தளர்ந்திடற்றுகின்று. குறிப்பு - சமதார்க்கிகர் வல்லாலைடங்கல்போல் பொழின் மணம் மாதர் மணத்தா லடங்கியது.

௯௨ பசந்தாளென்பது கருத்து.

௯௩ வருதியோ வென்பதுங் குற்றம்.

௯௬ தலைதுவட்டி யினிய வசனஞ் சொல்லிக் கோபமாற்று வாளைப் பார்த்தபின் செய்தாயென முனிந்தாள்.

௯௭ குடைந்து சிவந்த கண்கண்டான் கோபித்தாளோ வென வுற்றுப்பார்க்க வல்லதறிந்தவனன்பிற்கு மகிழ்ந்தாள்.

௯௮ மாலை - வரிசை; நீலை - நீலநிறத்தை.

௧0௧ இழி - இழிந்த.

௧0௪ உந்தியாரதிபன் - உயர்ச்சி நிறைந்த மணியகாரன்.

௧0௯ பிறக்கம் - பயபக்தி.

௧௧௧ கம் தனின் - சிரசால்.

௧௧௨ உந்தைமற்புரவி மன்னில் - செலுத்துகின்ற அழகோடு கூடியவலியுள்ளகுதிரையையுடைய மன்னனின் வீடு.

௧௧௬ புகுவானனென் - செல்லக்கருதினவனுகி; விதிமுறைமுதலியன - வேதத்திலே விதித்த பிரகாரமான நல்லொழுக்கத்தாற்பெற்றோர்க்குச்சந்தோஷ மூட்டும் புதல்வன்.

௧௧௭ செல்லுங்கால் - செல்லுங்காலம்; கால் - காற்று; கொல்லுங்கால் - கொல்லுகின்ற கால்கள்; சொல்லுங்கான் - சொல்லப்படுகிற காடு.

௧௧௯ மழுவோன் - பரசுராமன்.

௧௨௧ கிங்கரன் - ஏவல் செய்வோன்; அரண் - காவல்.

௧௨௭ தருமவிச்சை - தரும் அவிச்சை; அனைத்தலம் - அன்னையின் சமாதி ஸ்தானம்.

௧௨௮ புல் - பொருந்தும்; இற்பணி - வீட்டுவேலை; மாடு - பக்கம்.

௧௫0 செய் - செய்யும்; அம்புரம் - அழகிய சரீரம்; ஓவல் - நீத்தல்; திருக்கு - ஞானம்.

---

## பரிபூர்ணச்சருக்கம்.

---

௨ மிதுனமதி பொன்பூசம் - ஆனி மாதம், குருவாரம், பூசநட்சத்திரம்.

ச நிட்டை - சதாநிட்டை.

எ சங்கற்பமாவது மறையோர் சொன்னபடி ஆனிமாதங் குருவாரம் பூசநட்சத்திரமென்று சொல்லியபடி ஞானியுஞ் சங்கற்பஞ் சொல்லி. பலப்பிராப்தியாவது முத்தி சித்திக்கும்பொருட்டு.

கூ பூவுறுத்தல் - அழகுசெய்தல்; பூகதர் - புகழ்வோர்; ஆதம்- விருப்பு; அமைவமைத்தான் - அமைவு அமைத்தான்.

க0 ஒல்வார் - சேருவார்.

---

## காட்சிநிலைச்சருக்கம்.

---

ச ஒண்டிட்டு.

எ வெண்குணம் - சாத்வீகம்; இலம் - இல்லம்; கனம் - மேகம்; கணன் - கணபிரான்; ஐவர் - பிர்மா விஷ்ணு முதலைவர்.

அ சுமந்தனை - மலரை; சங்கம் - கலவி; ஒளிர்விசைவாக - ஒளிர்வு இசைவாக; உக்கிரன் - பலவான்; புறம் - பக்கம் துள்ளண்டசம் - வாளைமீன்; அளி - வண்டு; உயர்மங்கை - வானலோக மங்கை.

கூ என்னிகருமயில் - எல் நிகரும் அயில்.

க0 மல்லல் - வலிமை; சவ்வியை - பார்வதி; தவ்வுதலில் - கெடுதலில்லாத.

கக காண் - அழகு; காந்தம் - அழகு; உதிரவாங்கு - உதிர ஆங்கு; அரி - குரங்கு; மாந்தி - மாமரம்.

கரு விஞ்சை - மந்திரம்; அற்பு - அன்பு; சிற்சந்தம் - சைதன்ய வழகு; விந்தை - அற்புதமான; தம்பம் - கொடிமரம்; பதலை - மத்தளம்; அல் - இரவு; சிந்து - சமுத்திரம்; கட்டு - மிகுதி; கொட்டு - கொடுக்கிற; அங்கி - தீ. கம்பம் - சுவாலை. விசுவன் - ஸ்தூலதேக வபிமானி. உம்பர்க்கும் - சொர்க்கத்துக்கும். அகமறிவென்பவர் - அகம்பிரமாஸ்மி என்னு ஞானிகள். கொங்கை - தேனை. சந்தி - பகல். புஞ்சம் - திராட்சி. குஞ்சம் - கொத்து. தஞ்சம் - பெருமை. துண்டி - மூக்கு முகம். துங்கம் - மலை. பிண்டி - கூட்டம்.

கஎ இற்பால் - மனைவிபால். விடல் - விடாதே.

கஅ மறுநாளில் - மறுநாள் வீடு. இலிங்கம் - சமாதியிலிங்கம்.

உ0 மானம் - விமானம்.

உக ஐந்துபதின் முதலியன - க0கூச-ம்வு. குருபூசை - அப்பரானந்தன் குருபூசை.

உஉ பகல் - பகுத்தல்.

---

## தோத்திரச்சருக்கம்.

---

ரு "பொங்கிவரும்பாலுண்டு, அங்க மிளைப்பாறிக் கொண்டு, தங்கப் பொம்மையைப்போல்" என்ற நந்தன்றிருவாக்கு.

கூ காபிலம் - சாங்கியத்லொன்று. தட்டை - மூங்கில்

# பிழை திருத்தம்.

## நிட்டைநிலைச்சருக்கம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| ௪௨ | ௨௨ | தூயர். | துயர். |

## பரிபூர்ணச்சருக்கம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| ௭௨ | ௧௧ | சமையம். | சமயம். |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம், |
|---|---|---|---|
| சிறப்புப் பாயிரம் | | | |
| ௪ | ௨௨ | மணிமுதல ... | ௦ |
| கெட்டூர்ப் புராணம் | | | |
| ௮ | ௧௧ | ரமொடு ... | ரொழுங்கு |
| ௧௯ | ௧௩ | மதனி ... | தனி |
| ௨௰ | ௭ | ஞ்சார் ... | மேய் |
| ௨௰ | ௨௨ | தாப் ... | தார் |
| ௨௫ | ௨௧ | களி ... | கனி |
| ௨௭ | ௨௮ | சக்கர ... | சக்கரம் |
| ௩௩ | ௧௯ | காட்டி ... | காட்டிக் |
| ௩௪ | ௨௰ | வாளி ... | வெளி |
| ௩௬ | ௨௨ | வாளை ... | வாழை |
| ௪௧ | ௧௯ | அம்மா ... | அம்பா |
| ௪௧ | ௨௧ | விட ... | விடக் |
| ௪௨ | ௨ | வழர் ... | வளர் |
| ௪௨ | ௨௧ | தூத்தவன் ... | தவன் |
| ௪௨ | ௨௨ | தாலவ் வி ... | தாலவரி |
| ௪௨ | ௨௨ | தூயர் ... | துயர் |
| ௪௨ | ௨௪ | ராந்திரு ... | ஞாந்திரு |
| ௪௩ | ௧௯ | பெகு ... | பெரு |
| ௪௬ | ௨௩ | கெடூர் ... | கெட்டூர் |
| ௪௭ | ௫ | ளின்ன ... | னின்ன |
| ௫௯ | ௨௮ | தொகு ... | தொரு |
| ௭௨ | ௯ | னென்று ... | ணென்று |
| ௭௨ | ௧௧ | சமையம் ... | சமயம் |
| ௭௩ | ௯ | சும்பிர ... | சுப்பிர |
| ௭௪ | ௫ | தாரரா ... | தாரா |
| ௭௪ | ௮ | முறநகர் ... | முறமுகர் |
| ௭௪ | ௨௪ | வின் ... | வி |
| ௭௪ | ௩௧ | கன்றிட ... | கன்றட |
| ௭௪ | ௩௨ | வளைங் ... | ளைங் |
| ௭௫ | ௧௯ | மீனுத்த ... | மீனுதித்த |
| ௭௬ | ௧௯ | பெருயாளே ... | பெருமாளே |
| ௭௮ | ௧௨ | வகைணர் ... | வகையர் |
| ௭௮ | ௨௬ | யூன் ... | யூஞ் |
| ௭௯ | ௬ | தானத்தின் ... | தானதின் |
| ௭௯ | ௨௭ | யிசை ... | விசை |
| ௮௰ | ௧௩ | வுற ... | விற |
| ௮௰ | ௩௰ | பவர் ... | ரீபவர் |
| ௮௧ | ௧௯ | றுண்டன்று ... | ஞெண்டனதா |
| ௮௪ | ௫ | துய்ய— ... | —தைய |
| ௮௫ | ௧ | துறவற ... | தோத்திர |